2641

சுவடியியல் பயிற்சி - கையேடு

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ஆசிரியர்

மு.கோ.ராமன்

சுவடியியல்
பயிற்சி-கையேடு

ஆசிரியர் :

மு. கோ. ராமன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி.டி.டி.ஐ., தரமணி,
சென்னை-600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	Cuvadi Iyal-Payirchi Kaiyēdu
Authour	—	M. K. Raman International Institute of Tamil Studies, T.T.T.I., Taramani, Madras 600 113.
Publisher & Copy right holder	—	International Institute of Tamil Studies T. T. T. I., Taramani, Madras 600 113.
Publication Number	—	48
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	May 1982
Paper used	—	18 kg. D/Demy F. White Printing
Size of the book	—	21 × 18 Cms.
Printing types used	—	12 and 10 point
Number of Pages	—	XVI + 92 = 108
Number of Copies	—	1200
Price	—	**Rs. 6/- (Rupees Six)**
Printer	—	Novel Art Printers, 137, Jani Jan khan Road Madras - 600 014 Phone : 82731
Artist		Anandan
Subject		Hand book on Tamil Manuscriptology

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி டி டி டி ஐ (அஞ்சல்)
சென்னை—600 113

முகவுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகில் உள்ள தமிழ்ச்சுவடிகள் அனைத்தையும் தொகுத்து விவர அட்டவணை தயாரிக்க வேண்டுமென்று முயன்றுகொண்டு இருக்கின்றது. டாக்டர் உ. வே. சாமிநாதையருக்குப் பிறகு தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பிக்கின்ற நிலை குறைந்துவிட்டது. காரணம் தமிழ்ச்சுவடிகளைப் படிப்பதற்கும், பதிப்பிப்பதற்கும் தகுதியானவர்கள் இன்மையே. இந்தக் குறையை நினைத்து இந்நிறுவனம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 'ஓலைச் சுவடிகளை'ப் படிப்பதற்கும், பதிப்பிப்பதற்கும் பயிற்சி நடத்தத்தொடங்கிற்று. மூன்று ஆண்டுகளாக அப்பயிற்சி நடைபெற்று வருகின்றது. அதனால் மிகுந்த பயன்கள் கிடைக்கின்றன. உதாரணமாக கேரளப் பல்கலைக் கழகத்தில் 3281 தமிழ்ச் சுவடிகள் இருக்கின்ற செய்தியை இந்தப் பயிற்சி தொடங்கிய பின்புதான் நாங்கள் அறிந்து கொண்டோம். அதற்காகவே ஒருவரை நியமித்து சுவடிகளின் விவரங்களைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறோம்.

இந்தப் பயிற்சி வகுப்புகளுக்குத் திரு. மு. கோ. ராமன் அவர்களும் சுவடிகளைப் படிப்பது, பதிப்பிப்பது பற்றிப் பாடம் நடத்துகின்றார். அவர்கள் ஏற்கனவே இத்துறையில் நல்ல அனுபவம் உடையவர்கள். அவர்களை நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எங்கள் நிறுவனத்திலேயே பணி ஆற்றுகின்றார். ஏற்கனவே உள்ள அனுபவங்களை வைத்து சுவடிப் பயிற்சிக்கு ஒரு கையேடு அமைக்கவேண்டும் என்று முயற்சி செய்தோம், அதை அவர்களையே எழுதுமாறு வேண்டிக்கொண்டோம். அம்முறையில் 'சுவடியியல் பயிற்சி-கையேடு' என்ற இந்நூல் வெளிவருகின்றது. இது தமிழ் மாணாக்கர் அனைவர்க்கும் பயன்படும். தமிழ்ச் சுவடிகளைப் படிப்பதற்கும் பதிப்பிப்பதற்கும் பயிற்சி நடத்தும் ஒரே நிறுவனம் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்தான்

ஆனால் கிராமப் புறங்களில் சுவடிகளைப் படிக்கின்ற ஆற்றல் உடையவர்கள் இருக்கலாம். அதை முறையாகப் பதிப்பிக்கின்றவர்கள் மிகவும் குறைவு. அவர்களுக்கும் இந்நூல் துணையாக அமையும்.

இந்நூலைச் சிறப்பாக எழுதிய திரு மு. கோ. ராமன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

இந்நிறுவனப் [பணிகள் அனைத்திற்கும் உறுதுணையாக அமைந்து வரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

சிறப்பாகக் குறிப்பிட்ட காலத்தில் அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

ச. வே. சுப்பிரமணியன்

பணிவுரை

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பகுதியினை மூன்றாண்டுகளுக்கு முன் துவக்கித் தமிழ்ச் சுவடிகளைப் படிக்கவும், பதிப்பிக்கவும் பயிற்சி அளிக்கப் பெறுகின்றது மாணாக்கர்கள் பாடப்பகுதியில் இதுவரை அச்சில்வராத தமிழ்ச் சுவடிகளிலிருந்து ஒவ்வொரு நூலை மாணாக்கர்கள் தனித் தனியே பிரதிசெய்து, குறிப்புரை, முன்னுரை, சொற்பொருள கராதியுடன் அச்சிற் பதிக்கத்தக்க வகையில் அளிப்பதும் ஒன்றாகும்.

கடந்த மூன்றாண்டுகளாக மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளித்த அனுபவத்திலும், அண்மையில் பலர் தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்த நெறிகளைக் கண்ட முறையிலும் உணர்ந்த சில கருத்துக்களே, எதிர் காலத்தில் சுவடியியல் மாணாக்கர்களுக்கும் சுவடிப் பதிப்பாளர்களுக்கும் உதவும் என்ற எண்ணத்தில் சுவடியியல் பயிற்சி-கையேடு என்ற நூலாக வெளியிடப் பெறுகின்றது.

இவ்விதம் ஒரு சிறிய கையேடு வெளியிடும் கருத்தை முற்றும் ஆதரித்து, என்னை இக்கையேடு எழுத ஊக்கமளித்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடாக இந்நூல் வெளிவர அனுமதித்துதவிய நிறுவன இயக்குனர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு முதற்கண் பணிவார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆர்வமுடன் இந்நூற்பிரதியை முற்றும் படித்து என் விருப்பத்திற்கேற்ப ஆங்கிலத்தில் அழகிய முன்னுரை வழங்கிய, இலக்கிய ரசிகர், மொழிவளர்ச்சியில் ஆர்வமுள்ள புள்ளி விவர இலாகா ஆணையர் திரு வி. ராமமூர்த்தி ஐ.ஏ எஸ். அவர்களுக்கு உணர்வு மூலமே நன்றியை உணர்த்துகிறேன்.

இந்நூலைத் தட்டச்சு வடிவிலேயே பார்த்துத் தங்கள் கருத்துக்களை வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, இளநிலைப் பேராசிரியர் டாக்டர் பொற்கோ இருவருக்கும், நல்ல அணிந்துரை வழங்கி என்னை ஊக்கிய, சென்னைப் பல்கலைக்

கழகத் தமிழ் மொழித்துறை தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிர மணியனுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்நூலை எழுதி வரும்போதே உடனிருந்து பார்த்து அவ்வப் போது ஊக்கமளித்த நிறுவனப் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் என்றும் உரியதாகும்.

நூலைச்சீரிய முறையில் அழகுற விரைவில் அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்' உரிமையாளர் திரு. நாரா. நாச்சி யப்பனுக்கு நன்றி செலுத்துவது உரிய கடமையாகும்.

மு. கோ. ராமன்

V. RAMAMURTHY, I.A.S.

"SRI BHAGEERATHI",
Plot No. 285, Door No. 62,
First Avenue, Indiranagar,
Adyar, Madras 600 020.
14th May 1982.

Foreword

Fine literary sense, a trained eye for orthography, and innate faculty for comparative study, and these, above all, informed through and through with a partinacious investigator's zeal such are the qualities that are required foremost in one who would read ancient scripts.

The best exemplar of these traits was the legendary Mahamahopadhyaya Sri U.V. Swaminatha Iyer. He undertook life-long the quest of searching for, locating and bringing to light, the extant but almost irretrievably lost, editions of our ancient Sangam literary classics. But for his untiring efforts there is little doubt that we stood the risk of losing for ever, never even knowing, those great treasures. In gratitude so we remember Sri U.V. Swaminatha Iyer as the Grand Old Man of Tamil.

The best literature belongs indeed to the spirit immortal. But the physical, material, base of it, is all too perishable, be it on paper, parchment or even when carved on stone. Much greater is the danger when the writing is on cadjan leaves as many of our ancient Indian writings are. While what they carry are timeless, being born of the spirit and meant to nourish and elevate the mind, the leaves themselves are frail defiers, at best, of time, because they are subject to quick decay not only through the effects of wind and weather despite the best care, but also through neglect and by becoming food for the voracity of white ants. Sri Swaminatha Iyer himself has pointed out with great regret how many a set of such leaves had fallen prey to destruction, and, in some cases, even ignorantly suffered to be burnt in domestic fires! Hence the urgent need to salvage the tens of thousands and perhaps more, of such cadjan writings and give them the security of being printed and published.

But once they have been discovered before cadjan literature can be printed, the leaves have to read right and, properly transcribed. This is by no means an easy task. It calls for a trained specialist with all the attributes I mentioned at the start, plus inexhaustible patience, energy and loving enthusiasm for the task. Sri M. K. Raman, the author of this fine monograph, is a person endowed abundantly in these respects.

Coming from an illustrious family of savants, Sri Raman is a scholar by nature and nurture. He is singularly deep-versed in the myriad love of Tamil, be it ancient literature, mythology, history, folk ways, prosodical variations, grammatical intricacy, orthographical evolution or semantic development and has had considerable experience in reading cadjan leaf manuscripts and been instrumental in bringing out the versions of many of them in print. I can thus think of hardly any one else better qualified to bring out a useful book of instruction on the art of deciphering, reading and interpreting cadjan leave manuscripts.

This hand-book is the fruit not only of Sri Raman's long experience and deep learning but also of that rare gift-a gentle, persuasive hand of helpful wisdom. He sets out the principles of the task, and shows them as they apply in actual situations. The wealth of illustrations he provides leads the reader almost painlessly into assimilation and firm grasp of the course of instruction. He also points out the pitfalls that lie strewn on the way and tells one how to avoid them. These features indeed make his book a valuable addition to the list of "technical" books that help in the study of the Tamil language and its rich literature.

The book too is of more than technical value. It should be of considerable interest as well to intelligent laymen who would like to know how a reader and interpreter of cadjan leaf manuscripts should go about his task.

Sri Raman has requested me to write my foreword in English. I agreed to do so because I believe this book and the field it covers should eventually become known as well to scholars of the Tamil literary scene who may not themselves read Tamil. It is my belief that such an introduction may induce the more ardent of them into learning the language and perhaps later even help in this field of study.

It is appropriate that this volume is being Published by the International Institute of Tamil Studies which edits and Publishes Tamil manuscripts as one of its Functions and which incidentally is the only institution in Tamilnadu to conduct a course in the reading of manuscripts.

I have great pleasure in congratulating Sri Raman on his monograph particularly because it is written learnedly, but not in a heavy academic style as to forbid all but the deeply devoted scholars. I wish him success with this venture and in all his continuing, valuable work in the field of researching and promoting the studying of Tamil.

May the Lord Almighty bless the author, Sri M.K. Raman.

V· Ramamurthy

அணிந்துரை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ் மொழித்துறைத் தலைவர் — சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ், உயர்தனிச் செம்மொழி என்பதும், முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் மொழி என்பதும், பல நூறு ஆண்டுக் காலமாக முறையே இலக்கண இலக்கிய வளம் பெற்றுத் தழைத்துள்ள மொழி என்பதும் மொழி நூலறிஞர் பலர் ஏற்றுக் கொண்ட உண்மைகளாகும்.

இவ்வாறு முன்தோன்றி வளர்ந்து வாழ்வும் வளர்ச்சியும் வளமும் பெற்றுள்ள இம்மொழியில் இன்றளவும் அச்சேறாமல் சுவடியளவில் நின்றிலங்கும் நூற்கள் பலவாகும். ஏடும் எழுத்தாணியும் வழக்கில் இருந்த காலையில் எழுந்த எண்ணற்ற சுவடிகளில் நம் முன்னோர்களின் அறிவுச் செல்வம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இவ் அறிவுச் செல்வத்தை எளிதில் எவரும் கைப்பற்றித் துய்க்க முடியாது. இவற்றை நுகரப் பயிற்சியும் ஒரு பண்பாடும் வேண்டும். அஃதின்றேல் சுவடிகளிற் சொல்லப்பட்ட பொருட்கள் பல விளங்காமற் போய்விடும்.

சுவடிகளை நாடெங்கும் அலைந்து தேடித் தொகுத்தவர் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாவர். அவர் திருப்பெயரால் ஒளிரும் அடையாறு டாக்டர் உ. வே. சா. நூலகத்தின் காப்பாளராய் விளங்கியவரும், தற்காலையில் அடையாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மாணவர்களுக்குச் சுவடி இயல் துறையில் பயிற்சி நல்கும் தமிழ்த் தொண்டினைத் திறமிக ஆற்றிவருபவருமான திரு. மு. கோ. இராமன் அவர்கள் தம் சுவடியியற் பயிற்சியும் தோய்வும் ஒருங்கே துலங்கும் வண்ணம் எழுதியுள்ள இச் ''சுவடி இயல்-பயிற்சி-கையேடு'' என்னும் நூல் தமிழ் அறிஞர் உலகு கொண்டாடத் தக்கதும் மாணவர் உலகு பின்பற்றிப் பயன் கொள்ளத்தக்கதுமான தகுதி சான்ற நூலாகும்.

இந்நூல் சுவடி இயல் துறையில் ஒரு மைல் கல்லாகத் துலங்குகின்றது. திரு மு. கோ இராமன் அவர்களின் நுண்மாண் நுழைபுலம் இந் நூலால் தெளிவாகின்றது. சுவடியியலைப் பாடமாகத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் மாணவர்க்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் இந்நூல் தமிழிற்குப் புதுவரவு என்பதில் ஐயமில்லை.

சி. பாலசுப்பிரமணியன்

டாக்டர். ந. சஞ்சீவி, எம். ஏ , எம். லிட்., டிச். டி.
பேராசிரியர் தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.

கருத்துரை

தமிழ் அறிஞர் திரு மு. கோ. இராமன் அவர்கள் எழுதிய சுவடி இயல் பயிற்சிக் கையேடு ஒன்று பார்த்தேன். மிகமிக மகிழ்ந்தேன் தமிழ் உலகின் சார்பில் மிகமிக நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

ஒரு வகையில் சுவடிச் செல்வமே தமிழ்ச் செல்வம். இன்று நாம் அரசியலுக்கும் பயன்படுத்தி ஆதாயம் தேடும் தமிழ்ச் செல்வத்தைத் தாய்போல் காப்பாற்றிக் கொடுத்ததும் கொடுப் பதும் தமிழ்ச் சுவடிகளே. கடல் கொண்டது போக கண் கண்ட தாக இப்போது கிடைக்கும் இன்பத் தமிழ் எல்லாம் இந்தச் சுவடிகள் இட்ட பிச்சைதான். இதையும் கூடப் பெரிதும் அறிவற்ற நன்றி கெட்ட தமிழ் மக்கள் நெருப்பிலும் நீரிலும் போட்டுப் பாழாக்கி விட்டனர். எஞ்சிய சுவடிகளை சி. வை. தாமோதரம் பிள்ளையும் டாக்டர் சுவாமிநாத ஐயரும் அவர்களை அடி யொற்றிய பெருமக்களும் காப்பாற்றிக் கொடுத்துள்ளனர். அந்தச் சுவடிகளையெல்லாம் மைக்ரோ பிலிம் செய்து காப்பாற்ற வேண்டியது விஞ்ஞானத்தின் உதவி கொண்டு வீண் ஆடம்பர வாழ்வுகளையும் வாழும் நம்மவரின் தலையாய கடமை.

தமிழ் அறிஞர் திரு மு. கோ. இராமன் அவர்களின் இக்கை யேடு தமிழ்ச் சுவடிகள் தரமும் உரமும் அறியப் பெருந்துணை புரியும்; மிகைகளையும் குறைகளையும் உணர உதவும்; மயக்கங் களிலிருந்து விடுதலை பெற வழி செய்யும்; அமைப்புகளை அறிய-பல்வகை பாங்குகளை உணர—துணை நிற்கும்.

இக்கையேடு காலத்திற்கு ஏற்ற கைவிளக்கு. இந்த விளக்கின் உதவியால் வருங்காலத் தமிழாய்வு விளக்கம் பெறுவதாக! தமிழ் அறிஞர் திரு மு. கோ இராமன் அவர்களுக்குப் பணிவார்ந்த நன்றி நிறைந்த பாராட்டுதல்கள்; நல்வாழ்த்துகள். இந்த நூலை விரைவில் வாங்கிப் படிப்பதன் வாயிலாகத் தமிழ் மக்கள் மேலும் மேலும் அவர்கள் இவ்வகையில் ஆய்வு நூல்களைப் படைக்க கூடும். உழைப்பே உயர்வு; உழைப்பின் உயர்வே உழைப்பவன் உயர்வு. உழைப்பவன் உயர்வே உழைப்பின் உயர்வு. உயர்வுக்கு ஊற்று—உற்ற துணை உண்மை ஆதரவு. இப்பொழுதேனும் தமிழ் மக்கள் தக்கதை ஆதரித்துத் தங்கள் தன்மானத்தையும் தலை-கலைப் புகழையும் உலக அரங்கில் நிலை நிறுத்திக் கொள் வார்களாக!

ந. சஞ்சீவி

டாக்டர் பொன். கோதண்டராமன்
இளநிலைப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம் (இணைவகம்)
மெரினா, சென்னை-600 005.

பேரன்புடையீர்,

வணக்கம்.

தாங்கள் உருவாக்கியுள்ள சுவடியியல் பயிற்சி—கையேடு என்ற நூலை முழுவதும் படித்தேன். பழைய நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடுவோர்க்கு இத்தகைய நூல் மிகவும் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நூலின் இயல்களை நன்கு வகைப்படுத்தித் தகுந்த எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் தந்து நூலை அமைத்துள்ள பாங்கு பாராட்டத் தக்கது.

பலருக்கும் பயன்படும் வகையில் விரைவில் இது அச்சிட்ட நூலாக வெளிவர வேண்டுமென மிகவும் விரும்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
பொன். கோதண்டராமன்

ஏட்டுச்சுவடியின் மாதிரி நிழற்படப்பிரதி

இது கரந்தை ஆதிவராகப் பெருமாள் மீது வருக்கக் கோவை என்ற சுவடியில் 3, 4. ஏடுகளின் பிரதியாகும்.





மேலேயுள்ள நிழற்படப் பிரதியின் அச்சுவடிவம் கீழே தரப்பெற்றுள்ளது.

ஏடு 3. இடம்பெற்றுத் தழால்

உரைக்குங் கிழிகள்[1] கருங்குயில் கூவுங்கள் ளுண்டுசுரும்
பிரைக்கும் பனிமலர் வாசங்கள் வீசுஞ்சந் தீர்ந்தரைத்துக்
கரைக்கும் பொருனைத் துறையார் வராகர் கரந்தையன்னார்
வரைக்குங் குமமுக விம்முநெஞ் சேயிடம் வாய்த்ததின்றே —5—

1 கிழிகள் - கிளிகள்; ள, ழ மயங்கி எழுதுவது தென்பாண்டி நாட்டுமரபு

ஏடு 4. வறிது நகை தோற்றல்

எல்வந் தரும்பு மணிமேக வண்ணத்தி லிந்திரவான்
வில்வந் தரும்ப வருவார் வராகர்பொன் மேருவெற்பில்
வல்வந் தரும்பு மணிமுலை யாள்வத னம்புயத்தி
லல்வந் தரும்பு நிலாப்போல் நகைவந் தரும்பியதே —7—

நூலாசிரியரைப் பற்றி பெ. நா. அப்புஸ்வாமி

சென்னையில் ஒரு சிலருக்கு எம். கே. ராமன் என்பவர்களைத் தெரிந்திருக்கும். அவர் செய்துள்ள பணிகளின் காரணத்தால் பலருக்கு அவரைத் தெரியாது. அவர் மிக அடக்கமாக வாழ்ந்து வந்திருப்பதால், எம். கே. ராமன் என்பது சுருக்கப்பட்ட பெயர். அவருடைய முழுப் பெயர் எம். கோதண்டராமன் என்பது. இந் நாளைய அந்த இராமனுக்குப் பழைய சுவடிகளே கோதண்டம், எழுத்தாணியே அவருடைய அம்புகள். ஏட்டைப் படிக்கக் கற்பிப்பதே அவருடைய இலக்கு. அவர் அந்தப் பணியை அடையாறு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமாகச் செய்து வருகிறார், எழுத்தாணியைப் பயன்படுத்த அதிக வாய்ப்பில்லாக் காரணத்தால் 'சாக்குக் கட்டியை, எழுது கோலா கப்பயன்படுத்தி வருகிறார் அவரிடம் ஆவலோடு சில மாணவ மாணவிகள் கற்று வருகிறார்கள்; அவர் இளைய வயதிலேயே கவிகளை எழுதும் திறமையைப் பெற்றிருந்தார். 'பாலகவி' என்னும் விருதை அளிக்கப் பெற்றிருந்தார்.

தமிழைப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு ஏட்டைப் படிக்கக் கற்பிக்க வேண்டுமா? இதற்கு ஓர் ஆசிரியர் வேண்டுமா? அவருடைய பணியைப் புகழ்ந்து கூற வேண்டுமா? என்று பலருக்கு அதாவது ஏடுகளைப் படித்துப் பழக்கம் இல்லாதவர்களுக்கு கேட்கத் தோன்றும். இந்தக் கேள்விகள் அத்தனைக்கும் ஆம்! ஆம்! ஆம்! என்பவையே விடைகள்.

அக்காலத்தில் மெய் எழுத்துக்களுக்கு மேல் புள்ளி வைப்பது வழக்கம் இல்லை. 'ர' என்னும் எழுத்துக்குக் கலப்பையின் உழு கோல் போன்ற கீழ்ச் சாய்வு கிடையாது. 'ஒ' 'ஓ' என்னும் ஒலிகளை மெய் எழுத்தோடு சேர்த்து உயிர்மெய் எழுத்துக்களை படைத்து வந்த போதிலும் 'ே' என்னும் சுழிபுள்ள வளைவு கிடையாது. ஆதலால் 'கொ' என்று ஏட்டில் காணப்பட்டால் அதை ஆறுவிதமாகப் படிக்க முடியும். இடத்துக்குத் தக்கபடி அதாவது, பொருளுக்கும் செய்யுளின் ஓசைக்கும் ஏற்றபடி அதை 'கொ' என்றோ 'கெர' என்றோ 'கெர்' என்றோ அல்லது 'கோ' என்றோ 'கேர' என்றோ, 'கேர்' என்றோ படிக்க வேண்டியிருக்கும்.

உதாரணமாக ஏட்டில் 'கொளம' என்று இருந்தால், அதைக் 'கொளம்' என்று படிக்கலாகாது. 'கொளம் என்னும் சொல் தவறானது. ஆகவே விதை 'கேரளம்' என்றோ 'கோளம்' என்றோ படிக்க வேண்டும்.

இவற்றை எல்லாம் தெளிவாக விரிவாக விளக்கிக் கற்பிப்பது மு. கோ. ராமன் அவர்கள் செய்து வரும் நற்பணி.

—தினமணிசுடர் இணைப்பு 25-4-82

பொருளடக்கம்

(எண்கள் = உதாரணத் தொடர் எண்கள்)

1.		முன்னுரை	
2.	I	எழுத்துமிகை	1-17
3.	II	எழுத்துக்குறைவு	18-33
4.	III	குறில்நெடில் மயக்கம்	34-49
5.	IV	புள்ளி மயக்கம்	50-70
6.	V	எழுத்து மயக்கம்	81-118
7.	VI	பாடலமைப்பு	119-137
8.	VII	பலவகை	138-150

(ஒருமை-பன்மை சந்தி மயக்கம் தளை மயக்கம் குற்றியலுகரம் விட்டிசைத்தல்)

சுவடியியல்

பயிற்சி-கையேடு

முன்னுரை

''என்றுமுள தென்றமிழ்'' எனக் கவிச் சக்கரவர்த்தி கம்பராலும் 'வானம் அளந்ததனைத்தும் அளந்திடு வண்மொழி' என மகா கவி பாரதியாராலும் சிறப்பித்துக் கூறப் பெற்ற மொழி நந்தமிழ் மொழியே ஆகும். உலகில் மிகவும் தொன்மையான மொழிகள் எனக் கூறப் பெறும் ஒருசில மொழிகளுள் இன்று பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் வளமை குன்றாது பொலியும் மொழி தமிழ் என்பதை அறியும் போது''தலை நிமிர்ந்துநில்லடா'' என்ற தேசியக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை அவர்களின் பாடல் தமிழன் ஒவ்வொருவரையும் தலை நிமிர்ந்து நிற்கவே செய்யும், இத்துணைச் சிறப்புக்களை எல்லாம் கொண்டு உலக மொழிகள் எல்லாவற்றினும் உயர்ந்த 'உயர்தனிச் செம்மொழி' தமிழ் என்பது உலக அறிஞர்கள் பலரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். இத்துணைச் சிறப்பும் இப்போது அச்சில் வெளிவந்து உலகெங்கும் உலவும் தமிழ் நூல்களினாற் கிடைத்தது என்பதை அறியலாம். ஆனால் தமிழ்த்தாயின் அணிகள் பல, இன்னம் சமுதாய அரசியல் சூழ்நிலையால், உலகில் உள்ள பல நாடுகளிலும் சிறைப்பட்டும், மறைந்தும் உள்ளன என்பதை அறியும் போது, இவை எல்லாம் வெளிவரின் தமிழ் அன்னை சீரும் சிறப்புடனும் ஊழிக் காலம் வரை உலக மொழிகளுக் கெல்லாம் இணையாகப் பொலிவாள் என்பது உணரலாகும்.

தமிழில் பல்லாயிரம் ஏட்டுச் சுவடிகள் இன்னம் பதிப்பிக்கப் பெறாமல் உள்ளன. இவை இலக்கணம், இலக்கியம் காவியம், புராணம், சிற்றிலக்கியங்கள், சமயம் சாத்திரம், தோத்திரம், வரலாறு, இசை, நாட்டியம், மருத்துவம், சோதிடம், கணிதம், அறிவியல் எனப் பல வகையிற் பல்கியுள்ளன. இவை நம் நாட்டில், தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலையம், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம், தமிழ்நாடு ஆவணக்காப்பகம், சென்னை டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலையம் மதுரைப் பல்கலைக் கழகம், மதுரைத்தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகம், கல்கத்தா தேசிய நூலகம், தமிழகத்தில் உள்ள மடாலயங்கள், பழைய ஜமீன்தார் வழியினர், பழம் புலவர்களின் வாரிசுகளின் வீடுகள் ஆகிய இடங்களில் உள்ளன. ஒருசில இடங்கள் தவிர மற்றைய இடங்களில் இந்தச் சுவடிகள் கவனிப்பின்றி சவலைக் குழந்தை போல நலிவுற்றும், சிதைந்தும் உள்ளன. விரைவில் அழிந்து விடும் நிலையில் பல ஏடுகள் உள்ளன. ஆந்திரப் பல்கலைக் கழகம் விசாகப்பட்டினத்திலும், ஊஸ்மானியா பல்கலைக் கழகம் ஹைதராபாத்திலும் பல தமிழ்நூல்கள் தெலுங்கு வடிவத்தில் சுவடியில் எழுதப் பெற்றுள்ளன. இதே போல மலையாளத்திலும், கன்னடத்திலும் பல சுவடிகள் இருக்கக்கூடும். இவை தவிர மேலை நாட்டில் பல நூலகங்களில் தமிழ்ச் சுவடிகள் இருப்பதாகவும். ‘இந்திய மொழி, இன்னதென அறியப் பெறவில்லை’ என்ற குறிப்பமைந்த சுவடிகள் பெரும்பாலும் தமிழ்ச் சுவடிகள் எனவும் இவற்றுக்குச் சரியான அட்டவணை விவரம் கிடைக்கவில்லை எனவும் ‘ஐரோப்பிய நாட்டில் தமிழ்ச் சுவடிகள்’ என்ற கட்டுரையில் திரு. கிரிகோரிஜேம்ஸ் என்பவர் எழுதியுள்ளார். மேலும் 87 நூலகங்களில் தமிழ்ச் சுவடிகள் எவ்வளவு உள்ளன, அவற்றின் விவரம் எல்லாம் அக்கட்டுரையில் கூறியுள்ளார். இன்னும் 250 நூலகங்களிலிருந்து விவரம் தெரியவரவில்லை எனவும் கூறியுள்ளார்.

இவ்வளவு இடங்களில் உள்ள சுவடிகளைப் பற்றிய முழு விவரமும் தொகுத்து ஆய்ந்து வெளிக்கொணர எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை இப்போது தெளிவாகக் கூற இயலாதாயினும், பல நூற்றாண்டுகள் தேவைப்படும் என்பதை உணரலாம். ஆனால் இவைகளைப் படித்துப் பெயர்த்தெழுதும் ஆற்றல் உள்ளவர்கள் இப்போது ஒரு சிலரே உள்ளனர். அவர்களுக்குப் பிறகு இச் சுவடிகளைப் படிப்பவர்களே இல்லை என்ற நிலைவரின் நந்தமிழ்ச்

செல்வங்கள் எல்லாம் செல்லுக்கும், மண்ணுக்கும் விருந்தாக வன்றோ போய்விடும். இதை உணர்ந்து இப்போது (கடந்த இரண்டாண்டுகளாக) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 'சுவடிஇயல்' என்ற பிரிவை ஏற்படுத்தி ஆண்டுதோறும் சில மாணாக்கர்கட்குச் சுவடி படிக்கவும், பதிப்பிக்கவும் பயிற்சி அளித்து வருகின்றது. அண்மையில் தஞ்சையில் நிறுவப்பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஐந்து புலங்களில் சுவடிப்புலம் ஒன்றாக அமைக்கப் பெற்றுளது

சுவடி படிப்பது பற்றியும், அவற்றில் உள்ள சிரமங்கள், நுணுக்கங்கள் பற்றியும், அதற்கு வேண்டிய பயிற்சிகள் பற்றியும் இனிக் கூறவேண்டும்.

கடந்த நூற்றாண்டின் முக்கால் பகுதிவரை (1875) தமிழ் நூல்கள் பெரும்பாலும் ஏட்டுச் சுவடியிலேயே எழுதப் பெற்று வந்தன ஐயரவர்கள் ஆசிரியர் மகா வித்வான் நூல்களை எல்லாம் அவர்கூற ஐயரவர்கள் தாம் ஓலையிற் பிரதிசெய்ததாகக் குறிப்பிட்டுள்ளார் (ஐயரவர்கள் 1871-76 வரை பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றார்). அக்காலத்தில் பக்தி இலக்கியங்களும், சமய சாத்திர நூல்களும் சிறு பிரபந்தங்களும் மட்டுமே தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர்; சங்க இலக்கியம் என்பதைப் பெயரளவில் அறிந்திருந்தனர்; பார்த்துப் படித்தவர்கள் இல்லை. தொல்காப்பியமும் திருக்குறளும் தனிச் சிறப்பால் உணரப் பெற்றனவாயினும் அவற்றின் தொன்மையை மக்கள் அறியக் கூடவில்லை.

சிலப்பதிகாரம் சிறப்பதிகாரம் என வழங்கப் பெற்றது. சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம் என அச்சிற் பதிக்கவும் பெற்றுள்ளது. சிலப்பதிகார ஆசிரியர் சேர மன்னர் என்ற செய்தி மட்டுமே அறிந்திருந்ததால், 9-ஆம் நூற்றாண்டில் தமிழில் ஆதிஉலா, பொன் வண்ணத் தந்தாதி ஆகிய பிரபநதங்களை இயற்றிய சேரமான் பெருமாள் நாயனாரே சிலப்பதிகார ஆசிரியராகக் கருதப்பெற்றார்.

ஒரு முறை, சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில் இந்திர விழவூர் எடுத்தகாதை, பி-ஏ; வகுப்புக்குப் பாடமாக வைக்கப் பெற்றது. அந்தக் காலத்தில் கல்லூரி வகுப்புக்களுக்கு பாடம் வைப்பவர்கள், பாடமாக வைக்கும் நூல்களைப் பார்த்தே இருக்க

மாட்டார்களாம். ஒரு நூலின் பெயரைக் கேட்ட அளவிலேயே அதில் சில பகுதிகள் பாடமாக வைக்சப் பெறுமாம். ஒரு நூலை முற்றும் படித்து அறிவதை விட அந்த நூலின் பெயரை அறிவது சுலபமல்லவா? இவ்விதம் பாடமாக வைக்கப் பெறும் பகுதியை, யாரேனும் அவசர அவசரமாகத் தேடிக் குற்றங் குறைசளைக் கவனியாமற் பதிப்பித்து விடுவார்களாம். அப்போது வித்துவான் தியாகராஜ செட்டியார் கும்பகோணம் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருந்தார். 'இந்திர விழவூர் எடுத்த காதை'யைப் பாடம் சொல்ல முயன்றார். (சுவடியிலிருந்து பேர்த்தெழுதிப் பதிப்பிக்கத் தெரியாததால்). பாடம் பல பிழைகளுடன் இருந்தது சுவடியாக இருந்தாலாவது ஒருவாறு ஊகிக்கலாம். அச்சில் வந்தபின் அவ் விதம் ஊகிக்கவும் இயலாது. செட்டியாருக்கு பல இடங்கள் விளங்காமல் மயக்கத்தை அளித்தன. இது இந்திர விழவூர் எடுத்த காதையா? இந்திர இழவூர் எடுத்த காதையா எனச் சலித்து தன்னாற் பாடம் சொல்லிக் கொடுக்க இயலாமல் 6 மாதம் லீவு பெற்றுக் கொண்டனராம்.

சுவடி படித்துப் பேர்த்தெழுதுவதில் உள்ள கஷ்டங்களைக் கூறவே இச்செய்தி இங்குக் கூறப் பெற்றது. ஏட்டுச் சுவடிகளை எழுதியும், படித்தும் பதிப்பித்தும் புகழ்பெற்ற ஐயரவர்கள் தாம் ஏடுகளைப் பதிக்கும்போது பட்ட இன்னல்களை,

> "இதுகொம்பு-இதுசுழி என்று வேறுபிரித்து
> அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப்
> புள்ளியே இராது. ரகரத்துக்கும், காலுக்கும்
> வேற்றுமை தெரியாது. சாபம், சரபமாகத்
> தோற்றும், சரபம் சாபமாகத் தோற்றும்.
> ஓரிடத்தில் சரடு என வந்திருந்த வார்த்தையை
> நான் சாடு என்றே பலகாலம் எண்ணி வந்தேன்;
> தரன் என்பதைத் தான் என்று நினைத்தேன்;
> இடையின ரகரத்துக்கும் வல்லினரகத்துக்கும்
> பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

—என் சரித்திரம் பக்கம் 353

திருவாவடுதுறை மடாலயத்தில் ஒரு சுவடியின் மேல் ஏட்டுத் தொகை என அதன் பெயர் குறிக்கப் பெற்றிருந்ததாம். சுவடியைப் பிரித்துப் பார்க்கையில் சங்க இலக்கியங்களாகிய எட்டுத்

தொகையே அப்படி ஒரு தொகுதி உண்டு என்பதை அறியாத காரணத்தாலும் பண்டைய தமிழ் எழுத்துக்களில் எ, ஏ வித்தியாசமிராததாலும் ஏதோ ஏடுகளின் தொகுதி என்ற கருத்தில் 'ஏட்டுத் தொகை' என எழுதப் பெற்றதாக அறிய வந்ததாம். ஏட்டில் எழுதியும் படித்தும் வந்த அக்காலத்திலேயே இந்தக் குழப்பங்கள் இருந்தன ஏடுபடிக்கும் போது ஏற்படும் இடர்களை, பண்டைத் தமிழ் நூல் பதிப்பித்துப் புகழ்பெற்ற திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் ஒரு இடத்தில் ''ஏட்டுச் சுவடிகள் படிக்கும்போது நான் பட்ட கஷ்டங்களைக் கூறி உணர்த்த இயலாது. இந்த அனுபவங்களுக்கு எனக்கு ஐயரவர்களும், அவர்களுக்கு நானுமே சாட்சி'' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

பழந்தமிழ் நூல்கள் பெரும்பாலும் செய்யுள் அமைப்பிலேயே சுவடியில் அமைந்திருந்தன. தமிழில் உரைநடை பல்கிப் பெருகியது வீரமாமுனிவர் காலத்துக்குப் பிறகுதான். அப்போதெல்லாம் உரைநடை வெகு குறைவாகவே இங்கொன்றும் அங்கொன்றுமாக இருந்தது. காகிதப் புழக்கமும், அச்சுப்பதிப்பும் வரும்வரை இந்த நிலைதான் இருந்தது. இந்த முறை பரவும் வரை மக்கள் நூல்களைப் பெரும்பாலும் மனப்பாடமாகவே பயின்று வந்தனர். இதற்குச் செய்யுளமைப்பே உதவும். ஆதலால் பழந்தமிழ் நூல்கள் எல்லாம் கவிதை அமைப்பிலேயே இருந்தன. உரையாசிரியர் உரை நடைகள் கூட ஏதோ ஒருவகையில் மனப்பாடம் செய்வதற்குரிய முறையில் இருக்கும்

அச்சுப்பதிப்பு இல்லாத காலத்தில் இவ்விதம் மனப்பாடம் செய்து வந்ததுடன், மாணாக்கர்கள் தாம் படிக்கும் நூல்களை ஏட்டில் பிரதி செய்து பயின்று வந்தனர். ஒரே வகுப்பில் பயிலும் மாணாக்கர்களில் ஒருவர் படிக்க மூன்று நான்கு பேர் கேட்டு எழுதியும் நூல்களைப் பிரதி செய்தனர். மேலும் நூலை இயற்றும் ஆசிரியர் தாமே ஏட்டில் பிரதிசெய்வதில்லை. செய்யுட்களை அவர்கள் வாய்மொழியாகக் கூற வேறொருவர் அவ்வப்போது பிரதி செய்து வருவார்கள். இவர்களை ''கற்றுச் சொல்லிகள்'' என்று அழைப்பார்கள். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அவ்விதம் கூறும் பாடல்களை ஸ்ரீதியாகராச செட்டியாரும், ஸ்ரீஐயரவர்களும் அவரிடம் மாணாக்கராகப் பயின்றபோது கற்றுச் சொல்லிகளாக இருந்து ஏட்டில் எழுதி வந்தார்கள். பல மன்னர்களும், ஜமீன்தார்களும், பெருநிலக்கிழார்களும், தங்கள் பரம்பரைச் சொத்தாகிய தமிழ்ப் பெருநூல்களைத் தங்கள் தங்கள்

குடும்பங்கள் விரிவடையும் போது பல கூலியாட்களை யமர்த்திப் பிரதி செய்தும் பெருக்கி வந்தனர். இவ்விதம் கூலிக்கெழுதுபவர்களும், கற்றுச் சொல்லிகளும் சிறந்த அறிஞர்களாக இருக்க முடியாது. கூலிக்குப் பிரதி செய்பவர் ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக இப்பணிகளைச் செய்து வந்ததால் இவ்வளவு ஓலைகள் பிரதி செய்தோம் எனக் கணக்கிடவே பிரதி செய்தனரல்லாது, நூலின் தரத்தைப் பற்றியோ, நயத்தைப் பற்றியோ கவலைப்படாமல் கைக்கு வந்த வண்ணம் பிழைகள் மலியப் பிரதி செய்தனர் கற்றுச் சொல்லிகளும் ஆசிரியரிடம் பயில வந்தவர்களாதலால் சிறந்த புலமை இருக்க வாய்ப்பில்லை மேலும் சொல்வதைக் கேட்டு எழுதும் போது அவர்கள் காதில் சேட்ட வண்ணம் பிரதி செய்கையில் வல்லினம், இடையினம், ஒற்றுக்கள், சந்திவிதி இவைகள் புரியாமற் பிரதி செய்தமையால் தமிழ்ச் சுவடிகளிற் பலபிழைகள், பிரதி பேதங்கள் மலியக் காரணமாயிருந்தன.

'ஏக்கழுத்தம்' என்ற தமிழ்ச்சொல் 'தலைநிமிர்ந்திருத்தல்' எனப் பொருள்படும். ஏட்டில் குறில் நெடில் வித்தியாசம் இன்மையால் 'எக்கழுத்தம்' என ஏட்டில் எழுதப்பெற்று, இச்சொல்லின் பொருளைத் தெரியாத காரணத்தால் அச்சில் 'எக்கழுத்தம்' எனவே பழம் பதிப்புக்களில் பதிப்பிக்கப் பெற்றிருந்தது. ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிக்க ஆராயும் போது 'ஏத்தரும் மயிற்குழாம்' என ஒரு இடத்தில் வந்திருந்தது. ஏட்டில் எத்தரும் என எழுதப்பெற்றிருக்குமாயினும் நெடிலெதுகையில் இச்சொல் பயன்படுத்தப் பெற்றதால், ஏத்தரும் என உணரலாயிற்று இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் 'ஏ' மேனிமிர்ந்து நோக்கல் என உரை எழுதி; ஏக்கழுத்தம் என்றார் பிறரும் என எழுதியமையால் எக்கழுத்தம் என்பது சொல்லன்று ஏக்கழுத்தமே அவ்வாறு மயங்கியது எனப் புலனாயிற்று என டாக்டர் ஐயரவர்கள் கூறியுள்ளார்கள்.

தமிழ்ச் சுவடிகளில் குறியீடுகள் எதுவும் இராது. பாடல்கள் சீர்பிரித்து எழுதப் பெறாமல், ஒரே சங்கிலித் தொடராகவே எழுதப்பெற்றிருக்கும். குறில், நெடில், கொம்பு, சுழி வித்தியாசம் இராது. புள்ளிகளே இராமல் எழுதப் பெற்றிருக்கும். ஆனால் ஏட்டுச் சுவடிகளின் பிரதிகள் மிசக் குறைவாகவே இருக்குமாதலாலும் ஒரு முறை ஒரு பிரதி செய்ய அதிகக் காலதாமதமேற்படுமாதலாலும் பெரும்பாலும் நூல்களைப் பயில்பவர்கள் மனப்பாடமாகவே பயின்று வந்தனர். இந்தப் பயிற்சிக்குச் செய்யுள்

அமைப்பே உதவியாக இருந்ததால் நூல்கள் அனைத்தும் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. இப்போது காகிதத்தில் அச்சிற் பதிக்கும் முறை வந்து விட்ட படியால் மனப்பாடம் செய்யும் முறையும், நூல்களின் அமைப்பை அறிந்து கொள்ள உதவும் யாப்பு-பாட்டியல் விதிமுறைகளை அறிந்து உபயோகிக்கும் ஆர்வ குறைந்துள்ளன; தேய்ந்து வருகின்றன என்று கூடக் கூறலாம்.

இப்போது தமிழில் அச்சில் வராத தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பிக்க அரசாங்கமும், பல்கலைக்கழகங்களும், பிற நிறுவனங்களும் ஆர்வங்கொண்டு ஈடுபட்டுள்ளன. சில பழஞ்சுவடி நூல்கள் அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

சுவடிகளில் சந்தி, குறில், நெடில், மெய், உயிர் மெய், கொம்பு, கால் இவற்றை உணர யாப்பியலும் பாட்டியலும் இலக்கணமுமே கைகொடுத்து உதவுகின்றன. இவ்விலக்கண நூல்களைப் பயில்வதோடு மட்டுமின்றிப் பலநூல்களைக் கற்றுச் சிறந்த புலமையும் பயிற்சியும் இருந்தால்தான் ஏட்டை முறையாகச் சரியான வடிவில் எழுத முடியும். பதிப்பிக்க எடுத்துக் கொள்ளும் ஏடு அந்நூலாசிரியன் கையாண்ட மூலச்சுவடியாக இருக்க வாய்ப்பில்லை அது வழி வழியாகப் பலர், பலகாலத்தில் பிரதி செய்த பிரதிகளில் ஒன்றாகவே இருக்கும். அதில் அவ்வப்பொழுது எழுதுவோரால் ஏற்படும் பிழைகளும் பாட பேதங்களும் பல இருக்க வாய்ப்புண்டு. இப்போது அதைப் பதிப்பிப்பதற்காகப் படி எடுக்கையில், ஏட்டில் இருக்கும் எழுத்து முறைகளை அறியாததாலும், யாப்பு-பாட்டியலில் ஆழ்ந்த புலமை இன்மையாலும், ஏட்டில் உள்ள எழுத்தை வேறோர் எழுத்தென மயங்கிப் பிரதி செய்வதாலும் பலபிழைகள் நேரிடுகின்றன. ஏட்டில் இருந்தாலாவது ஒருவகையில் இவ்விதம் இப்பகுதி இருக்கலாம் என ஊகிக்க இடம் உண்டு. அச்சிடப் பெற்ற நூலில் அவ்விதம் ஊகிக்கவும் இயலாது. தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், ஆதிநூல்களிற் கூட அனேகப் பிழையான பாடங்கள் பிரதி செய்வோரின் அறியாமையாலும், கவனக்குறைவாலும் நேர்ந்துள்ளன. இந்த நூல்களின் மேலுள்ள பக்தியால் வேத உபநிடதங்களுக்கு ஒப்பாகக் கருதி ஏட்டைப் பிரதி செய்தவர் பிழைகளையும், நாயன்மார் ஆழ்வார் அருளிச் செயல்களாகக் கருதி இப்போது பதித்து உரை எழுதுபவர்கள் வலிந்தும் கொண்டுகூட்டியும், அனுமானமாகவும் உரை கண்டுள்ளனர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில்

இவ்விதம் உள்ள பேதங்களைச் சுட்டி மகாவித்துவான் மு. இராக வையங்கார் தம் ஆழ்வார்கள் காலநிலை என்ற நூலில் வரைந் துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் இவ்விதம் உள்ள மயக்கங்களை டாக்டர் ஐயரவர்களும், திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களும் எடுத்துத் திருத்திக் கூறியுள்ளனர்

அண்மையில் வெளிவந்துள்ள (பழஞ்சுவடியினின்றும்) ஒருசில நூல்களில் மலிந்துள்ள குறைகளையும், கடந்த இரண்டாண்டுகால மாகச் 'சுவடி இயல்' பயிற்சி அளிக்கும் முறையில் மாணாக்கர்கள் பிரதி செய்யும்போது செய்கின்ற குறைகளையும் அனுபவத்தில் உணர்ந்தமையால், பயிற்சி—கையேடு என ஒரு பாடநூல் எழுத வேண்டும் என்ற எண்ணம் உருவாகி இப்போது நூல் வடிவம் பெறுகின்றது.

இந்நூலில் ஏட்டுச் சுவடிகளைப் பிரதி செய்யும்போதும் பதிப்பிக்கும்போதும் ஏற்பட்டுள்ள குறைகள் 150 உதாரணங் களுடன் விளக்கப் பெற்றுள்ளன. சுவடியிலிருந்து பெயர்த் தெழுதும்போது ஏற்படும் குறைகளை, எழுத்துமிகை, எழுத்துக் குறைவு, குறில் நெடில் மயக்கம், புள்ளி மயக்கம், பலவகை எழுத்துக்களின் மயக்கம், பாடலமைப்பு மயக்கம், ஒருமை பன்மை மயக்கம், சந்திபிரிப்பதில் மயக்கம், பதிப்பிக்கும் போது தளைபிறழ் வாகப் பதிப்பித்தலின் குறை, குற்றியலுகரம் விட்டிசைத்தல் ஆகிய 10தலைப்புக்களாகப் பிரித்து அவற்றுக்கான உதாரணங் களை முதலில் சுவடியில் உள்ளமுறையில் எழுதி, அதன்கீழ், பதிப் பிலோ அன்றிக் காகிதப் பிரதியில் பிரதிசெய்யப் பெற்றவையிலோ அவை காணப்படும் பகுதியை எழுதி அதில் ஏற்பட்டுள்ள குறை களும், குறைநேர்ந்த விதமும், குறைதவிர்க்கப்பட வேண்டிய முறையும் கூறப்பெற்றுப் பின்னர், அதன் திருத்தமான வடிவமும் தரப் பெற்றுள்ளன.

'சுவடி இயல்' துறையின் முன்னோடியாக இந்தக் கையேடு எழுதப்பட்டதால், இந்நூலை ஒரு முழுமையான நூலெனக் கருத லாகாது. மேலும் மேலும் பயிலும் போதும் அவ்வப்போது உணரப் பெறும் தெளிவுகளையும் இந்நூலைக் கண்ணுறும் அறிஞர்கள், இந்த நூலிற் கூறப்பெற்ற விளக்கங்களுக்குப் புறம் பாகப் புதிய விளக்களையும் கண்டு தெரியப்படுத்தினால் அவை

யும்சுவடிப்பயிற்சி—கையேடு II, III என்ற வரிசையில் தொடர்ந்து வெளியிடலாகும்.

பிற அறிஞர்களும், பதிப்பகங்களும் இம்மாதிரிப் பல புதிய தலைப்புகளில் கையேடுகள் வெளியிடுவதும் வரவேற்கத்தக்கதே. ஆயிரக்கணக்கில் பதிப்பிடப்பெறாமல் இருக்கும் தமிழ்நூல்கள் நல்ல முறையில் வெளிவர, இந்த ஒரு, கையேடு மட்டும் போதாது பல கையேடுகள் வரல் வேண்டும்.

இந்தக் கையேட்டில் உதாரணங்களாகக் காட்டப்பெற்ற குறைகள், பல நல்லறிஞர்களால் பதிப்பிக்கப் பெற்றவையாகும். அப்பதிப்பாசிரியர்களைக் குறைகூறவோ குற்றம்கூறவோ நினைந்து இங்கு இவை கூறப்பெறவில்லை. வருங்காலத்தில் தமிழ்ச் சுவடிப் பதிப்பு நல்ல முறையில் வெளிவர வேண்டும் என்ற சீரிய கருத் துடனேயே இவை கூறப்பெற்றனவாகக் கொள்ளல் வேண்டும்.

இம்மாதிரி ஒரு சுவடிப்பயிற்சி பற்றிய கையேடு வெளியிட இந்த நூல்கள் பெரிதும் உதவினவாதலால் இதனை வெளியிட்டவர் களுக்கு மிகுந்த நன்றியும் வணக்கமும் உரியன ஆகும்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

ஏட்டுச் சுவடியில் காணப் பெறும் தமிழ் எழுத்துக்கள்

அ, ஆ, இ, ஈ, உ, எ, ஐ, ஒ, ஃ, ா, ெ, ள, ை, க, கி, கீ, கு, கூ, ங, ஙி, ஙீ, ஙு, ஙூ, ச, சி, சு, சூ, ஞ, ஞி, ஞீ, ஞு, ஞூ, ட, டி, டு, டூ, ண; ணா, ணி, ணு, ணூ, ணை, த, தி, தீ, து, தூ, ந, நி, நீ, நு, நூ, ப, பி, பீ, பு, பூ, ம, மி, மீ, மு, மூ, ய, யி, யீ, யு, யூ, ரி, ரீ, ரு, ரூ, ல, லி, லீ, லு, லூ, லை, வ, வி வீ, வு, வூ, ழ, ழி, ழீ, ழு, ழூ, ளி, ளீ, ளு, ளூ ளை, ற, றா, றி, றீ, று, றூ, ன, னா, னி. னீ, னு, னூ, னை, ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, ூ, ு, ஸ்ரீ.

3, 4, 6, 9, 10, 100, 1000 எண்கள்

௩, ௪, ௬, ௯, ௰, ௱, ௲

மற்றை எண்களின் குறியீடுகள் மேலே குறித்த தமிழ் எழுத்துகளிற் பயிலப் பெறுவதால் இங்கு குறிக்கப்பெறவில்லை.

I எழுத்து மிகை

ஏட்டிச் சுவடிகளைப் பிரதி செய்கையில், ஏட்டைப் பார்த்து ஒருவர் படிக்க இருவர், அல்லது மூவர் ஒரே சமயத்தில் கேட்டுச் சுவடியில் பிரதி செய்வது வழக்கம். இதனால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று பிரதிகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு எனினும், எழுதுவோர் படிப்போர் கவனக் குறைவும், புலமைக்குறைவும் கேட்கும் சக்தியும் சேர்ந்து பிழைகள் நேரக் காரணமாகின்றன. இதனால் ஏட்டின் இடையே அங்கங்கு சொற்கள் மிகையாக விழுந்துவிடும். இம்மாதிரி மிகையாக உள்ள சொற்களை யாப்பிலக் கணப் புலமையாலும், பயிற்சியாலும் உணர்ந்து நீக்கலாம். இவ்விதமுள்ள எழுத்துமிகைகளையும் அவற்றைக் சாணும் முறையையும், நீக்க வேண்டிய காரணத்தையும், இப்பகுதியில் உதாரணங்களினால் விளக்கப் பெற்றுள்ளன.)

எழுத்துக்கள் மிகை ஏட்டின் சிதைவு

கொணடலெ கொணதணடார குறிததநாளி னறளவும
உணடலெ.........வுருகினென

என ஏட்டுப் பிரதியில் இருந்திருக்கும் இது

''கொண்டலே கொண்தண்டார் குறித்தநா ளின்றளவும்
உண்டலே.........வுருகினேன்''

எனப் பதிக்கப் பெற்றுளது. இப்பகுதி தூதுப்பிரபந்தத்தில் ஒரு கண்ணியாகும் தூது கலிவெண்பாவா லமைதல் மரபு. எனவே இப்பகுதியின் வெண்பா யாப்பமைதி சரியாக வுளதா எனக்

கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கையில் கொண்தண்டார் என்ற காய்ச்சீர்முன் குறித்தநா என்ற கருவிளச்சீர் வருதல் பிழை. இந்தப் பிழையை உணர்ந்து இந்தக் கண்ணியை நோக்கவேண்டும். பொருளும் பார்க்க வேண்டும். கொண்தண்டார் என்ற பகுதிக்குப் பொருள் விளங்கவில்லை. மேலும் தளைபிறழ்கின்றதை உணர லாம். அந்தச் சீர் தேமாச்சீராக இருக்க வேண்டும். எனவே கொண்தண்டார் என்பதில் உள்ள 'தண்' என்ற சொல் மிகை என்பது புரியும். இதை நீக்கி'' **கொண்டலே கொண்டார்** குறித்தநா ளின்றளவும்'' எனப், பாடல் பொருட் பொலிவுடன் அமையும் இந்தப் பொருளமைதி கிடைத்தவுடன் இக்கண்ணியைப் படிக்கும் போதே ''**உண்டலே வுள்ள** வுருகினேன்'' என்ற சிதைவுப்பகுதியும் இயல்பாகப் பூர்த்தியாகும். இந்தப் பகுதியைப் பதிக்கும் போது [ ] வளைவில் பதிக்கலாம்

—தூதுத்திரட்டு-மணவை-திருவேங்-துகில்விடு தூதுகண்ணி-7.

2. ''படடாரகளங கறகுபபரிவாக

என ஏட்டுப் பிரதியில் இருந்திருக்கும் இது.

''பட்டா ரகளங்கற்குப் பரிவாக முன்னின்று''

எனப் பதிக்கப் பெற்றுளது. இப்பகுதி உலாப் பிரபந்தக் கண்ணியில் ஓரடியாகும். உலா கலிவெண்பாவிலமைதல் மரபு. வெண்பா யாப்பமைதி இவ்வடியில் சரியாக வுளதா எனக் கவனிக்கவேண்டும். 'ரகளங்கற்கு' என்பது 4 அசைச்சீர். புளிமாந்தண்பூ எனப் பூச்சீராகின்றது. வெண்பா வில் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் மட்டுமே வரும் எனவே ரகளங்கற்கு என்ற 4 அசையில் ஒரு அசை மிகையாகும். மேலும் இது ஒரு ஜைனநூல். ஜைனமடத் தலைவர்களை பட்டாரகர் என்று குறிப்பிடுவார்கள். இச்சீரில் '**களங்**' என்ற சொற்களை நீக்கி '**பட்டா ரகற்குப்பரிவாக முன்னின்று**' என எழுதினால் யாப்பமைதியும், பொருளமைதியும் கொண்டு உரியவடிவம் பெறும்

—அப்பாண்டை நாதர் உலா கண்ணி 72 பதிப்பு 1972

3. ''அஙக பூாவாஙக முதனூலாறகு மருள மாதவாகள''

என ஏட்டில் இருந்திருக்கும் இது

''அங்கபூர் வாங்க முதனூலாற்குமருள் மாதவர்கள்''

என்று அச்சில் வந்துளது. இதுவும் அப்பாண்டை நாதர் உலா என்ற நூலைச்சார்ந்த பகுதி. இதில் னூலாற்குமருள்'என்பது மேற் குறிப்பிட்டதுபோலவே 4 அசைச் சீராதலாற் பிழையாகும். இந்த 4 அசையில் ஓரசை மிகையாகும். அங்க என்பதற்கு ஆற்கும் என்பது மோனையாதலால் னூ என்ற சொல்லை நீக்கி 'அங்கபூர் வாங்கமுத லாற்குமருள் மாதவர்கள்' எனக்கொண்டால் பொருளும் கெடாமல் யாப்பமைதியும் பெறுகின்றது. மேலும் இவ்வடியில் லாற்கு எனவல்லின றகரவொற்றும் பிழையாகும். ஏட்டில் பிரதி செய்வோர் ர்க், ர்த், ர்ச் என்பவைபோல் இடையின் ரகரம் வல்லொற்றுப்பெற்று வருமிடங்களிலெல்லாம் எழுத்தைக் குறைக்க வெண்ணியோ வேறு காரணங்களுக்காகவோ 'ற்' என்ற வல்லினறகரஒற்றைப் பயன்படுத்துகின்றனர். இதை உணர்ந்து அச்சிற் பதிக்கும்போதும், காகிதத்திற் பிரதி செய்யும்போது இடையின ரகர ஒற்றை எழுதி வல்லொற்றைப் போடவேண்டும் அதன்படி இந்த அடி 'அங்கபூர் வாங்கமுத லார்க்குமருள் மாதவர்கள்' என ஆகும்.

—அப்பாண்டை நாதர் உலா கண்ணி—54 (1972)

4. ''மதிககுஙகுணகளெலலாம வாயநதுலவி-துதிககும''

எனச் சுவடியில் அமைந்திருக்கும்,

இது ''மதிக்குங் குணங்களெல்லாம் வாய்ந்துலவி-துதிக்கும் எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இது அமுதரஸ மஞ்சரி என்ற நூலின் பகுதியாகும். மஞ்சரி என்ற பிரபந்தமும் கலிவெண்பா வாலாயதே. இவ்வடியில் மூன்றாம் சீர் ''வாய்ந்துலவி'' காய்ச்சீராகும்.காய்முன் நேர்வரலே விதியாகும். ஆனால் ''துதிக்கும்'' என்ற தனிச் சொல் நிரை எதுகையாக வமைந்துள்ளதால் மூன்றாம் சீர் மாச்சீராகத்தான் இருத்தல்வேண்டும். எனவே இதில் ஓரசை மிகையாகும். ''வாய்ந்துலவி'' என்ற சீரை ''வாய்ந்து'' எனக் கொண்டு மதிக்குங் குணங்க ளெல்லாம் வாய்ந்து-துதிக்கும் என வமைத்தால் யாப்புக்கியைந்து பொருளும் அமையும்.

—அமுதரஸ மஞ்சரி (கல்வெட்டு இதழ்)

5. ''சுநதரமாநதிரததததுரைச சாரயிஞுடுதலால''

எனச் சுவடியில் இருந்திருக்கும் இது.

கந்தரமாந் தீர்த்தத்துரைச் சாரயிஞுடுதலால்

என அச்சிற்பதிப்பிக்கப் பெற்றுளது. இந்த அடிதிருமயிலை உவமை வெண்பா என்ற நூலில் உள்ளது. வெண்பா நூல் ஆதலால் பாடல் வெண்பா யாப்பு விதிகளின்படி அமைதல் வேண்டும். வெண்பாவில் கனிச்சீர் வராது. 'துரைச்சாரயி' என்பது கனிச் சீராகும். மேலும் பொருளும் காணமுடியவில்லை. கனிச்சீரின் ஓரசையை மிகை எனக் கருதி 'யி'என்ற சொல்லை நீக்கி 'துரைச்சார' எனவமைத்தால் காய்ச்சீராகித் தளையும் பொருளும் சீர்படும். மேலும் 'துரை' என்பதில் இடையினரை பிழையாகும். ஏடுகளில் பெரும்பாலும் வல்லினறகரம் 'ற' என்றே எழுதப்பெற்றிருக்கும் பழங்கால வல்லின 'ற' கரம் இவ்விதமே 'ற' என்றே உள்ளது. இதை இடையின ரகரமாக மயங்கிப் பிரதி செய்ததை உணர்ந்து துறை எனப் பதிப்பித்தலே சரியான முறையாகும்.

—திருமயிலை உவமை வெண்பா 1

6. ''பாணடிய விநாயகனொபபாமஉ''

எனச் சுவடியில் காணப்பெறும் பகுதியை

''பாண்டிய விநாயகனொப்பாம்பு''

என அச்சில் பதிப்பதித்துள்ளனர். இது வெண்பாவின் இறுதியடியாகும். வெண்பா இலக்கணப்படி இறுதிச்சீர் ஓரசைச் சீராக நாள், மலர், காசு, பிறப்பு,என்ற வாய்பாட்டில் அமையவேண்டும். ஆனால் இப்பகுதி 'பாம்பு'' எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. பொருளும் புரியவில்லை உவமை வெண்பாவாதலால், ஏதாவது உவமையைக் காட்டும் வகையில் சொற்க ளமைதல்வேண்டும் ''ஒப்பாம்பு'' என்பதில்பு' என்ற சொல் மிகை என்பதை உணர்ந்து நீக்கினால் ''பாண்டிய விநாயகனொப் பாம்'' என நாள் என்ற வாய்ப்பாட்டில் பாடல், இலக்கணம், பொருள் அமைதி பெறும் ஏட்டில் குறியீடுகளே இராது. ஆயினும் பாடல் முடிவில் 'உ' என்று எழுத்தாணியால் கோடிட்டிருப்பார்கள் இதையும் ஒரு எழுத்து எனக் கருதியதே இம்மயக்கத்தின் காரணமாகும்.

—திருமயிலை உவமை வெண்பா 1

7. ''அரசா திறைகொளளுஙக வனபாற''

இது சுவடியில் உள்ள வடிவமாக இருக்கலாம்.

''அரசர்திறை கொள்ளுங்க வன்பாற்''

என அச்சில் பதிக்கப் பெற்றுள்ளது. இதுவும் திருமயிலை உவமை வெண்பாப் பகுதியாகும். இப்பகுதியில் வெண்பா யாப்பில் தளை பிறழ்வு ஏதும் இல்லை ஆனால் பொருள் விளக்கமுறவில்லை உவமை வெண்பா நூலாதலால்,இதனால்,இதனால்,இதுவும் இது வும் சமம் என அமையவேண்டும் இந்தக் கருத்துடன் பாடலை நோக்கின்'ங்க'மிகை என்பதும் 'ம' வ என மயங்கி உருப்பெற்றதும் புரியும். மிகைச் சொற்களை நீக்கி வகரத்துக்குப் பதில் மகரத்தை அமைத்து

"அரசர் திறைகொள்ளு மன்பாற்"

எனவமைக்கப் பொருளமைதி கிடைக்கும்

—இது திருமயிலை-உவமை வெண்பா-பாடல் 27

8. "நாவினமனனவாக கருளை நலகுதலா லாரூரா"

என்பது ஓலைச் சுவடியில் இருக்கலாம். இது

"நாவின்மன் னவர்க்கருளை நல்குதலாலாரூரர்"

என அச்சிற்பதிக்கப் பெற்றுளது. "நாவின்மன்" என்பது காய்ச்சீர் காய்முன் "னவர்க்கருளை" எனக் கருவிளங்காய் வந்துளது. காய் முன்-நேர் வரலே விதியாகும். இப்பகுதிக்குப் பொருள் காண்பதில் இடர் இல்லையேனும் வெண்பா யாப்பின் அமைதியை நோக்கப் பிழைபட்டது "னவர்க்கருலை" என்ற சீரில் உள்ள 'வ' என்ற எழுத்தை மிகை என ஒதுக்கி "னர்க்கருளை" எனக்கொள்ளின பொருளும் கெடவில்லை. உரிய யாப்பமைதியும் கிட்டுகின்றது.

—திருமயிலை உவமை வெண்பா-44

9. "வாகை வெளசிஙகார மாவிருபபதால"

இது ஏட்டின் வடிவமாகும்.

"வாகைவேள் சிங்காரம மாவிருப்பதால்"

எனப் பதிப்பிடப் பெற்றுளது. இது திருமயிலை உவமை வெண்பா வில் ஒரு பாடலின் பகுதியாகும். இப்பகுதியில் 'மாவிருப்பதால், என்பது பிழை. இது கனிச்சீராகும். இக்கனிச்சீரில் த என்ற குறில் மிகை. இதை உணர்ந்து நீக்கில் மாவிருப்பால் எனக் காய்ச்சீரா கும். மயிலை வேள் (முருகன்) சிங்காரவேலன் என்பதும் வேளை

(மன்மதனை) வாகைகொண்ட சிவபிரான் அழகிய மா வடியில் இருப்பதால் எனச் சிலேடைப் பொருளும் பொலிந்து சிறக்கும் வெண்பா யாப்பும் பொருந்தவமையும். எனவே

''வாகைவேள் சிங்கார மாவிருப்பால்''

என்று பதிப்பிக்கவேண்டும்.

—திருமயிலை உவமை வெண்பா 46

10. ''இடஙகொணடிறைவனிருபபதால—அடாநதவயி''

எனச் சுவடிப்படியில் இருக்கலாம். இது

''இடஙகொண் டிறைவன் னிருப்பதால்—அடர்ந்தவயி''

என்று பதிப்பில் வந்துளது. இது நேரிசை வெண்பாவின் இரண்டாமடி. இதில் ''**னிருப்பதால்**'' என்ற விளச்சீர் முன் ''**அடர்ந்த**'' என விளம் வந்து தளை கெட்டது. ''அடர்ந்தவயி'' என்ற தனிச்சீர் ''இடம்' என்பதன் எதுகை யாதலால் இந்தச்சீர் விளமாகத் தானமைதல் வேண்டும். எனவே மூன்றாம்சீர் மாச்சீராகத்தான் இருக்கவேண்டும் ''**னிருப்பதால்**'' என்பதில் உள்ள **த**'வை மிகை என நீக்கி ''**னிருப்பால்**'' எனப் புளிமா வாக்கின் தளை கெடாது எனவே இவ்வடி.

''இடங்கொண் டிறைவ னிருப்பால்—அடர்ந்தவயி''

என வமையும்.

திருமயிலை-உவ. வெண்பா 51

''கெசகரியுமபாக மிசைவதாற றென்மயிலை
யாசிறிருவான மீயூராம''

என ஓலைச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்றிருக்கும். இது

''கேசகரியும் பாக மிசைவதாற் றென்மயிலை
ஆசில்திரு வான்மியூ ராம்''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. கேசகரியும் என்பது கனிச்சீர். ''**கேசகரி**'' என்ற சொற்றொடருக்குப்பொருளும் புரியவில்லை. இதில் '**க**' என்ற சொல் மிகையாகும். இதை நீக்கக் ''கேசரியும்'' என இச்சீர் காய்ச்சீராக அமைந்து யாப்பமைதி பெறும் ''கேசரி'' என்ற சொல் சிங்கம் என்ற பொருளையும் தருகின்றது. எனவே இப்பகுதி.

''கேசரியும் பாக மிசைவதாற் றென்மையிலை
ஆசில்திரு வான்மியூ ராம்''

என இருத்தல் வேண்டும்.

—திருமயிலை உவமை வெண்பா 62

12. ''ஆகுயாச செயதாடலரனே விருபபால மயிலை''

என ஓலைச்சுவடியில் பிரதி செய்யப் பெற்றிருக்கும் இப்பகுதி

'ஆகுயரச் செய்தாடலரனை விருப்பால் மயிலை'

என்று பதிப்பிக்கப்பெற்றுளது. இப்பதிப்பில் இரண்டாம் சீர் செய்தாட 'லரனை விருப்' பென்ற மூன்றாம் சீருடன் தளை இயையவில்லை. தளை கெட்டது 'ல' என்ற சொல் மிகையாக எழுதப்பட்டதே காரணமாகும். இந்த மிகைச் சொல்லை நீக்கி ''செய்தா டரனைவிருப்'' என அமையின் தளையும் சீர்ப்படும். பொருளும் கெடாது. எனவே இப்பகுதியில் மிகைச் சொல்லான 'ல'வை நீக்கி

''ஆகுயரச் செய்தா டரனைவிருப் பால்மயிலை''
என்றே திருத்திப் பதிக்க வேண்டும்

—திருமயிலை உவமை வெண்பா.83

13. ''மறையொது மாமுனிவரவாழுந திருமறைக
காடடிறைவன
மயிலையானெ''

என ஏட்டுச்சுவடிப் பிரதியில் இப்பகுதி காணப் பெற்றிருக்கலாம் இது.

''மறையோது மாமுனிவர் வாழுந் திருமறைக்காட்
டிறைவன் மயிலையானே''

என அச்சிற் பதிக்கப் பெற்றுளது. முதலடி இறுதிச்சீர் ''திருமறைக்காட்'' என காய்ச்சீர் பெற்றுள்ளது. ஆனால் அடுத்த அடி ''இறைவன்'' என நிரையாக வந்து தளை பிறழ்ந்தது. ஆனால் ''மறையோது'' என்ற முதலடிக்கு எதுகையாக இறைவன் என நிரை எதுகை வரலே விதியாதலால், 'திருமறைக்காட்' என்ற காய்ச்சீருக்குப் பதில் மாச்சீர் வந்தால் தான் தளை நிறைவு பெறும். எனவே 'திரு' என்ற அடைமொழி மிகை, இதை நீக்கி

—2—

''மறையோது மாமுனிவர் வாழும் மறைக்காட்
டிறைவன் மயிலையானே'' எனக்கொளின் யாப்பமைதி பெறும்

—திருமயிலை உவமை வெண்பா 10

14. ''மனமகிழ்ந்து போலிருந்து நின்றாடிரூசல்''

இது சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்தில் ஓலையிலிருந்து காகிதத்திற் பெயர்த்தெழுதிய ஆதிநாதர் ஊஞ்சற் பிரதியின் பகுதியாகும்.

தமிழில் விருத்தங்கள் சீர் அளவொத்துவரல் மரபு. இப்பாடல் இரண்டு காய்ச்சீரும் இரண்டு மாச்சீரும் மோனை பெற்று மடங்கி வந்த எண்சீர் விருத்தமாகும். இப்பகுதியில் ''நின்றாடிரூசல்'' என்ற பகுதி மூன்றாம் சீரும் காய்ச்சீராகி ஓசை மிகுதல் பிழையாகும். மேலும் 'போலிருந்து' என்பதில் 'போ' என்ற நெடில் 'பொ' எனக் குறிலாகி 'ரு' என்ற சொல் மிகையானதை நீக்கிப் ''பொலிந்து'' என வமைதல் வேண்டும் அப்படி யமைப்பின் இதன் அடுத்த சீரில் நின்றாடி என்பதில் 'நின்' முதற்சீரோடு சேர்ந்து ஓசை பெற அடி அளவொத்தமையும்

''மனமகிழ்ந்து பொலிந்துநின் றாடி ரூசல்''

எனப் பொருட்பொலிவும் சேரும்.

சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நிலையப்பிரதி எண் 5957

ஆதிநாதர் ஊஞ்சல் 6

15. ''தெனபால வடபால சிறநதகீளபால மெலபா
லனபாலி வனபால வனபால வனபாலு''

என்ற சுவடிப் பகுதி

''தென்பால் வடபால் சிறந்த கீள் பால்மேல்பா
லன்பா லிவன் பாலவன் பால் வன்பாலும்''

என அச்சிற்பதிப்பிக்கப் பெற்றுளது. இதில் இரண்டாமடி அச்சுருவில் உள்ளதை எந்த வகையிலும் வெண்பாத்தளைக் கொப்பப் பிரிக்க இயலவில்லை. பிரதி செய்வோர் கவனக் குறைவாக ஏட்டிலேயே சில எழுத்துக்களை மிகையாகப் பிழைபட எழுதியுள்ளனர். இந்த அடியை யாப்பமைதி பொருளமைதியுடன் நோக்கின் மிகையாக ''வன்பால்'' இருமுறை எழுதப்பெற்றது புலனாகும் எனவே

''தென்பால் வடபால் சிறந்தகீள் பால்மேல்பா''
லன்பா லிவன்பா லவன்பாலும்''

என இவ்வடியை யமைக்கவேண்டும்.

—அமுதரஸமஞ்சரி 196.

16. ''சுநதரியென பைநதொடிபொ ரெறறின
ஞொபுதலவன''

என ஓலைச் சுவடிப் பிரதியில் உள்ள பகுதி

சுந்தரி என் பைந்தொடிபோல் தோற்றின
னோர்புதல்வ''

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

பைந்தொடி போல் புதல்வன் தோற்றினான் என்பது மரபில்லை. தோன்றிய புதல்வனுக்குச் சிறப்புமில்லை. கதைத் தொடர்பும் இல்லை மந்திரி, மன்னன் மலர்க்கழலிலே பணிந்து சுந்தரி என்னும் பைந்தொடி போல் தோற்றினன் ஓர் மைந்தன் என்பது பொருத்தமாகவில்லை போல் என்பதில் ஒகாரக் கொம்புமிகை. இதை நீக்கி பைந்தொடிபால் எனக் கொள்வதே கதைக்கும், பொருளுக்கும் ஒத்து அமையும். எனவே, சுந்தரி என் பைந்தொடிபால் தோற்றினனோர் புதல்வன்'' என்று கொள்ள வேண்டும்,

—சுசீல வள்ளல் அம்மானை. 289

17. ''யாராஙகா கொமாஞெ வாதியளகைககொஞெ''

என்ற சுவடிப்பிரதி

''யாரரங்கர் கோமானே? ஆதியள கைக்கோனே''

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ''யாரரங்கர் கோமான்'' என்பதிற் பொருளோ, வரலாறோ தெரியவில்லை மேலே அர்ச்சுனன், விகர்ணன் எனக் குறிப்பிட்டுள்ளமையாலும் விற்றிற மையில் அர்ச்சுனனுக்கு நிகரானவனுமான கர்ணனை, அங்க நாட்டதிபதியாதலால் அங்கர்கோன் எனக் கூறியுள்ளதாகக் கொண்டால் பொருட்டெளிவுகிட்டும் இதில் ஏட்டுப் பிரதி செய்தவர் ஒரு காலை மிகையாகப் போட்டு, அங்கர்கோனை அரங்கர் கோனாக்கி விட்டார் இதையுணர்ந்து மிகையான காலை நீக்கி

''யாரங்கர் கோமானே? ஆதியள கைக்கோனே''

எனக் கொள்ளல் வேண்டும்

—சுசில வள்ளல் அம்மானை 157

II எழுத்துக் குறைவு

ஏட்டைப் பிரதிசெய்பவர் ஏட்டிலுள்ள செய்தியைப் பிறர் படிக்கக் கேட்டு எழுதும்போது படிப்பவர் விரைவாகப் படிப்ப தாலோ, அல்லது பிரதி செய்பவர் மெதுவாக எழுதுவதாலோ, அன்றித் தொடர்ச்சியாகப் பல ஏடுகளில் எழுதிய அயர்ச்சியாலோ, கவனக்குறைவாலோ அங்கங்குச் சில எழுத்துக்கள் விடுபட்டிருப்பது இயல்பாகும். உடனேயே மூல ஏட்டுடன் ஒத்துப் பார்த்து விடுபட்ட இடத்தில் ஒரு புள்ளியிட்டு விடுபட்ட எழுத்தை அந்த இடத்தின் கீழே எழுதுவது வழக்கம். இரண்டு மூன்று எழுத்துக்களாயின் ஏட்டின் முனையில் எழுதுவதும் உண்டு சில பிரதிகள் மூலத்துடன் ஒத்துப்பார்க்கப் பெறாமலேயே எழுதியவர் செய்த குறையுடனேயே இருப்பதும் உண்டு. இவற்றை யாப்பியல், பாட்டியல், மரபு, ஓசைநயம் இவைகளின் உதவியுடன் களையமுடியும். இங்கு சில விடுபட்ட எழுத்துக் களுடன் பிரதிசெய்யப்பெற்ற, பதிப்பிக்கப் பெற்றுள்ள பகுதிகள் உதாரணமாக எடுத்துக் காட்டப் பெற்று விடுபட்ட எழுத்துக் களை அறிந்த முறையும், அவசியமும் விளக்கப் பெற்றுள்ளன.

““கொமபுழல

18. ““வாயமொழிததா யஙகண மருவுதலாலகுறருல
நாம மயிலை நகர்””

என்பது ஓலைச் சுவடிப் பிரதியில் காணப்படும் பகுதி. இது

—““கொம்புழல்

வாய்மொழித்தா யங்கண் மருவுதலால் குற்றால
நாம மயிலை நகர்””

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது இப்பகுதியில் இலக்கணப் பிழை ஏதுமில்லை. ஆயினும் இப்பாடலில் குற்றாலம் பற்றிய செய்தி வருகின்றது. குற்றால இறைவி திருநாமம் குழல்வாய் மொழி யம்மை யாகும். தனிச்சொல்லில் ஏட்டில் பிரதி செய்வோர் கவனக்குறைவால் கொம்புகுழல் என்பது கொம்புழல் எனப் பிரதி செய்யப் பெற்று அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது. பாட்டின் பொருளை உற்றறிந்து

''கொம்புகுழல்
வாய் மொழித்தாய்''

எனத் திருத்தம் செய்து பதிப்பிக்க வேண்டும்.

—திருமயிலை உவமை வெண்பா 18

19. ஆபபுரையி ஞம மைதலா ற

எனச் சுவடியில் பிரதி செய்யப்பெற்று 'ஆப்புரையி னாம மைதலாற்'' என அச்சில் பதிக்கப் பெற்றுளது. இதில் ''னாம'' ,'மைதலாற்'' என்பதில் தளை பிறழ்ந்துளது. ''னாம'' என்ற மாச்சீரின் முன் 'மைதலாற்' எனக் கூவிளம் வருதல் பிழை; அத்துடன், மோனையும் பெறவில்லை உரிய பொருளும் இல்லை. 'நாம மமைதலால்' என ஊமத்திற்கு முன் ஒரு மகரம் சேர்க்கப் பெறாமல் விடுபட்டது உணர்ந்து பதிப் பித்தால் தளைப் பிறழ்வு நீங்கும், மோனை அமையும். பொருளும் உண்டு. எனவே ''ஆப்புரையி னாமமமைதலாற்'' என்று திருத்தம் செய்து பிரதி செய்து பதிக்க வேண்டும்

—திருமயிலை உவமை வெண்பா 25

20. ''கமபைத திரு நகரிற காணுலாற''

எனச் சுவடியில் தவறாகப்பிரதி செய்யப் பெற்ற பகுதி

''கம்பைத் திருநகரிற் காணுலாற்''

எனவே அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது.

இந்தப் பகுதி உவமை வெண்பாவில் வருவதால், இதனால் இது ஒப்பு என்று வரவேண்டும். அச்சுப் பதிப்பில் அங்ஙனம் பொருள் அமையவில்லை. ''காணுலால்'' என்பது பிழை. இதில் இடை யில் உள்ள 'த' என்ற எழுத்து, பிரதி செய்வோர் கவனக் குறை வால் விடப்பட்டுள்ளது. பதிப்பித்தவர்களும் இதை உணராமல் அப்படியே பதித்துள்ளனர். இந்தக் குறையை உணர்ந்து 'காணுலால்'' என்பதில் 'த'வைச் சேர்த்துக் 'காணுதலால், எனத் திருத்த வேண்டும், அப்போது

''கம்பைத் திருநகரிற் காணுதலால்'' என இப்பகுதி உவமை விளங்கத் திருத்தமுறப் பொலியும்.

—திருமயிலை உவமை வெண்பா 47

21\. ''பாவலா தாமிசையப பாக முவநதனூற''

எனச் சுவடி பிரதி செய்யப் பெற்றுளது. இதுவே

''பாவலர் தாமிசையப் பாக முவந்தனூற்

என அச்சிடப் பெற்றுளது. இப்பகுதியில் தளைப்பிறழ்வு இல்லை எனினும் பொருள் இல்லை உவமை கூறும் செய்தியாகிய உவந்த தனால் என்ற பகுதி கவனக் குறைவால் 'த' விடுபட்டு உவந் தனால் என எழுதப் பெற்றுள்ளது. இதை உணர்ந்து இப்பகுதி ''பாவலர் தாமிசையப் பாகமுவந்ததனால்'' என திருத்திக் கொள்ள வேண்டும்

—திருமயிலை உவமை வெண்பா 48

22\. ''வணடாா குழற பெண மருவுதலா லஙகா
டணடனுறை தென மயிலையாம''

எனச் சுவடி பிரதி செய்யப் பெற்று

''வண்டார் குழற்பெண் மருவுதலா லங்கா
டண்டனுறை தென் மயிலை யாம்''

எனப் பிழைபட அச்சில் வந்துளது இதில் முதலடி ஈற்றுச்சீர் ''லங்கா ''மாச்சீர், அடுத்த அடி ''டண்டன்'' என்பதும் மாச்சீரா தலால் பிழை. பொருளும் சரியாக வமையவில்லை. ''மருவுதலா லாலங்கா டண்டன்'' என லா என்ற எழுத்துக்குறை உணர்ந்து நிரப்பப் பெற்றால் இலக்கணவமைதியும் பொருளமைதியும் பெறும்

—திருமயிலை உவமை வெண்பா 52

23\. ''கபால நாடகம பெண காணுதலாற றெனபுலியூா
கபாலன வாழ்மயிலை காண்''

எனச் சுவடி பிரதி செய்யப் பெற்று

''கபால நாடகம்பெண் காணுதலாற் றென்புலியூர்
கபாலன் வாழ் மயிலை காண்''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது முதலடி இறுதிச்சீரும் அடுத்த அடி முதற்சீரும் காயும் நிரையுமாக வந்து தளை கெட்டது. இதில் இறுதியடி முதற்சீரில் 'காபாலன்'' என்பதில் கால்விடுபட்டிருப்

பதை உணர்ந்து திருத்தம் கொள்வதுடன் முதலடி முதற் சீரையும் எதுகைக்காக காபால எனக் கொளின் அதன் முன்வரும் சீர் நாடகம் என்ற கூவிளமும் தளை கெடாமல் பாட்டு திருத்தம் பெறும்.

—திருமயிலை உவமை வெண்பா 69.

24. 'புந்தி யிசைநதுபூந துறையால'

என ஏட்டுச் சுவடியில் பிரதி செய்யப் பெற்றிருக்கும். இது

புந்தி யிசைந்து பூந்துறையால்

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதி யாப்பமைதியும் பொருளும் கெடவமைந்துள்ளது. **இசைந்து பூந்துறை** என்ற சீர்கள் தளை பிறழ்கின்றன. இப்பாடல் திருநெல்வேலி பற்றி வருவதால் திருநெல்வேலியில் **சிந்து பூந்துறை**' என்ற பகுதி இருப்பதை உணர்ந்தால், "**இசைந்து**"என்ற சீர் "**இசைசிந்து**" என்றமைய வேண்டும் என்பது புலனாகும். '**சி**' என்ற சொல் விடுபட்டுள்ளது விளங்கும். விடுபட்டுள்ள எழுத்தைச் சேர்க்கின் **இசைந்து** என்ற மாச்சீர், **இசைசிந்து** எனக் காய்ச்சீராகி தளை பொருந்தும்.

—திருமயிலை உவமை வெண்பா 110.

25. 'அனபெதிரியா வாகநதகழியாயத
துனபாருலகமெனத தொனறுமிருள'

எனச் சுவடியில் பிரதி செய்யப் பெற்றிருக்கும். இது

"அன்பே திரியா ஆகந் தகழியாய்த்
துன்பா ருலகமெனத் தோன்றுமிருள்"

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப் பகுதியில் பொருளமைதி காணப் பெறினும், யாப்பமைதி இல்லை. "**திரியா**" "**ஆகம்**" என்பது மாமுன் நேர்வந்து தளை கெட்டது. திரியா என்ற புளி மாச்சீர், காய்ச்சீராக வமைந்திருத்தல் வேண்டும். இச்சீரில் '**க**' என்ற எழுத்து கவனக் குறைவால் விடுபட்டது. இந்த எழுத்தைச் சேர்த்துத் '**திரியாக**' என புளிமாங்காய்ச் சீராக்கினால் யாப்பு இலக்கண வமைதியுடன் "**அன்பே திரியாக ஆகந் தகழியாய்**" எனப் பாடல் அமையும்.

—பணவிடு தூது கண்ணி 290

26. "சிததிரைமெல வையா சிகருமருங கலசசெபபீநத
திவவியா"

என்பது ஏட்டில் செய்யப் பெற்ற பிரதி. இது

—சித்திரை மேல்

''வையாசிக்கும் அருங்கலச் செப்பீந்த திவ்வியா''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் எதுகை அமைய வில்லை, மோனையும் இல்லை. தளையும் பிறழ்கிறது. முதலடி தனிச்சீர் சித்திரை மே என்றமைந்து 'ல்' என்ற மெய் 'ல'கரமாக அடுத்த அடி முதலில் அமைய வேண்டும் அவ்விதமமைத்துப் பார்க்கின் அடுத்த அடி ''லவையாசி'' எனவமையும். எதுகையை நோக்கி 'வ்' விடுபட்டமை புலனாகும் இவ்விதம் திருத்தினால் தளையும் ஒழுங்காகவமையும். மோனையும் பெறும். எனவே

'-சித்திரைமே

லவ்வையா சிக்கு மருங்கலச் செப்பீந்த
திவ்வியா'

எனப் பாடல் திருத்தமாக அமையும்

—அப்பாண்டை நாதர் உலா 157.

27. செநதழவண சடகொப ராடி ஞசல

என ஏட்டுப் பிரதியில் காணப்படும். இது

செந்தழவண் சடகோப ராடி ஞசல்

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. எண்சீர் விருத்தம் அடி அளவொத்த மைந்ததாயினும் ''செந்தழவண்'' என்ற சீருக்குப் பொருள் ஏதும் இல்லை. இது செந்தமிழ்வண் சடகோபர்'' என இருக்க வேண்டும் பிரதி செய்வோர் கவனக்குறைவால் செந்தமிழ் செந்தழ எனப் பிரதி செய்யப் பெற்றமை உணர்ந்து பிரதி செய்யப் பெறல் வேண்டும். நம்மாழ்வாரைச் செந்தமிழ் வண் சடகோபன் எனல் மரபு. எனவே

''செந்தமிழ்வண் சடகோப ராடி ஞசல்''

எனப் பிரதி செய்தல் வேண்டும்

R 5957 G Mss. Li Madras. சடகோபர் ஊஞ்சல் 14

28. சுறறுமணிச சதஙகை சிலமபலபி யாட

எனச் சுவடியில் பிரதி செய்யப் பெற்ற பகுதியை

சுற்றுமணிச் சதங்கை சிலம் பலபி யாட

எனக் காகிதத்தில் படி எடுத்துள்ளனர். சிலம்பலபி யாட என்பதற்குப் பொருள் ஏதும் இல்லை. ஏட்டில் பிரதி செய்தோர் தவறாக எழுதியதை அப்படியே பிரதி செய்யப் பெற்றுள்ளது ''சிலம்பலம்பி யாட'' என்ற சொற்றொடரே மூலத்தில் இருந்

திருக்க வேண்டும். கவனக்குறைவால் 'ம்' என்ற மெய் விடப்பட்டது. இதை உணர்ந்து பிரதி செய்யும் போது 'ம்' என்ற விடப்பட்ட எழுத்தை நிரப்ப வேண்டும். அப்போது 'சிலம்பலம்பி' என ஓசை நயமும், பொருட் செறிவும் அமையும் எனவே

சுற்றுமணிச் சதங்கைசிலம் பலம்பியாட

எனத் திருத்தமுறப் பிரதி செய்தல் வேண்டும்.

—சுவடி எண் 5957 சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நிலையம்
சடகோபர் ஊஞ்சல் 7

29. 'மாஙகனி விணடொழுகிய தணபசியதெனும
வ'ருககைமுட புறதத கனியின றெனும

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்றதைக் காகிதத்தில்

மாங்கனிவிண் டொழுகியதண் பசிய தேனும்
வருக்கை முட் புறத்த கனியின் தேனும்

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இது இரண்டு காய்ச்சீர் இரண்டு மாச்சீர் மடங்கி வந்த எண்சீர் விருத்தமாகும். எனவே ஐந்தாம் சீர் காய்ச்சீராக வமைதல் வேண்டும் மாச்சீராக வருதல்பிழை ஏதோ சொற்கள் விடுபட்டுள்ளன இதைக் கவனித்தால் "பலா" என்ற சொல் விடுபட்டது புரியும்.

வருக்கை பலா முட்புறத்த கனியின் றேனும்

என யாப்பமைதியுடன் பொருள்பொதிந்து இவ்வடி விளங்கும்

—சடகோபர் ஊஞ்சல் 14

30. குயிலொடு கூவியுங கொலகதுடுமயிலொடு மாடி
மகிழநதும

என்ற ஏட்டில் உள்ள பகுதி

குயிலோடு கூவியுங் கோலக் குடு
மயிலோடு மாடி மகிழ்ந்தும்

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. முதலடி இறுதிச் சீரில் ஈரசை இல்லாமல் "கூடு" என நிரையசைமாத்திரமே உள்ளது. எனவே ஏட்டிற் பிரதி செய்வோர் ஓரசையைக் கவனக் குறைவாக விட்டதையுணர்ந்து இப்பகுதியைப் படித்தால் "குடுமி" என்பதில் 'மி' விடுபட்டது விளங்கும் மேலும் மயிலோடு, குயிலோடு, என ஓடு என்பது நெடிலாகத் தேவையில்லை.

குயிலொடு கூவியுங் கோலக் குடுமி
மயிலொடு மாடி மகிழ்ந்தும்

எனவே பதிப்பிக்க வேண்டும்.

—மணவை திருவேங்கட நாதர் முகில் விடுதூது.

31. "பாலை யதிபா பரிவிஞடு நீ காமப பாலை யருளெனறு
பகருவாா"

என்பது ஓலைச் சுவடிப் பிரதி. இது

"பாலையதிபா பரிவினாடு நீகாமப்
பாலையரு ளென்று பகருவார்"

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் தளைபிறழ்வு ஏதும் இல்லை. ஆயினும் உரிய பொருள் காண்பதில் இடர் ஏற்படு கின்றது. படிக்கும் போதே ஏதோ ஓசை மிக்கிருப்பதாகத்தோன்று கின்றது. **பரிவினாடு** என்ற சீரில் இடையில் வந்துள்ள 'னா' என்ற நெடிலோசை சற்று மிக்கிருக்கின்றது குறில் கொம்பு 'ெ' விடுபட்டதே காரணமாகும். இதைச் சேர்த்துப் பதித்தால்

"பாலை யதிபா பரிவினொடு நீகாமப்
பாலையரு ளென்று பகருவார்"

என இப்பகுதி அமையும். பொருளமைதியும் ஓசை நயமும் பொலியும்

—சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி கண்ணி 347.

32. "வநதானறனது செஙகொல வாழ வெஙக மஙகையுடன"

எனச் சுவடியில் உள்ள பகுதி.

"வந்தான் தனது செங்கோல் வாழ்வேங்க
மங்கையுடன்"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. செங்கோல் வாழ்வு ஏங்க மங்கையுடன் என்பது சரியான பொருளும் இல்லை. மரபும் இல்லை. இங்கு ஏட்டில் பிரதி செய்தோர் கவனக் குறைவால் ஓாங்க என்பது வேங்க என வந்து பொருளே வேறு வகையில்

மாறுபட்டது.வோ என்பதில்‘ா’குறைந்ததால் நேர்ந்த குறை இது. இப்பகுதி,

வந்தான் தனது செங்கோல் வாழ்வோங்க மங்கையுடன்’’

என்றிருத்தல் வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 260

33. ‘‘தீதுபடா தெனளுளும வாழவாா பூவில்
திஙகளுும மாாிபெயயும தொசசியாமே’’

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற பகுதி

தீதுபடா தென்னாளும் வாழ்வார் பூவில்
திங்களும மாரிபெயயும் தேர்ச்சியாமே’’

என அச்சிற் பதிப்பாகியுள்ளது. இது 2 காய்ச்சீர் 2 மாச்சீர் மடங்கி வந்த எண் சீர்விருத்தத்தின் ஈற்றடியாகும். விருத்தங்கள் அடியளவொத்து வரல் மரபு. இப்பகுதியில் திங்களும் என விளச் சீராக உள்ளது. திங்களும் மாரி பெய்யும் என்பதும் மரபில்லை. மாதம் மும்மாரி பொழியும் என்பதே மரபாகும் எனவே இப் பகுதியில் முதற்சீர் திங்களும் என்ற எழுத்துக்களுக்கிடையே ‘மு’ என்ற எழுத்து விடப்பட்டுள்ளதை உணரலாம் திங்களுமும்’எனக் கொள்ளின், மறவாத, சார்ந்திருப்ப, உரைத்திடுவோன். என்ற பிற அடிச்சீருடன் அளவொத்தமைகின்றது.
இப்பகுதியைத்

தீதுபடா தென்னாளும் வாழ்வார் பூவில்
திங்களுமும் மாரிபெய்யும் தேர்ச்சி யாமே

எனப் பதிப்பிக்க வேண்டும்.

III குறில் நெடில் மயக்கம்

பண்டைய எழுத்துமுறை அமைப்பில் குறில் நெடில் வித்தியாசம் காணவியலாது, ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு, எ' 'ஏ' ஒ ஓ இவை எல்லாம் குறிலாகவே அமையப்பெற்றிருக்கும் இவற்றால் ஏட்டைப் பிரதி செய்யும் போது ஏற்படும் மயக்கங்கள் பலவாகும்.) இவைகளையும் எதுகை, மோனை, சீர், தளை முதலிய யாப்பமைதிகளினாலும், ஓசைநயத்தாலுமே உணர முடியும். இங்கு நெடில் குறிலாகவும், குறில் நெடிலாகவும் பிரதி செய்யப் பெற்ற, பதிப்பிக்கப் பெற்ற இடங்களை உதாரணங்களுடன் காட்டி அவற்றை எவ்விதம் நெடில் எனக் கொள்வது என்பதும் குறிலையே மயங்கி நெடிலாகப் பிரதி செய்தவற்றை எவ்விதம் குறிலெனக் கொள்வதென்பதும் விளக்கப்பெற்றுள்ளன

34. "நெரியருமமீனவரு நினறுதினம பொருதலாற"

எனச் சுவடியில் பிரதி செய்யப் பெற்றிருக்கும் இது.

"நேரியரும் மீனவரும் நின்று தினம் பொருதலாற்"

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் நின்றுதினம் பொருதலாற் என்ற சீர்கள் காய்முன் நிரை வந்து தளை பிறழ்ந்தது ஏட்டில் (குறில் நெடில் வித்யாசம் காணமுடியாதாகையால்) 'போ' என்ற நெடிலும் 'பொ' என்றே இருப்பதை உணராமல் மயங்கி குறிலாகவே பதிப்பிக்சப் பெற்றுளது. இதை உணர்ந்து நெடிலாக்கினால் போருதலாற் என வமைந்து தளை சீர்படும் ஆயினும் பொருளில் மயக்கம் உண்டாகின்றது. ஏட்டைப் பிரதி செய்பவர் கேட்டெழுதிய நிலையில் வல்லின'று'க்குப் பதில் இடையினத்தை எழுதி வல்லொற்றையும் விட்டு விட்டார் போலும்.

இவற்றைத் தெளிந்து "போற்றுதலாற்" என்று பதிப்பித்தால் பாடல் யாப்பு பொருளமைதியுடன் நேரியரும் மீனவரும் நின்று தினம் போற்றுதலாற் என வமையும். இச்சீரில் குறில் நெடில் வல்லின இடையின மயக்கம ஒற்று விடப்பட்டதுமாகிய மூன்று பிழைகள் வந்துள்ளன என்பது உணரலாம்.

—திருமயில உவமை வெண்பா 31.

35. 'அமைவுறுமெறகொளினணியா'

எனச் சுவடி பிரதி செய்யப் பெற்றிருக்கும். இது

"அமைவுறுமேற் கொளினணியா"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது.

இப்பகுதியில், அமைவுறு மேற் - கொளினணியா என்பது காய்முன் நிரைவந்து தளை கெடுகின்றது. ஏடுகளில் நெடிற் குறியீட்டு கொம்பு வித்தியாசம் காண முடியாததால் ஏற்பட்ட மயக்கம் எனினும் மெற்கொ என்பதில் பதிப்பாளர்மே என நெடிலை உபயோகப்படுத்தியுள்ளார், தளை பிறழ்வு கவனிக்கப் பெறவில்லை. தளைபிறழ்வை யுணர்ந்து கொளின் என்பதை கோளின் எனப் பதித்திருக்க வேண்டும்

"அமைவுறுமேற் கோளி னணியால்"

எனவமைப்பின் துள்ளலோசையுடன் யாப்பமைதி பொலியும்

—திருமயிலை உவமை வெண்பா 79.

36. "வெண்டரு மொன பானவசுகக ளெணமரெ
யெழாகுங்
கொணடலே

என்பது சுவடிப் பிரதி. இது

"வேண்டரு மொன் பான்வசுக்க ளெண்மரே
யேழாகுங்
கொண்டலே"

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதில் முதலடி வேண்டரு என்பது இரண்டாமடி "கொண்டலே" என்பதற்கு எதுகையாக வமையவில்லை. மேலும் இவ்வடியில் மோனையும் இல்லை பொருளும் புரியவில்லை. ஏட்டில் வெண்டரும் என்பதன் பொருள் விளங்காமல் வேண்டரும் எனப் பதிப்பிக்கப் பெற்றது போலும். அப்போதும் பொருள் புரியவில்லை. இருந்தபடியே வெண்டரும் எனப் பதிப்பித்தால் எ, வகர உடம்படு மெய்பெற்று

வெ என வந்தது புலனாகும். எண் + தரு எண்டரு வகர உடம் படுமெய் பெற்று வெண்டருவாயிற்று என உணரின் எதுகை மோனை நயம் பொருட் பொலிவு அமையும்

> "எண்டரு மொன் பான்வசுக்க ளெண்மரே ஏழாகுங்
> கொண்டலே"

எனத் திருத்த வேண்டும்.

—அமுதரஸமஞ்சரி 73

37. "தநதரெ குாமாவ தாரமால எநதை"

எனச் சுவடிக் கண் காணப் பெற்றிருக்கும். இது

> "தந்தரே குரமாவ தாரமால் எந்தை"

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது இப்பகுதிக்குப் பொருளும் விளங்கவில்லை. தளையும் கெட்டுள்ளது. குறில் நெடில் மயக்கமே இதன் காரணம். 'ா' விடப்பட்டுள்ளது. ஏட்டில் உள்ளபடியே இருந்தால் ரெகுர மாவதாரமால் என வமைந்து 'ா' விடப்பட்டது விளங்கும். காலைப் பூர்த்தி செய்து தந்த ரெகு ராமாவ தாரமால் எந்தை" என வமைப்பதே சரியான பாடமாகும் பதிப்பவர் கைவந்த போக்கில் ஏட்டிற் சரியாகவுள்ள குறிலை நெடிலாக்கியதால் வந்த பிழை இது.

—அமுதரஸ மஞ்சரி 124

38. "பறறு மழைமாரி பொற சஙகிலிகளாக"

என ஏட்டில் உள்ள பகுதியைப்

> "பற்று மழை மாரிபோற் சங்கிலிகளாக"

எனப் பிரதிசெய்யப் பெற்றுள்ளது.

ஏடுகளில் குறிலும் நெடிலும் வேறுபாடின்றி ஒரே மாதிரியே எழுதப்பெற்றிருக்கும். பாட்டின் யாப்பு, ஓசை இவற்றாலே இவை உணரப்பெறல் வேண்டும்.

இப்பாடல் 2 காய்ச்சீர், 2 மாச்சீர் ஆக 4 சீர் மடங்கி வரும் எண் சீர் விருத்தம். விருத்தத்தில் அடிகள் அளவொத்து வரல் வேண்டும். இதில் முதற்சீர் காய்ச்சீர், இரண்டாம் சீர் விளச்சீர் மூன்றாவது காய்ச்சீர் நாலாவது மாச்சீர் ஆக அமையப்பெற்றுள் ளது. மற்றை அடிகளோடு அளவு ஒத்து வரவில்லை.

ஊஞ்சற்பாடலில் மழைத்தாரையைப் பொற் சங்கிலிகளாகக் கூறும்தொடரை (ஏட்டில் உள்ளதை) உணராமல் மாரி பொற்

சங்கிலிகளாக என்பதில் 'பொற் என்பதை 'போற்' என நெடிலாக்கியது பிழையாகும்.

பற்றுமழை மாரிபொற்சங் கிலிக ளாக

எனப் பிரதிசெய்யின், 2 காய், 2 மாச்சீர்களுடன், பிற அடிகளுடன் அளவொத்துப் பொருள்நயமுங் கொண்டு பாடல் பொலியும்

—ஆதிநாதர் ஊஞ்சல்-4

39. வெருகவொளவந தடிததிழுததுக கொடு பொய செநதி

என ஏட்டுப் பிரதியில காணப்பெறுவதை

வெருக்கொளவந் தடித்திழுததுக் கொடு பொய் செந்தி

எனப் பிரதி செய்துள்ளனர் இப்பாடலில் சீர் அமைப்புப் பிழை இல்லையாயினும் பொருள் காண்பதில் பொருத்தம் அமையவில்லை

—காலதூதர்

வெருக்கொளவந் தடித்திழுத்துக் கொடு பொய செந்தி
மிகு நிறையத் தூடழுந்த விடாமலே தான்

என வரும் பகுதிகளைப் பார்க்கும்போது, நெடில் குறிலாக மயங்கி (போய் - பொய், செந்தீ - செந்தி) வந்தது உணரப்பெறும்

வெருக் கொளவந் தடித்திழுத்துக் கொடுபோய் செந்தீ

எனப் பிரதி செய்தல்வேண்டும்

—ஆதிநாதர் ஊஞ்சல்

40. சாறறவலல சானகிபூந தாமம வெட்டு

என்பது சுவடியாகும். இது

சாற்றவல்ல சானகிபூந் தாமம் வெட்டு

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. ''தாமம் வெட்டு'' எனப் பிரதி செய்யப் பெற்றதற்கு பொருள் காணில் மாலையை வெட்டு என விபரீதமாகப் பொருளமையும். வெட்டு என்பதில் உள்ள குறிலாகிய வெ, வே என நெடில் வடிவம்பெற்றால் தாமம்வேட்டு, மாலையை விரும்பி எனவமையும். இப்பொருள் பின்னடிகளுடன் பொருந்துவதும் காணலாம் எனவே

சாற்றவல்ல சானகிபூந் தாமம் வேட்டு

எனப் பிரதி செய்தல் வேண்டும்

—ஆதிநாதர் ஊஞ்சல் 17

41. பூஙகமலத தொனபாவு மிகக வாதிப

எனச் சுவடிப் பிரதியில் காணப் பெறும் பகுதி

பூங்கமலத் தொன்பரவு மிக்க வாதிப்

என்று பிரதி செய்யப் பெற்றுளது.

ஏட்டுச் சுவடிகளில் குறில் நெடில் வித்தியாசங்காணக் குறியீடு கள் இல்லை. நெடிலுக்கும், குறிலுக்கும் 'ெ' என்ற குறிற் கொம்பையே பயன்படுத்துவார்கள். 'ே' என்ற நெடிலைப் பயன் படுத்தும் குறியீடு பிற்காலத்தில்தான் வந்தது. எனவே பொருளையும் ஓசையையும் கொண்டே இது குறில் இது நெடில் என அறியலாம். இப்பகுதியில் 'கமலத்தொன்' என்பதற்குப் பொருள் இல்லை. இது 'கமலத்தோன்' என நெடிலாகவமையின் பொருள் கொடுக்கும் எனவே

பூங்கமலத் தோன்பரவு மிக்க வாதிப்

என்றே பிரதி செய்தல் வேண்டும்

-ஆதிநாதர் ஊஞ்சல் 30

42. ஆதியிலெடசிமி தெவியாரா டிரூஞசல

எனச் சுவடியில் உள்ள பகுதி

ஆதியிலே டசிமி தேவியா ராடி ரூஞ்சல்

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இப் பகுதியில் சீர்கள் செவ்வை யாகப் பிரிக்க இயலவில்லை. குறிலை நெடிலாக மயங்கியும், மெய்யை உயிர்மெய்யாகப் புள்ளியின்மையால் அப்படியே பிரதி செய்ததும், ஏட்டில், கவனக்குறைவாக மிகையாக 'ரா' என்ற எழுத்து சேர்க்கப் பெற்றதும் ஆகிய மூன்று பிழைகள் வந்துள்ளன. எனவே சீர்பிரிக்கவும், ஓசை நயங்காணவும் இயலவில்லை.

1. ஆதியிலே - ஆதியிலெ, எனக் குறிலாகவும்
2. டசிமி - ட்சிமி என 'ட' ட் என மெய்யாகவும்
3. தேவியாராடிர் என்பது தேவி யாடிர் என மிகை 'ரா' நீக்கப் பெற்றும் இருக்க வேண்டும். அவ்விதமாயில்

''ஆதியிலெட் சிமிதேவி யாடி ரூஞ்சல்''

என அமையும். யாப்பும் ஓசையும் சிறக்கும்

—நாச்சியார் ஊஞ்சல் 4

43. ‘‘கொஙகுமலா சொகுழநதை மாயககூததன
கொளுரன றிருபபெரை வாசுதெவன’’

என்ற சுவடியிலுள்ள பகுதி

‘‘கொங்குமலர் சேர்குழந்தை மாயக் கூத்தன்
கொளூரன் றிருப்பேரை வாசுதேவன்’’

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இதில் இரண்டாவதடி முதற்சீர் அளவொத்து வரவில்லை இப்பாடலில் சில பாண்டி நாட்டு வைணவத் திருப்பதிப் பெயர்சள் வந்துள்ளன. குழந்தை குளந்தை என்னும் பதியாகும், (ழ-ள மயங்கி எழுதுவது தென் பாண்டி நாட்டு மரபு) ‘கொளூரன் என்பதில் ‘கொ’ நெடிலாகிக் கோ’ எனப் பெற்றுக் கோளூரன் ஆகும். எனவே

‘‘கொங்குமலர் சேர்குளந்தை மாயக் கூத்தன்
கோளூரன் திருப்பேரை வாசுதேவன்’’

எனத் திருத்தமாகப் பிரதி செய்தல் வேண்டும்.

—சடகோபர் ஊஞ்சல் 9

44. ‘‘கொறறெனுங குமுதமுகை விரிநத தெனும’’

என்ற சுவடிப் பகுதி.

‘‘கொற்றேனுங் குமுதமுகை விரிந்த தேனும்’’

எனப் பிரதி செய்யப் பெற்றுளது.

‘கொற்றேன்’ என்பதற்குப் பொருள் புரியவில்லை. பாடலை மேலும் படிக்கையில், ஊற்றூரி என அடுத்த அடி எதுகை நெடிலாகக் காணப் பெற்றதால் கொற்றேன் பிழை, கோற்றேன் (கொம்புத்தேன்)என இருக்கவேண்டும் என்பது புலனாகும் எனவே

‘‘கோற்றேனும் குமுதமுகை யவிழ்ந்த தேனும்’’

என்று திருத்திப் பிரதி செய்தல்வேண்டும்.

- சடகோபர்-ஊஞ்சல் 18

45. ‘சடையானைக கொகுலமெயததுவநதநாளில’

என்ற சுவடிப் பகுதி

‘சடையானைக் கோகுலமெய்த்துவந்த நாளில்’

எனப் பிரதி செய்யப் பெற்றுள்ளது.

கோகுலமெய்த்து என்ற பகுதி பொருள் விளங்கவில்லை. 'மெ' என்ற குறில் 'மே' என்ற நெடிலாகில் "கோகுல மேய்த்து உவந்த நாளில்" எனவமையும் எனவே குறில் நெடில் மயக்கத்தை உணர்ந்து

"சடையானைக் கோகுலமேய்த் துவந்த நாளில்"

எனப் பிரதி செய்யவேண்டும்

—சடகோபர் ஊஞ்சல் 8

46. "கொளுர் வலலியராண டிலாள மகிழநது வெட்ட
வைதத மாநிதிப

பெருமா ளாடி ரூஞ்சல்

என்றுள்ள சுவடிப் பகுதி

"கோளுர்

"வல்லியராண் டிலாள் மகிழ்ந்து வெட்ட வைத்த
மாநிதிப் பெருமா ளாடி ரூஞ்சல்"

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இதில் இரண்டாமடியில் ஒரு சீர் இல்லை. முதலடியில் வெட்ட வைத்த என்பதற்குப் பொருள் முடிவு சரியாக இல்லை. இவ்வூஞ்சல் வைத்தமாநிதிப் பெருமாளுஞ்சல். வைத்தமாநிதிப்பெருமா ளாடி ரூஞ்சல் என்றே ஒவ்வொரு பாடல்இறுதியடியும் அமைந்துளது. எனவே முதலடி இறுதிவைத்த என்ற எழுத்துக்கள் அடுத்த அடியிற்சேரவேண்டும் வெட்ட என்பது பிழை வேட்ட என 'வெ' நெடிலா 'வே' என வரல் வேண்டும் எனவே இவ்வடி

"வல்லிய ராண்டிலாள் மகிழ்ந்து வேட்ட
வைத்தமா நிதிப்பெருமா ளாடி ரூஞ்சல்"

எனப் பிரதி செய்யப் பெறல்வேண்டும்

வேட்ட-விரும்பிய என்பது பொருளாகும். வெட்ட என்றால் வேறு விபரீதமாகும்

—வைத்த மாநிதிப்பெருமாளுஞ்சல் 8

47. "மெவுகொடைக கனனனினு மெனமடஙகு கொடை
கொடுபபொன மிகுநத நூலகள"

என்ற அடி

"மேவுகொடைக் கன்னனினு மேன் மடங்கு
கொடை கொடுப்போன் மிகுந்த நூல்கள்"

என அச்சிற்பதிக்கப் பெற்றுளது இப்பகுதியில் **மேன்மடங்கு** என்ற பகுதி பிழையாகும். இரண்டு மடங்கு நாலுமடங்கு, எண் மடங்கு, மும்மடங்கு எனக் கூறலேமரபு. எனவே மேன்மடங்கு என்பதில் மே என்ற நெடில் மெ எனக் குறிலாகி 'ன்' என்பது 'ண்' ஆகிக் "**கன்னனினு மெண்மடங்கு கொடை கொடுப்போன்**" என வரல்வேண்டும். ஏட்டில் மெ என்ற குறிலை மே என நெடிலாக்கி யது பதிப்பாளர் செய்தபிழை

—சுசீலவள்ளல் அம்மானை கீர்த்திக்கவி

48. "ரெுதத வடமயிலெ வுனபாலெவரிநத முதது வடமீ
நதாா
மொழி கெனன"

என்ற சுவடிப் பகுதி

"ரெுத்த வடமயிலே வுன்பாலே வரிந்த
முத்துவட மீந்தார் மொழிகென்ன"

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. "**வுன்பா**" "லேவரிந்த" என்ற சீர்கள் தளை பிறழ்வு. இது ஏட்டில் லெவா் என்பதை **லேவா்** எனப் பதித்ததால் வந்த பிழை. இதைத் தவிர்த்து ஏட்டிலுள்ள வாறே "**லெவரிந்த**" எனப் பதித்திருந்தால் பிழை நேராது

"ரெுத்த வடமயிலே வுன்பா லெவரிந்த
முத்துவட மீந்தார் மொழிகென்ன"

என்றுதிருத்தமாக வமையும்.

—சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 135

49. 'வழியருமபனனூல வளம்பெறருய பாழியுடை'

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற இப்பகுதி

'வழியரும் பன்னூல் வளம்பெற்ருய்-பாழியுடை'

எனப்பதிப்பிக்கப் பெற்றுளது. இந்த அடியில் தனிச்சொல் '**பாழியுடை**" என்பதற்கேற்ப எதுகை அமையாமல் பிழைபட வுள்ளது. "**பாழி**" என்பதற்கேற்ப "**வழியரும்**" என்ற சீர் "**வாழியரும்**" எனவமைந்து இப்பகுதி

'வாழியரும் பன்னூல் வளம்பெற்ருய்'

எனப் பதிக்கப் பெறின் திருத்தமுறும்

—சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 327

புள்ளி மயக்கம்

ஓலைச் சுவடியில் எழுத்துக்களின் மேற் புள்ளியே இராது. மெய்யெழுத்துக்கள்யாவும், உயிர்மெய்யாகவே காட்சிதரும்) எனவே ஏட்டைப் பிரதி செய்பவர்கள் பலஇடங்களில், மெய் யொற்று வரவேண்டிய இடங்களில் புள்ளியிடாமல் உயிர் மெய் யாகவும், உயிர்மெய் வரவேண்டிய இடங்களிற் பிழையாகப் புள்ளிவைத்து ஒற்றாகவும் மயங்கிப் பிரதி செய்து விடுகின்றனர். அச்சில் பதிப்பவர்களும் அப்படியே பிழைபடப் பதித்தும் விடுகின்றனர். இவ்வாறமைந்த இடங்கள் சில உதாரணமாகக் காட்டப் பெற்று உண்மைவடிவையறியும் வகை யாப்பிலக்கண உதவியுடன் விளக்கம் பெற்றுள்ளன.

50. நீர் கொணட பாாநெடுங்கொணடல போலுதவும்

எனச்சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற இப்பகுதி.

நீர் கொண்ட பார் நெடுங் கொண்டல் போலுதவும்

எனப் பதிப்பிக்கப்பெற்றுளது. இதில் கொண்டல் போலுதவும் என்பது தளைசெட்டது. மேலும் 'நீர் கொண்ட பார்' நெடுங் கொண்டல் போலுதவும்' என்ற பகுதியில் உவமை மரபுக்கு ஏற்ப இல்லை. பாருக்குக் கொண்டல் பயன் கருதாமல் உதவும் என்பதே மரபு. இந்தக் கருத்துடன் சுவடிப் பிரதியைப் பார்த்தால் பதிப்பில் உள்ள பிழைபுரியும. 'பார' என்ற சொல்லுக்குத் தவறாக 'ர'வில் புள்ளி வைத்துப் 'பார்' எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. புள்ளி நீக்கின், நீர் கொண்ட (நீரைத்தன்பாற் கொண்டு) அதனால். பாரம் (கனம்) கொண்ட கொண்டல்-நீருண்டமேகம், எனப் பொருள் படும். கார்மேகத்துக்கு கனம் என்றே ஒரு பெயரும் உண்டு எனவே

"நீர்கொண்ட பார நெடுங்கொண்டல் போலுதவும்"

எனக் கொண்டால் பொருட்செறிவும் யாப்பமைதியும் பெறலாம்

—அமுதரஸ மஞ்சரி-1

51. ஆக்கிஞசுகரீ பனணடகடாகங குலுஙக

எனச் சுவடிப்பிரதியில் உள்ள பகுதி

ஆக்கிஞ சுக்ரீபன்ணடகடாகங்குலுங்க

என்று அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது.

இப்பகுதிக்குப் பொருளும் புரியவில்லை தளையும் பிறழ்கின்றது. சுவடியில் எழுது முறைக்கேற்ப ஒழுங்காகவே பிரதி செய்யப் பெற்ற போதிலும், பதிப்பாசிரியருக்குப் புள்ளிகளை வைப்பதில்ஏற்பட்ட மயக்கமே பிழைக்குக் காரணம். "சுக்ரீபன்" என இறுதியில் 'ன்' எனப் புள்ளிவைத்ததும், 'ண்'என்பதற்குப் புள்ளியிடாமல் விட்டதும் பிழையாகும். இப்பிழைகளை நீக்கி

"ஆக்கிஞ சுக்ரீப னண்டகடா கங்குலுங்க"

எனப் பொருளமைதி, யாப்பமைதியுடன் பதிப்பிக்க வேண்டும்.

—அமுதரஸ மஞ்சரி 12

52. க-க், ர-க மயக்கம்

'கருமாரி பொனற குழறகனனியிடை மினனிக
ரருமாரி யையுமை முககணணி'

எனச் சுவடியில் உள்ள பகுதி

"கருமாரி போன்றகுழற் கன்னியிடை மின்னிக
ரருமாரி யையுமை முக்கண்ணி"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளது இந்தக் கண்ணி நிரையெதுகை பெற்றுள்ள கண்ணியாதலால் முதலடி இறுதிச்சீர் 'மின்னிக' எனக் கூவிளமாக இருக்கலாகாது. 'மின்னிக்' எனத் தேமாவாகவமைதலே வெண்பா விதியாகும். எனவே 'க' என்ற வல்றொற்றையடுத்து ககர, வல்லின உயிர்மெய்யே இரட்டிக்கும் ஆதலால் 'ரருமாரி' என்பது பிழை. ஏட்டைப் பிரதி செய்வோர் கவனக் குறைவால் கவுக்குப் பதில் 'ர' என எழுதியுள்ளார் இதை யுணர்ந்தால் இப்பகுதி

"கருமாரி போன்ற குழற் கன்னியிடை மின்னிக்
கருமாரி"

ஐயுமைமுக் கண்ணி எனவமையும் இப்படியமக்கின் இரண்டாம் அடிமோனை பெற்றுத் திருத்தமாகும்.

—அமுதரஸ மஞ்சரி கண்ணி 24

53. 'தஙகத தகடு மதத நதிமருபபுத தகடும்'

எனச் சுவடியில் உள்ள பகுதி

"தங்கத் தகடு மத்த நதிமருப்புத் தகடும்"

எனப்பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அச்சுப் பதிப்பில் உள்ளபடி இவ்வடியை நோக்கினால் தளைபிறழ்வுகள் புலனாகும். '**தகடு**'- புளிமா. இதன் முன் '**மத்தநதி**'-கூவிளங்காயும், அடுத்துக் கூவிளங் காய் முன் '**மருப்பு**' என விளமும் வந்து தளை கெட்டுள்ளன. மேலும் மோனை இல்லை. '**மத்தநதி**' என்பதன் பொருளும், நதிக்குமருப்பு (கொம்பு) உண்டா என்ற ஐயமும் உண்டாகின்றன. இவ்வளவும் ஏட்டில் புள்ளி இல்லாமல் இருப்பதில் புள்ளி சரியாக வைக்கத் தெரியாமையால் வந்ததாகும்.

"தங்கத் தகடுமத் தந்திமருப் புத்தகடும்"

என **நதி** என்று கொள்ளாமல் **தந்தி** எனக் கொண்டு '**ந**' வில் புள்ளியிட வேண்டும், அப்போது தந்தி-யானை என்பதும் மருப்பு கொம்பு எனவும் பொருள் படும்

—அமுதரஸ மஞ்சரி-38

54. "நாதமாய முனனுதிதத நஙகளளகபபனமது சூதன"

என்ற சுவடிப் பகுதி

'நாதமாய் முன்னுதித்த நங்கள்ள கப்பன்மது சூதன்'

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் நங்கள்ள கப்பன் மது என்ற சீர்களுக்குப் பொருள் புரியவில்லை. **நங்கள்ள** என ளகரத்தில் புள்ளி வைத்தது பிழை. புள்ளியிராமல் இருந்தால் நங்களள கப்பன் எனவமையும். இது நங்கள் **அளகப்பன்** எனப் பொருள் தரும். எனவே தேவையற்ற இடத்தில் புள்ளியமைப் பதனால் ஏற்பட்ட பிழை இது எனப்புரியும். ஏடுகளில் புள்ளி களே இராதாகையால் புள்ளி வைப்பதிற் பொருள் உணர்ந்து புள்ளி வைக்கவும் தேவையற்ற இடத்தில் புள்ளி வைத்து மயக்கம் ஏற்படுத்தாமலிருக்கவும் அறிதல் வேண்டும்.

55. "ததததையனெ யாரமொகன தாணவராயனெயு"

என ஏட்டுச் சுவடியில் பிரதி செய்யப் பெற்றிருக்கும். இது

"தத்தையனே யார்மோகன தாணவராயனேயு"

மென அச்சில் பதிப்பிடப் பெற்றுளது. இதில் தளை பிறழ்வாக இருக்கின்றது. **தாணவராயனை** என்பதும் ஏட்டில் தவறாகப் பிரதி செய்யப் பெற்றுள்ளது 'மோகன' என்பது '**மோகன்** எனவும், '**தாணவராயனை**' என்பது '**தாண்டவராயனை**' என (ண புள்ளி பெற்று '**ண்**' எனவும் ட விடுபட்டது சேர்ந்தும்) அமைந்து

"தத்தையனே யார்மோகன் தாண்டவ ராயனேயு"

எனத் திருத்தம் பெற்று அமையவேண்டும்

—அமுதரஸமஞ்சரி 133

56. தாககுமவரி சைததுரைதீத தாாபபன

எனச் சுவடியில் உள்ள பகுதி

தாக்கும்வரி சைத்துரைதீத் தார்ப்பன்

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. ஏட்டில் 'ாா' வரும் இடத்தில் காலையும் ரவையும் உணர வேண்டும். உணர்ந்தபின் பொருளமைதி கண்டு புள்ளியிடுவதைத் தீர்மானிக்க வேண்டும். இப் பகுதியில் 'தீததாாபபன' என்ற சொல் 'தீத்தாரப்பன்' என்பதாகும் இதை உணராமல் **தீத்தார்ப்பன்** என '**ர**' வில் புள்ளி வைத்தது பிழையாகும். இந்தப் பிழையை நீக்கித்

'தாக்கும்வரி சைத்துரைதீத் தாரப்பன்'

எனக் கொள்ளல் வேண்டும்

—அமுதரஸமஞ்சரி 136

57. "பாரப பொருபபிலப படாநது சொரியாமலத
தூரத தருவி வெளளந தொனருமலக காரகிலுஞ

எனச் சுவடிப் பிரதியில் உள்ள பகுதி

"பார்ப் பொருப்பில்ப் படர்ந்து சொரியாமல்த்
தூர்த் தருவி வெள்ளந் தோன்றுமல்க்-காரகிலுஞ்

என அச்சிடப் பெற்றுளது. இதில் தளைபிறழ்வால் முதலடி ஒரு சீர் குறைவது போலவும், இரண்டாமடி **வெள்ளந்-தோன்றமல்க் காரகில்** ஆகிய சீர்கள் ஒன்றொடொன்று தளை விரவி வராமலும் உள்ளன. தனிச் சொல் காரகில் என்பதற்கேற்ப எதுகை அமைய வில்லை. இக்குறை தவறாகப் புள்ளியமைத்தலால் வந்த பிழை யாகும். **பார்ப்பொரு** என்பதற்கு எதுகையாகத் **தூர்த்தருவி** என பதித்துள்ளனர். யாப்பமைதி பொருளமைதிகளைப் பதிப்பவர் கவனித்திருந்தால் இப்பிழை நேராது.

"பாரப் பொருப்பில்ப் படர்ந்து சொரியாமல்த்
தூரத் தருவிவெள்ளந தோன்றுமல்க்-காரகிலுஞ்

என எதுகை, தளை அமைதியும், பொருளமைதியும் காணக் கொள்ளல் வேண்டும்.

—அமுதரஸமஞ்சரி-147

58. "ஒதுகினற பசசை நாம பொடிபடாநது கொணட"

எனச் சுவடிப் பிரதியில் உள்ள பகுதி

ஓதுகின்ற பச்சைநாமப் பொடி படர்ந்துகொண்ட

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது இவ்வடி தளைபிறழ்வாக அமைந்துளது. பொருளும் விநோதமாகவுள்ளது; பச்சை 'நாமப் பொடி' எனப் பகர ஒற்று மிகையாக இரட்டித்துள்ளது. இப்பகுதியின் முன்னும்-பின்னும் உள்ள அடிகளைப் பார்க்கின் சூலுற்ற மங்கையின் அங்கவமைப்புக்களை இப்பகுதி கூறுவது புலனாகும். சூலுற்ற மங்கை உடலிற் பசலை படர்ந்து பச்சை நரம்பு வெளியே தோன்றும் என்ற கருத்தையே இப்பகுதி கூறுகின்றது. இதை உணர்ந்து இப்பகுதியை

"ஓதுகின்ற பச்சைநரம் போடிப் படர்ந்து கொண்ட"

எனப் பதிப்பிக்க வேண்டும்.

இதில் பகர ஒற்றுமிகை, நரம் என்பதில் ரகரமும் காலும் மயக்கம். மகரத்தில் புள்ளியிடாத மயக்கம். போடி என்பதில் குறில் நெடில் மயக்கம் ஆக 4 பிழைகள் நேர்ந்துள்ளன

—அமுதரஸமஞ்சரி 270

59. "கறபகப பொனனூாக கருளுவதா லறபால"

முருகனா

எனச் சுவடிப் பிரதியிலுள்ளதை

கற்பகப் பொன்னூர்க் கருளுவதா-லறபால
முருகனார்"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. லறபால என்ற தனிச்சீர் முருகனார் என்ற சீருடன் தளை பொருந்தவில்லை. லற்பால என்று காய்ச்சீராகச் செய்தது பிழை. இறுதி லகரஉயிர் மெய்யில் புள்ளியிட்டு 'ல்' என மெய்யெழுத்தாக்கி 'லற்பால்' எனப் பதித்திருக்க வேண்டும்.

''கற்பகப் பொன்னூர்க் கருளுவதா-லற்பால்
முருகனூர்

என்பதே சரியான பாடமாகும்.

—திருமயிலை உவமை வெண்பா 80

60. ''முதது ரெகைச சகிவநதாள மொகினிககனபா
முதது ரெகைச சகிவநதாள''

எனச் சுவடிப் பிரதியில் உள்ள பகுதி

முத்து ரேகைச் சகிவந்தாள் - மோகினிக் கனபா
முத்து ரேகைச் சகிவந்தாள்

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது; மேலும் **கனபா** என்பதற்கு **புகழ் பாவியா** என அடிக்குறிப்பில் உரையும் கூறப் பெற்றுளது. புள்ளி வைப்பதில் உள்ள மயக்கமே இவ்வாறு பொருளெழுதக் காரணமாகும். கனபா என்பதில் ன' புள்ளி பெற்று **கன்பா** வாகி

முத்து ரேகைச் சகி வந்தாள் மோகினிக்கன்பாம்
முத்து ரேகைச் சகி வந்தாள்

என்பதே சரியான பாடலமைப்பு. பொருளும் வெளிப்படையாகப் புலனாகும்.

—குறவஞ்சி-நவநீதேசுவரசுவாமி
குறவஞ்சிப் பாடல் 24.

61. ''வாழைப பதியகலூா வணமை வளாதிறககொல
கிழககளையூா
கிரியருகை வாழியநற''

என்ற சுவடிப்பிரதி

''வாழைப் பதியகலூர் வண்மை வளர்திறக்கோல்
கீழ்க்களையூர் கிரியருகை-வாழியநற்''

எனப் பதிப்பிக்கப் பெற்றது. இரண்டாமடி எதுகை பெறவில்லை. தளை பிறழ்கின்றது ஒரு சீரே விடுபட்டது போல மயக்கமளிக்கின்றது. இதில் '**கீழ்க்களையூர்**' என 'ழ'கரத்தில் தேவையற்ற புள்ளியமைத்தது பிழை. புள்ளியின்றி '**கீழக்களையூர் கிரியருகை**' என வமைத்து எதுகை நயம்பெறவும், யாப்பமைதி கொள்ளவும் பதிப்பிக்க வேண்டும்.

—அப்பாண்டை நாதர் உலா 19.

62. ‘‘பாஙகமலக் கண்ணினுடபடாதனநதன பணபுர வாராதனஞ
செய வரிவி லாழி’’

என்று சுவடிக்கண் உள்ள பகுதி

‘‘பாங்கமலக் கண்ணினுட்ப டாத னந்தன்
பண்புர வாரர் தனஞ்செய பரிவி லாழி’’

எனக் காகிதத்திற் பிரதி செய்யப்பெற்றுள்ளது. இதில் இரண்டா மடி அளவொத்து வரவில்லை. பொருளமைதியும் பெற முடிய வில்லை. ரர வந்த விடத்து எது ர எதுகால் எனப் புரியமாலும் காலிற் புள்ளியிட்டதனாலும் வந்த மயக்கம் இவை. மேலும் பண்பு ர என்ற வல்லின ‘ற’ பழஞ்சுவடிகளில் ர என்றிருப்பது புரி யாமல் இடையினமாகக் கொண்டு மயங்க நேரிட்டுள்ளது.

இதையே

‘‘பண்புற வா ராதனஞ்செய் பரிவி லாழி’’

எனத் திருத்திப் பிரதி செய்யவேண்டும். வாரா என்பதிற் தேவை யற்ற புள்ளியை வைத்து வாரர் எனக் கொண்டதும் ‘தனஞ்செய்’ என்பதை அருச்சுனன் என நினைந்து தனஞ்செய எனப் புள்ளியை இடாமல் விட்டதும் குறையாகும்.

—ஆதிநாதர் ஊஞ்சல் 29

63. வஞசிறை வெளளனனவா கனதது லாவு’’

என்ற சுவடிப்பகுதி

‘‘வஞ்சிறை வெள் ளன்னவர் கனத்து லாவு’’

எனப் பிரதி செய்யப் பெற்றுள்ளது.

அன்னவர் கனத்துலாவு என்ற பகுதிக்குப் பொருள் இல்லை. இது அன்னவா கனத்துலாவு என்பதாம். ‘அன்னவா’ வென்ற பகுதியைப் தவறாகப் புள்ளி வைத்து ‘அன்னவர் எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இதை யுணர்ந்து

‘அஞ்சிறைவெள் ளன்னவா கனத்து லாவு’

எனத் திருத்திப் பிரதி செய்தல் வேண்டும்.

—சடகோபர் ஊஞ்சல் 6

64. ‘கஞசமலா முகத்திலகு குருவொ வாட’

எனச் சுவடியில் உள்ள பகுதி.

கஞ்சமலர் முகத்தில்குறகுருவோ வாட

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இந்தப் பகுதி மற்றை அடி களுடன் அளவொத்திருக்கவில்லை.

'முகத்தில் குறகுரு வேர வாட' என்பதில் பொருளும் இல்லை. 'முகத்தில' என 'ல்' புள்ளி நீங்க வேண்டும். அப்படி நீக்கின் முகத்திலகுவாகும். இதன் முன் வந்த ற மிகை, இதை நீக்கில் முகத்திலகு குருவேர் வாட எனவமையும் இதிலும் இடையின 'ரு' பிழை. வல்லினமாகக் கொண்டு அமைந்தால் ''கஞ்சமலர் முகத்திலகுகுறுவேர் வாட'' எனத் திருத்தமாக வமையும்.

ற மிகை என நீக்காமல், 'ங்' என்ற மெய்யெழுத்தாகவும் கொள்ளலாம். அப்படிக் கொண்டால்

''கஞ்சமலர் முகத்திலகுங் குறுவேர் வாட''

எனவும் அமைக்கலாம்.

—சடகோபர் ஊஞ்சல் 6

65. 'சந்ததமாராதனஞ்செய சக்கிரபாணி'

என்ற சுவடிப்பகுதி

'சந்ததமாரர் தனஞ்செய சக்கிர பாணி'

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இப்பிரதி செய்யப் பெற்ற பகுதிக்குப் பொருள் விளங்கவில்லை. ரார என மூன்று கால்கள் வந்த இடத்தில் எது கால் எது ர எனப் புரியாதால் ஏற்பட்ட குழப்பம். மேலும் தனஞ்செய் என்பதில் இறுதி மெய்யிற் புள்ளி யிடாமல் தனஞ்செய எனப்பிரதி செய்ததும் பிழையாகும்.

'சந்ததமா ராதனஞ்செய் சக்கிரபாணி'

என்பதே திருத்தமான வடிவமாகும்.

—வைத்தமாநிதி ஊஞ்சல் 6

66. 'நிறுபடவெகுண்டுநெரில நின்றதிர'

என்ற சுவடிப் பகுதி

''நீறு படவெகுண்டு நேரிலா நின்றதிர''

என அச்சிடப் பெற்றுளது. இப்பகுதியில் தளைபிறழ்வு இல்லை யேனும் நேரிலா நின்றதிர என்ற சீர்கள் பொருளமைதி கொள்ள வில்லை. இது காலுக்கும், மெய்யெழுத்துக்கும் புள்ளியின்றி ஏட்டில் இருப்பதால் வந்த மயக்கமாகும். நேரிலா என்பதில் உள்ள நெடில் 'லா' 'லர்' எனப் புள்ளி பெற்றமைய வேண்டும்.

'நீறு படவெகுண்டு நேரிலர் நின்றதிர'

எனப் பதிப்பிக்க வேண்டும்.

—திருவேங்கடநாதன் முகில் விடுதூது 45

67. ''தனனிற சுசீல மனனா தாமமுறை தப்பாமல'

என்று சுவடியில் பகுதி

'தன்னிற் சுசீல மன்னர் தாம்முறை தப்பாமல்'

எனப்பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் பிழை ஏதுமில்லையா யினும். அடுத்த அடியில் நன்னீதி குன்றாமல் என வருதலாலும், ஏட்டில் தாம் முறை எனப்பிரித்து எழுதாமல் தாமுறை எனவே எழுதல் மரபாதலாலும், மகரம் ஏன் ஏட்டில் எழுதப் பெற்றது என்பதைச் சிந்திக்கையில். 'ா' புள்ளி பெற்றும், 'ம்' புள்ளியின்றி யும் 'தர்ம' எனவமைய வேண்டும். ''தர்மமுறை தப்பாமல்'' ''நன்னீதி குன்றாமல்'' எனக் கொண்டு தன்னிற் சுசீல மன்னர் தர்மமுறை குன்றாமல், எனப் பதித்திருக்க வேண்கும்.

—சுசீலவள்ளல் அம்மானை 252

68. ா—ர்—ர் ர

''சிரிய பொறபணியெ சொததணிநது கூாத
துடி நடுக்கி''

''சீரிய பொற்பணியே சேரத்—தணிந்து கூர்த்
துடி நடுக்கி''

எனப்பதிப்பிக்கப் பெற்றுளது இந்தவடியில் தனிச் சொல் எதுகை பெறவில்லை. தனிச்சொல் அடுத்த அடி முதற்சீருடன் தளை முரண்படுகின்றது. தேவையான இடத்தில் புள்ளியை வைக்காத தாலும், தேவையற்ற இடத்தில் புள்ளி வைத்ததாலும், கலி வெண்பா வமைப்பில் கவனம் கொள்ளாததாலும், நேர்ந்த பிழை களாம். சேரத்·தணிந்து என்பது 'சேர்த்தணிந்து' என ர புள்ளி பெற்று ஒரு சீராகவும், கூர்த் தென்ன ஓரசை சீராகாதென்பதால் புள்ளியை நீக்கி 'கூரத்' என ஈரசைவரச் செய்தும் அமைத்து

''சீரிய பொற்பணியே சேர்த்தணிந்து—கூரத்
துடி நடுக்கி''

எனக் கொண்டால் எல்லாக் குறைகளும் நீங்கப்பெறும்.

—சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 53

69. ‘‘கொஙகையினுங கசசு குடிபோகக கோகன கச
செஙகையினுஞ சஙதிகுர நெரிய வஙகமெலாம்’’

என்றுள்ள சுவடிப்பகுதி

‘‘கொங்கையினுங் கச்சு குடிபோகக் கோகனகச்
செங்கை யினுஞ்சங் குதிர் நெரிய—வங்கமெலாம்’’

எனப்பதிப்பிக்கப் பெற்றுளது இதில் இரண்டாமடி மோனை பெறாமல், விளக்கமும் காண இயலவில்லை தேவையற்ற புள்ளி யால் வந்த பிழை இது. இப்பகுதி

‘‘செங்கையினுஞ் சங்கு திரநெரிய’’

என இருத்தல் பொருத்தமாகும். சங்குதிர் என்பது சஙகுதிர என்றிருத்தல் வேண்டும்.

—சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி 325

70. **ல–வ-மயக்கம்**

‘‘கடஞ விரதி நதி கஙகையெனச சொலாற்
புடைமரு தூரமயிலாப பூ’’

என்றப்பகுதி

‘கடஞ விரதிநதி கங்கையெனச் சேரலாற்
புடைமரு தூர்மயிலாப்பூர்’

என அச்சிற் பதிக்கப் பெற்றுளது, இதில் ‘சேரலாற்புடை’ மருதூர்’ என்ற பகுதி தளைபிறழ்கின்றது. எனவே சேரலாற் என்பதில் ‘ர’ என்ற உயிர்மெய் புள்ளிபெற்று ‘ர்’ ஆகவும் அதற் கடுத்த ‘வ’ ‘ல’ ஆகவும் பெற்றுச்சேர்வாற் என வமைய வேண்டும்

‘கடஞ விரதிநதி கங்கையெனச் சேர்வாற்
புடைமரு தூர்மயிலாப் பூர்’

எனத்திருந்த வேண்டும்.

—திருமயிலை உவமை வெண்பா 11

எழுத்து மயக்கம்

சுவடியில் பிரதி செய்யும்போது பிரதி செய்பவர்கள் அறியாமையாலோ, அல்லது எழுதும் இலாகவத்தாலோ, அன்றிப்படிப்பவர் பார்வைக் குறைவாலோ ஏட்டின் பழைமையலோ, சிதைவாலோ பல எழுத்துக்கள் ஒன்றுக்குஒன்று மயங்கிப்பிரதி செய்யவும் பதிப்பிக்கவும் பெறுகின்றன. ன-ண வாகவும் ன், ண் ஆகவும். ர காலாகவும், ர் எனவும். ர், ர எனவும், காலாகவும், ற, ர வாகவும் க, ச வாகவும் க, த வாகவும் ன-ை, ஆகவும், ல-வ ஆகவும் வ-ய வாகவும் சில வட்டார முறையில் ழ-ள வாகவும்-ள-ழ வாகவும் இன்னும் பல விதங்களில் மயங்கி எழுதப்பெற்றுப் பதிப்பாகியும் உள்ளன. இவற்றில் சில உதாரணங்களாகக் காட்டப் பெற்று இப்பகுதியில் விளக்கப் பெற்றுள்ளன

71. அ-ஆ

'அனனமெ வாகனத தாளாறு பதது நாாகலெயு'

என்ற சுவடிப் பிரதியின் பகுதி

'அன்னமே வாகனத்தாள் அறுபத்து நால்கலெயு'

என அச்சிடப் பெற்றுளது. இப்பகுதியில் ஏட்டுச் சுவடியில் உள்ள பகுதியைச் சந்திபிரித்துப் பதித்துள்ளனர் அப்படிப் பதிப்பிக்கும் போது வாகனத்தாளாறு பத்து நாற்கலையுஞ் என்பது அன்னமே வாகனத்தாள் அறுபத்து நால்கலையும் என பதித்ததால் தளை பிறழ்வேற்பட்டது. மேலும் நாற்கலை என்பது நால்கலை என இருப்பதும் பிழையாகும். ஏட்டில் சரியாகவமைந்துள்ள பகுதி ஏட்டைப் பிரதி செய்வோர் கவனக்குறைவால் பிழையாயிற்று என்பதை உணர்ந்து

'அன்னமே வாகனத்தாள் ஆறுபத்து நாற்லையும்'

என்று திருத்த முறல் வேண்டும்

—அப்பாண்டை நாதர் உலா-47

72. **க-ச, ன-ை**

''தனுவெநதன சனனுவதாரன கனதருமஞு''

என்ற சுவடிப் பிரதி

தனுவேந்தன் சனனுவ தாரன்-கதைருமஞ்

என அச்சில் பதிப்பாகியுள்ளது. இப்பகுதியில் தனுவேந்தன், சனனாவ என்பது தளை பிழை. மேலும் கதைருமஞ் என்ற தனிச் சொல்லும் எதுகை நோக்கியமையவில்லை. ஏட்டில் உள்ள க-சவாக மயங்கிப் பதிப்பிக்கப் பெற்றதுடன், கன என்பது தளை நோக்கிக் கன் எனமாற்றம் பெற்றுக் கன்னாவ, தாரன் என இருக்க வேண்டும். தனிச் சொல் கதைருமம் என்பது சரியில்லை. ை என்ற கொம்பு, ன வுக்குப் பதில் மயங்கித் தவறாக எழுதப் பெற்றுளது. இப்பிழைகளை உணர்ந்து மாற்றின்

'தனு வேந்தன் கன்னுவ தாரன்-கனதருமஞ்'

எனத் திருத்தமுறப் பொருட் பொலிவும் பெறும்.

—அமுதரஸ மஞ்சரி 140

73. **க-ச, ா,ர்.**

காவிரி நதிகொ தாவிரி சரணமவி தெவியினுடனெ

என்ற ஏட்டுச் சுவடிப் பிரதி

காவிரி நதிசேர்
தாவிரி சரணம்வி
தேவியி னுடனே

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. காவிரி நதிசேர், தாவிரி என்ற பகுதிக்குப் பொருள் விளங்கவில்லை. அடிக்குறிப்பிலும் விளக்கம் காணப் பெறவில்லை. காவிரி நதி என்பதனையடுத்து வந்த, சேர் என்ற சொல் தவறாகப் பிரதி செய்யப் பெற்றுள்ளது. 'கொ' என்ற ஏட்டுப் பிரதி எழுத்தில் முதலில் நெடிற் கொம்பு 'ே' எனவும் பின்னர் ச, கவாகவும், ர் என்பது புள்ளி நீக்கிக் 'ா' எனக் காலா கவும் பெற்று, கோ என இருத்தல்வேண்டும். க, சவாக மயங்கியதும் கால், ர் என்று கொண்டதும் பிழையாம்.

காவிரி நதிகோ-தாவிரி சரணம்வி
தேவியினுடனே

என்று பதிப்பித்திருக்கவேண்டும்
—பொய்யா மொழி யீசர் குறவஞ்சி

74. **கி-க தி-த**

சமபு சினதாம சககிரததினினபமாம்

என்ற சுவடிப் பகுதி

சம்பு சினதாம சக்கரத்தின்—இன்பமாம்

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் யாப்பமைப்புப் பிழை எதுவுமில்லை. ஆயினும், கர்த்தன், காவலன், பழியு மிலாதோன், அம்புயத்தின் மேல் நடந்தோன் என்ற அமைப்புக் களை நோக்கும்போது சினதர்ம சக்கிரத்தின் என்பது சக்கரத்தன் எனவமைய வேண்டும் என்பது இயல்பாகப் புலனுகும்.இது ஏட்டில் பிரதி செய்வோரே செய்த பிழை இதை உணர்ந்து பிழையைத் தவிர்த்து

''சம்பு சினதர்ம சக்கரத்தன் இன்பமாம்''

எனத் திருத்திப் பதிப்பிக்க வேண்டும்.
— அப்பாண்டைநாதர் உலா-5

75. **சு-ச**

''சறறுநினற மநதிரிகள சொலசரியெ யெனறு
சொனனுர்''

என்றுள்ள சுவடிப் பகுதி

''சற்று நின்ற மந்திரிகள் சொல்சரியே என்று
சொன்னுர்''

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வடியில் சற்று நின்ற என்ற பகுதி முன்பின் பகுதிக்கு ஒத்துவராமலும் 'சொல்சரியே' என்ற மோனைக்கு இயையாமலும் உள்ளது.'சொல்'என்ற சீருக்கு ஏற்ற மோனை, 'சு' வாகும். சுற்று நின்ற மந்திரிகள் எனக் கொண் டாற் பொருளியைபும், மோனை நயமும் பொருந்தவமைகின்றது. ஏட்டைப் பிரதிசெய்கையில் நேர்ந்த பிழை இது.

''சுற்றுநின்ற மந்திரிகள் சொல்சரியே என்று
சொன்னுர்''

எனப் பதிப்பிலமைய வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 128

76. ப—ச, ம—ம்

'அனனுட சரமசிவ னனனையுமை யொடு வந்து'

என்ற ஏட்டுச் சுவடியின் பிரதி

''அன்னுட்சரம் சிவன்அன்னையுமை யோடு வந்து''

என்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பகுதி ஏட்டைப் பிரதி செய் தவர் 'சரம' எனத் தவறுகப் பிரதி செய்ததைப் பதிப்பிக்கும் போது **சரம்** என மகரத்திற்குப் புள்ளி வைத்துப் பதிப்பித்தும் அடிக்குறிப்பில் **சர்ம்-கங்கை** எனப் பொருள் எழுதி கங்கையைத் தரித்த சிவன் எனக் கொள்ளப் பெற்றுள்ளது. ஆனுல் சிறிதுகவனம் கொண்டு இவ்வடியை நோக்கின் 'ப' என்பது தவறுகச் 'ச' எனப் பிரதி செய்யப் பெற்றதை உணரலாம். அப்போது 'பரம' என இச் சீர் அமைவதுடன் பரமசிவன் என நேர்பொருள் கிட்டும். சரம என் பதற்குப் பொருள் புரியாமல் 'ம'வில் புள்ளியிட்டு வலிந்து பொருள் காணாமல், நேர்பொருள்காணலே சிறப்பாகும். எனவே இப்பகுதி

''அன்னுட் பரமசிவன் அன்னையுமை யோடு வந்து''

என்றமைய வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 515

77. ம—வ, ா-ர

''நாகம

வளாமாதமாலிசைந்த வணமையாத் காஞசி''

என்ற சுவடியில் உள்ள பகுதி ''நாகம்

வளர்மாத மாலிசைந்த வண்மையாற் காஞ்சி

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வடிவயில் தளை பிறழ் வேதுமில்லை யாயினும் பொருள் விளங்கவில்லை. நாகம்வளர்-பாம்பிற்றுயிலும், மாதமால் என்பது விளங்கவில்லை. நன்கு கவனிக்கும் போது ஏட்டைப் பிரதி செய்தோர் பிழை உணரப் பெற்றது. வ என்ற எழுத்தை ம எனவும், ர என்ற உயிர் மெய் யெழுத்தைக் காலாகவும் கொண்டதே பிழை. பிழையை நீக்கி

''நாகம்-வளர்வரத மாலிசைந்த வண்மையாற்காஞ்சி''

எனப் பதிப்பிக்கவேண்டும். காஞ்சியில், வரதராஜப் பெருமாள் பிரசித்தம்.

—திருமயிலை உவமை வெண்பா 46

78. மு—ழு, மு, மிகை

'யாரா வழுதநிறை நாதறகு முதவுதலாற'

எனச் சுவடியில் உள்ள பகுதி

''யாரா வழுதநிறை நாதற்கு முதவுதலாற்''

என்று பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வடி ஏட்டில் பிரதி செய்வோரால் பிழையாகப் பிரதி செய்யப் பெற்றுளது. அதனால் பொருளமைதியும் யாப்பமைதியும் கெட்டுள்ளது. வழுத நிறை என்பதில் 'மு' என்ற எழுத்து ழு என மயங்கிப் பிரதி செய்யப் பெற்றது. மேலும் நாதற்குதவுதலால் என்பதில் ஒரு மு மிகையாகச் சேர்த்து, நாதற்கு முதவுதலாற் எனப் பிரதி செய்யப் பெற்றுத் தளை கெட்டது இவற்றை உணர்ந்து திருத்தி

'யாரா வமுதநிறை நாதற் குதவுதலாற்'

பதிப்பிக்க வேண்டும்.

—திருமயிலை உவமை வெண்பா 91

யி—மீ

79. 'மனனும பொதியவரை மீனன

என்ற சுவடிப் பிரதி

'மன்னும் பொதியவரை மீனன்'

என்றே அச்சில் வந்துளது. வரைமீனான் என்பது விளங்கவில்லை. இப்பகுதி பாட்டுடைத் தலைவன் தசாங்கம் கூறும் பகுதியாகும். தலைவனின் மலை பற்றிக் கூறப் பெற்ற இப்பகுதி வரையினான் என்ற சீரில் 'யி' என்ற எழுத்தை மீ எனத் தவறாகப் பிரதி செய்பவர்கருதி, வரைமீனான் என எழுதினர் போலும் அச்சிற் பதிக்கும் போது இத்தகைய மயக்கத்தை உணர்ந்து நீக்கி ''மன்னும் பொதிய வரையினான்'' என்று பதித்திருக்க வேண்டும். மன்னும் பொதியவரை மீனான்—என்று பதித்திருப்பதில் மோனை அமையவில்லை. மீனான் புன்னாக என்ற தனிச் சீரோடு தளை பொருந்தவில்லை. எனவே

''மன்னும் பொதிய வரையினன்''

என்றே கொள்ள வேண்டும்

—மணவைத் திருவேங்கடமுடையான்
முகில்விடு தூது 34

80. ய — வ

'காரிகையீ ரெனனுட்கரிவ னெடியமால

என்று சுவடியில் பிரதி செய்யப் பெற்ற பகுதி

'காரிகையீ ரென்னுட் கரிவ னெடியமால்'

என அச்சிடப் பெற்றுளது கரிவ னெடியமால் என்ற பகுதியில் ஏட்டில் பிரதி செய்தவர் கரிய என்பதைக் 'கரிவ' என்று பிரதி செய்துள்ளார் இது

'காரிகையீ ரென்னுட் கரிய நெடியமால்'

எனத் திருத்தம் பெற்று பதிப்பிக்கப் பெறல் வேண்டும்.

—சேலம் தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி 260

81. வ—ய

'நாடியெ கணடவாகள நறபாலன றனொளிவால'

என்று சுவடிப் பிரதியில் காணப் பெறும் பகுதி

'நாடியே கண்டவர்கள் நற்பாலன் ற(ன்)னொளிவால்'

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது

இதில் இறுதிப் பகுதி 'னொளிவால்' என்பதில் வ யவுக்குப்பதில் மயங்கிப் பிரதி செய்வோர் குறையால் வந்தது. 'நற்பாலன்றன் னொளிவால்' என்பதற்குப் பொருள் இல்லை. இப்பகுதியில் இதற்கு முன்னடியில் 'கோடியார் சூரியர்கள் கூடியொன்று பட்ட தொப்ப'' என்பதால் ஒளியால் எனவே இச்சொல் அமைய வேண்டும்.

'நாடியே கண்டவர்கள் நற்பாலன் ற(ன்)னொளியால்'

என திருத்திப் பதிக்க வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 275

82. ர - ற

'வாடினன துனபடையா வாரகத தெடி நிதங'

என்ற சுவடியில் உள்ள பகுதி

வாடினான் துன்படையா வாராகத்—தேடிநிதங்'

என அச்சிடப் பெற்றுளது. துன்படையா வாறு ஆக என்பது துன்படையாவாறாக என றுஆ றா வாகிப் புணர்ச்சி விதிப்படி திரியும். அச்சில் ரா என இடையினம் வந்தது பிழை. ஏட்டிற் பிரதி செய்தோர் செய்துள்ள பிழையே இது வாயினும் பதிப்பிக்கும் போது

வாடினான் துன்படையா வாறாகத்-தேடிநிதங்

எனத் திருத்தமுறச் செய்தல் வேண்டும்.

—வர்க்க வெண்பா 53.

83. ர—ா

"ஆரியாகள பாவவவ தரிதத மூாதுதி'

எனச் சுவடியில் உள்ள பகுதி

"ஆரியர்கள் பாவவவ தரித்த மூர்த்தி"

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இதில் பாவ என்பதில் ரகரத் துக்குப்பதில் 'ா' எனக் காலாசக் கொண்டது பிழையாகும் பரவி எனக் கொண்டு

ஆரியர்கள் பரவவவ தரித்த மூர்த்தி"

என்று பிரதி செய்தல் வேண்டும்.

—சடகோபர் ஊஞ்சல் 13.

84. ா-ர

'நலவசன வாககருளநாவாணி நாயென'

என்ற சுவடிப் பகுதி

'நல்வசன வாக்கருள் நரவாணி நாயேன்'

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. அதில் நரவாணி என்பது நாவாணியாகும். 'ா' காலுக்கும் 'ர'வுக்கும் ஏற்பட்ட மயக்கமாகும். இவ்விதமயக்கம் நேர்கையில் சிறிது நிதானித்துப் பொருளை நோக்கி எழுத்தையமைக்கவேண்டும் சுவடிகளில் ா, ர, ர் ஆகிய மூன்றெழுத்துக்களும் 'ா' என்றே எழுதப்பெறும் என்பதை உணர வேண்டும் எனவே இப்பகுதி

நல்வசன வாக்கருள் நா வாணி நாயேன்

என்பதாகும்

—நாச்சியாரம்மன் ஊசல் 3

85. ர—ா

இரநதாறெற்றபலி தீாததமூாத்தி"

என்ற சுவடிப் பகுதி

"இரந்தாறு ரேற்றபலி தீர்த்தமூர்த்தி"

எனப் பிரதி செய்யப்பெற்றது. இதிலும் முன் 76ல் கூறியதுபோல ா, ர, ர் என்ற மூன்றுக்கும் ஏட்டில் ா எனவே இருக்கும் என்பதை நோக்கிப்பிற எதுகை புரந்தர, துரந்தர, பரந்தர என்பதையும் பார்த்து இரந்தா என்ற நெடிலை இரந்தர எனக்கொண்டு

இரந்தரறுரேற்றபலி தீர்த்தமூர்த்தி

எனக்கொண்டு திருத்த முறப் பிரதி செய்யவேண்டும்.

—ஆதி.நா.ஊ.28

86. ர—ா

''கறகிவடி வாகமாகதவணணஞெசா''

எனச் சுவடியில் உள்ள பகுதி

''கற்கிவடி வாகமா கதவண் ணஞ்சேர்

என பிரதி செய்யப்பெற்றுளது.

இது 2 காய்ச்சீர், 2 மாச்சீர் ஆக 4 சீர்மடங்கி வரும் எண் சீர் விருத்தம். விருத்தங்களில் அடிகள் அளவொத்து வரல் மரபு இந்த அடியில் இரண்டாம் சீர் வாகமா என விளச்சீராகப் பிரதி செய்யப்பெற்று அளவொத்து வரவில்லை. மாகதவண்ணம் என்ற பகுதிக்கும் பொருள் இல்லை. ஏடுகளில் ர, ா, ஒன்றாகவே இருக்கும் என்பதை உணர்ந்து மா என்ற எழுத்தை மர எனக் கொள்ளவேண்டும். அப்படிக் கொண்டால்

''கற்கிவடி வாகிமர கதவண் ணஞ்சோ''

எனப் பாடல் அளவொத்தும், பொருள் பொலிந்தும் அமையும்

—ஆதிநாதப் பெருமாள் ஊஞ்சல் 26

87. ர-ா

'முதாரமெனடிபபப பொலிநது நின௱ா'

என்ற சுவடிப் பகுதி

மூதார மேனடிப்பப் பொலிந்து நின்றார்

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இவ்வடியில் மூதாரமேனடிப்ப என்பதற்குப் பொருள் விளங்கவில்லை. 'ா' என்றகாலும் ரவும் பிரதி செய்கையில் முறைமாறி மயக்கத்தை விளைத்தது. மூதார என்பதை மூதரா எனக்கொண்டால் அரா-அரவு பாம்பு எனப் பொருள்தரும் எனவே

''மூதரா மேனடிப்பப் பொலிந்து நின்றார்''

எனத் திருத்தமுறப் பிரதிசெய்தல் வேண்டும்

88. ர - ா

'ஆழிவளைககாதலததானுடிருசல்'

என்ற பகுதிச் சுவடி

ஆழிவளைக் காதலத்தா னுடி ரூசல்

எனப் பிரதிசெய்யப் பெற்றுள்ளது. இவ்வடியை மாத்திரம் நோக்கின் காதலி-தன் காதலனை, ஆழிவளைக் காதலத்தான் ஆடிரூசல் எனக் கூறுவதுபோலப் பொருள்தரும். ஆனால் இப் பாடலின் மற்றைப் பகுதிகளை நோக்க இது இறைவன்பாற் பாடிய ஊஞ்சல் எனப் புலனாகின்றது. இறைவனை அத்தான் எனவழைப்பது மரபில்லை ஆதலின் காதலத்தானில் ஏதோ மயக்கம் இருப்பதை உணரலாம். இதுவும் ா, ர மயக்கமே காதல் என்பதில் உள்ள கா என்ற நெடில் கர என மாற்றப் பெற்றால்

ஆழிவளைக் கரதலத்தா னுடி ரூசல்

எனச் சிறப்புற மரபுக்கியையப் பாடலமையும்

—ஆதிநாதர் ஊஞ்சல் 6

89. ர—ா

'உலகமுறறும பெறறதிரு விதநதானசொற'

என்றுள்ள சுவடிப் பகுதி

உலகமுற்றும் பெற்றதிரு விதந்தான்சொற்

எனப் பிரதி செய்யப்பெற்றுள்ளது. இந்தவமைப்பில் நான்காம் சீர் ஓரசையுடன் குறையாக இசைக்கின்றது. ஏட்டுச்சுவடியில் சிதைவுள்ளதாகப்..... ஏதும் இடவில்லை. எனவே மூன்றாம் சீரில் ஏதோ குறையிருக்கவேண்டும் என்ற கருத்துடன் நோக்கின் தெளிவு பெறலாம். விதந்தான் என்ற சொற்களில் தா என்ற நெடில் தர என மாற்றம் பெறவேண்டும் (ா, ரவும் மயங்கியுள்ளது) எனவே இவ்வடி

"உலகமுற்றும் பெற்றதிரு விதந்த ரன்சொற்"

எனவமைக்கப் பெறவேண்டும் அப்போது 'ரன் சொற்' என 4 ஆம் சீர் மாச்சீராகும்

—ஆதிநாதர் ஊஞ்சல் 8

90. ா—ர

"ஆரமுஞசெனனெ லணிதாளமுங கருமபிற"

என ஏட்டில் உள்ள பகுதி

"ஆரமுஞ் சென்னெ லணிதாள முங்கரும்பிற்"

எனப் பதிப்பிக்சப் பெற்றுள்ளது.

இவ்வடியில் 'லணி தாளம்' என்ற சீர் பொருளமைதி காண வியலவில்லே. தாளம் என்பதில் உள்ள நெடில் தா, தர என வமைந்து தரளம் என இருக்க வேண்டும். இப்படி இருப்பின்

ஆரமுஞ் சென்னெ லணிதரள முங்கரும்பிற்"

எனப் பொருட் பொலிவோடு பாடல் அமையும்.

—மணவை திருவேங்கடநாதனார் மேகவிடு தூது கண்ணி 42

91. ர—ா

"கணதாராயக காசினியிலவந்தொன, குணதானும"

என்ற சுவடிக் கண்ணுள்ள பகுதி

கணதாராய்க் காசினியில் வந்தோன்-குணதரனும்

என அச்சிடப் பெற்றுள்ளது. இவ்வடியில் தளை கெடவில்லை எனினும் தனிச்சீர் குணதரனாம் என்பதற்கியைய எதுகையமைய வில்லை. ா ர மயக்கமே இக்குறைக்குக் காரணமாகின்றது

கணதர ராய்க் காசினியில் வந்தோன்-குணதரனும்

என்றமைத்தால் எதுகைப் பொலிவோடு பொருட் பொலிவும் காணும்

—அப்பாண்டை நாதர் உலா 84

92. ர-ா

'அசுரகுமாராதியான பதினமா'

என்ற ஏட்டுச் சுவடிப் பிரதி

அசுர குமர ராதியான பதின்மர்

என அச்சிடப் பெற்றுளது. இவ்வச்சுப் பிரதியின்படி கொண்டால் இரண்டாம் சீர், மூன்றாம் சீருடனும், மூன்றாம் சீர் நான்காம் சீருடனும் தளைவிரவிவராமல் உள்ளது விளங்கும். இக்குழப்பம் ாா என வரிசையாக மூன்று கால்கள் ஏட்டி இருப்பதில் எதுகால், எது 'ர' எனப் புரியாததால் ஏற்பட்டது. எனவே குமரராதி என்ற சொற்களேக் குமாராதி' எனக் கொண்டு

"அசுரகுமா ராதி யான பதின்மர்"

எனப் பதித்தால் பொருளமைதியும் யாப்பமைதியும் பெறும்

—அப்பாண்டை நாதர் உலா 215

93. ர—ா

விககினவிநாயகன விதாாாகனவிமலன

என்ற சுவடிப் பகுதி

''விக்கனவி நாயகன் வீதா ரகன்விமலன்''

என அச்சிற் பதிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் வீதாரகன் என்ற சொற்கள் பொருளுக்கியைந்து வரவில்லை. வீதராகன் என விநாயகருக்கு ஒரு பெயருண்டு. இந்த விளக்கம் புரிந்து வீதாரகன் என்பதை, வீதராகன் என அமைத்து

''விக்கனவி நாயகன் வீதரா கன்விமலன்''

எனக் கொள்ள வேண்டும்

—அப்பாண்டை நாதர் உலா

94. ல—வ

''விலலரமபை யெனன விழியரமபை தைவருட
நலவரமபை யெனன நறுநதொடையாள'

என்ற சுவடிப்பகுதி

''வில்லரம்பை யென்ன விழியரம்பை தைவருட
நல்வரம்பை யென்ன நறுந்தொடையாள்''

என அச்சிடப் பெற்றுளது. இரண்டாமடி முதற்சீர், எதுகைக் கியையவில்லை பொருளும் பொருத்தமாகவில்லை. ஏட்டில் ல' வ பெரும்பாலும் அதிக வேறுபாடு கொள்ளாமற் காணப்படுமாதலால் நல்லரம்பை என்ற சீர் நல்வரம்பை எனப் பிரதி செய்யப் பெற்று பதிப்பிக்கவும் பெற்றது.

''நல்லரம்பை யென்ன நறுந்தொடையாள்''

என்றே திருத்தமுறப் பதிக்கவேண்டும்.

—சேலம்-தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 71

95. நிதியவா மெலுமஙகையாடி ரூசல்

என்ற சுவடிப் பகுதி

நீதியவர் மேலு மங்கை யாடி ரூசல்

எனப் பிரதி செய்யப் பெற்றுளது. இதில் நீதியலர் என்பதில் லகரம் வகரமாகிப் பிழை வந்தது.

நீதியலர் மேலுமங்கை யாடி ரூசல்

என்பதே சரியான பாடமாகும் என்பதை உணர்ந்து திருத்தம் செய்தல் வேண்டும்

—நாச்சியரம்மன்பேரில் ஊஞ்சல்-4

96. வ—ய

பண்டிரை பவப்புணரி யிற்கனக மால் வரையை
நட்டரவினைக்
கொண்டுகயி றிற்கடைய வந்தவிடமுண்டகுழ
கன்றனிடமாம்

என்ற தேவாரத்தில் பவப்புணரி (பிறவிக்கடல்) யில் கனகவரையை நட்டு அரவினைக் கயிறு கொண்டு கடையவிடம் வந்ததாகக் கூறப் பெறுகின்றது. இதற்குப் புராண வரலாற்றுச் சான்றுகள் இல்லை பாற்கடலில் மந்தரமலையைநட்டு அரவினைக் கொண்டு கயிறிற் கடைய ஆலகாலவிடம் வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. எனவே பவப் புணரி என்பதில் மயக்கம் உண்டாகின்றது. ஏட்டில் யகரத்தைப் பிரதி செய்வோர் வகரமாக்கி விட்டனர். இதை உணர்ந்து பவப்புணரியை பயப்புணரி எனக் கொண்டால் (பயம்-பால், புணரி-கடல், பாற் கடல் எனத் தெளிவான பொருளமைதி பெறும்

பண்டிரை பயப்புணரியிற்கனக மால்வரையை
நட்டரவினைக்
கொண்டுகயி றிற்கடைய வந்தவிடம் உண்டகுழ
கன்றனிடமாம்

என்று தேவாரம் அமையும்

—திருஞானசம்பந்தர் தேவாரம் 3ஆம் திருமுறை
76ஆம் பதிகம்-2ஆம் பாடல்

97. வ—ல—ர—ற

சிவகாமியாா வாழுஞசீரின சிறப்பாா
பலகாமு மாறறும பரிவால

என்ற சுவடிப் பிரதி

சிவகாமி யார்வாழுஞ் சீரின் சிறப்பார்
பலகாம மாற்றும் பரிவால்

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. சிவகாமி என்பதற்கு எதுகை பலகாம என்பதில்லை. (இது ஏட்டுப் பிரதியிலேயே உள்ள

குறையோ வன்றி ஏட்டில் வ பிரதி செய்வோர் கண்ணில் ல எனப் பட்டதோ தெரியவில்லை) எப்படியாயினும் பவகாம என்பதே எதுகையாகும். மேலும் சிறப்பார் என்பது பொருள் முடிவு பெற வில்லை. உவமை வெண்பா நூலாதலால் அடுத்த அடியில் பரிவால் என வருதலைக் கொண்டு சிறப்பார் என்பது பண்டைச் சுவடிகளில் வல்லினற எனவமையாமல் ர எனவே இருக்கும் என்பதைஉணர்ந்து சிறப்பாற் எனவமைத்து

சிவகாமியார் வாழுஞ் சீரின் சிறப்பாற்
பவகாம மாற்றும் பரிவால்

எனவமைக்க வேண்டும்

—திருமயிலை உவமை வெண்பா 68

98. ள—ழ

'குளவி மதித திருநுதலிற குறுவோ வாடக குழலாட
மணிமகாக குழைகளாட மொளிககனிவாய...

மெனநாவாட

என்று சுவடியில் பிரதி செய்யப் பெற்ற பகுதி

'குளவிமதித் திருநுதலிற் குறுவேர் வாடக்
குழலாட மணிமகரக் குழைக ளாட
மொளிக் கனிவாய்...மென்நாவாட

எனப் பிரதி செய்யப் பெற்றுள்ளது. இதில் ஏட்டைப் பிரதி செய்தவர் ழவுக்குப் பதில் ள வை உபயோகித்துள்ளார். பெரும்பாலும் தென் பாண்டி நாட்டுப் பிரதிகளில் ளவுக்கு-ழவும்'ழவுக்கு ளவும் மயங்கி எழுதப் பெற்றிருக்கும் (பழம்-பளம் எனவும், வெளுத்து-வெழுத்து எனவும் வரும்). இப்பகுதியில், குளவி, மொளி என்பதன் பிற எதுகை அழகு, பழமறை என உள்ளனவாதலால் இந்தக் குளவி-குழவி எனவும், மொளி-மொழி எனவும் திருந்தப் பிரதி செய்ய வேண்டும்'

—சடகோபர் ஊஞ்சல் 8.

99. ள்—ழ்

'தெனனம பலசசொலை செருமா வணடூரவாள'

என்ற சுவடிப் பிரதி

'தென்னம் பலச்சோலை சேருமா வண்டூர்வாள்'

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் மாவண்டூர்வாள் என்பது பெண்பால் விகுதி பெற்றுள்ளது போலத் தோற்றிமயக்கம் அளிக்கின்றது. ஆனால் தென் பாண்டி நாட்டினர் 'ழ' கரத்துக்கு 'ள' கரமும், 'ள'கரத்துக் கு ழகரமும் தாராளமாகப் பயன்படுத்து வார்கள். அவர்கள் பேச்சில் கூட ழகரமும், ளகரமும், ஒரே மாதிரி ளகரமாகவே ஒலிக்கும். எனவே பாடலை முன்னும் பின்னும் படித்துப் பொருள் கண்டு ளகர- ழகரத்தைத் தீர்மானிக்க வேண்டும். இப்பகுதியில் மாவண்டூர்வாழ்' என்பதே பொருளுடன் பொருந்துவதால்

'தென்னம் பலச்சோலை சேருமா வண்டூர்வாழ்'

என்றே பதிக்க வேண்டும்

—அமுதரஸமஞ்சரி 130

100. ள்—ழ்—ளி—ழி—ள—ழ

''நிழ விளிககஞ்சனமெழுதி நிலககாபபிடடு''

சிராடடும பசுங் குளவி யாடி ரூஞ்சல்''

என்ற சுவடிப் பகுதி

நீழ்விளிக்கஞ் சனமெழுதி நிலக்காப் பிட்டு
சீராட்டும் பசுங் குளவி யாடி ரூஞ்சல்

எனப் பிரதி செய்யப் பெற்றுள்ளது. இதுவும் மேற்கூறியவாறே ள, ழ மயக்கமாகும். ளகரத்துக்கு ழகரமும், ழகரத்துக்கு, ளகரம் மூன்றிடங்களில் எழுதப் பெற்றுளது.

''நீள் விழிக் கஞ்சனமெழுதி நிலக்காப் பிட்டு

சீராட்டும் பசுங்குழவி யாடி ரூசல்''

என்றே திருத்தமாகப் பிரதி செய்யப் பெறல் வேண்டும்.

—சடகோபர் ஊஞ்சல் 5

101. ழ—ள—ள்—ழ்

''முற்றும வெழுதது முகமவெழுததுச சிறறிடைபொய
னன நடையிடடடி வயிறு தானகனததுக
கனனங குளிநது கயறகணகுளிநது தனனுடலிற''

என்று சுவடிக்கண் பிரதி செய்யப் பெற்ற பகுதி

"முற்றும் வெழுத்து முகம் வெழுத்துச்–சிற்றிடை போய்
அன்ன நடையிட்டடி வயறு தான்கனத்துக்
கன்னங் குளிந்துகயற் கண்குளிந்து–தன்னுடலிற்"

என்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவ்வடிகளிலும் ழ-ள மயங்கியே வந்துளது. முதலடி வெழுத்து என வந்துள்ள இரண்டிடங்களும் வெளுத்து எனவும், மூன்றாமடியில் குளிந்து என வந்துள்ள இரண்டிடங்களும் குழிந்து எனவும் அமைய வேண்டும் எனவே

"முற்றும் வெளுத்து முகம் வெளுத்துச்-சிற்றிடைபோய்
அன்ன நடையிட் டடிவயிறு தான் கனத்துக்
கன்னங் குழிந்துகயற் கண்குழிந்து-தன்னுடலிற்"

எனத் திருத்த முறவேண்டும்

—அமுதரஸ மஞ்சரி 298-29

102. ழ—ள—ழ்—ள்

"செநதிரு வாழ நினறு திருபபுயததில கூநதலாட"

என ஏட்டில் பிரதி செய்யப் பெற்ற பகுதி

"செந்திரு வாழநின்று திருப்புயத்தில் கூந்தலாட"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. இதில் ஏட்டைப் பிரதி செய்தவர் கவனக் குறைவாற் செய்த பிழையும், பதிப்பாசிரியர் கவனக் குறைவால் செய்த பிழையும் உள்ளன. தென் பாண்டி நாட்டில் ளகரத்துக்கு ழகரமும் ழகரத்துக்கு—ளகரமும் பயன் படுத்தி எழுதுவார்கள். சுவடியில் 'செந்திருவாள' என்பது வாழ எனப் பிரதி செய்யப் பெற்றதை உணர்ந்து, 'செந்திருவாள' என்பதிற் பொருள் பொருந்தாமையால், ளகரத்துக்குப் புள்ளி வைத்து 'செந்திருவாள்' எனக் கொள்ள வேண்டும் அப்படிக் கொள்ளின் இவ்வடியின் இறுதிச்சீர் 'கூந்தலாட' என்பது பொருந் தாமை உணரலாம். இது கூத்தாட என்றே இருக்க வேண்டும் இனி இப்பகுதி, பொருளமைதியுடன்

"செந்திருவாள் நின்று திருப்புயத்தில் கூத்தாட"

என அமையும்

- சுசீல வள்ளல் அம்மானை. ℓ9

103. **ழி—ளி**

கறறவாகககும யாாககும கனபோகம தானழிதது

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற பகுதி

"கற்றவர்க்கும் யார்க்கும கனபோகம் தானழிதது"

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் 'ளி' க்குப்பதில் 'ழி' பயன்படுத்தப் பெற்றுள்ளது என்பதை உணராமல் பொருள் செய்யின் விபரீதப் பொருளே கிடைக்கும். எனவே தானழித்து என்பது உரிய சொல்லன்று தானளித்து என்பதே சரியான சொல் என உணர்ந்து

"கற்றவர்க்கும் மற்றவர்க்கும் கனபோகம்தானளிதது"

என்றமைத்தல் வேண்டும்

—அமுதரஸமஞ்சரி 107.

104. **ழி—ளி**

"கனறை யழிதத கநதா கணகாடசி
காணபையெனறெ"

எனச் சுவடிபிரதி செய்யப் பெற்ற பகுதி

"கன்றை யழிததகந்தர் கண்காட்சி
காண்பையென்றே"

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. மேலும் கன்றையழித்த கந்தர் என்பதற்கு "சூரபத்மன் மாமர வடிவில் நின்றபோது, முருகன் அழித்த வரலாறு" என அடிக்குறிப்பும் வரையப் பெற்றுளது. தென்பாண்டி நாட்டினர் வழக்கம் போல 'அளித்து' என்பதை அழித்து எனப் பிரதி செய்துள்ளனர். இதை உணராமையால், அழித்து எனவே கொண்டு கன்று மாமரம் எனப் பொருள் கண்டது பிழை (மரத்தைக் கன்று என்பது மரபில்லை. மரத்தின், இளமைத் தன்மையையே கன்று என்பார்கள்). இனிக் கன்று என்பதற்குக் குழந்தை எனக் கொண்டு குழந்தையை அளித்த கந்தா கண்காட்சி காண்பை என்றே சொன்னது என்பதை நூலின் முற்பகுதியில் கந்தன் பிள்ளைவரமளித்ததை ஒட்டிப் பொருள் காணவேண்டும் எனவே இப்பகுதி

"கன்றை யளித்த கந்தா கண்காட்சி
காண்பையென்றே"

எனத் திருத்தம் பெற்று அடிக்குறிப்பும் திருத்தம் பெற வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 460

105. **றி—ரி**

"யெனறு மறியொ மெனறியமபும பொருளதனே"

எனச் சுவடிப்பிரதியில் உள்ளபகுதி

"யென்று மறியோம் என்றியம்பும் பொருளதனே"

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. அறியோம் என்று இயம்பும் பொருள் என்பது பொருத்தமாகஇல்லை. இப்பகுதியில் சிறுவர் களை கல்விகற்க அனுப்பிய செய்தியும் ஆசிரியர் பாடம் பயிற்றிய செய்தியும் வருகின்றது. அட்சராப்பியாச காலத்து அரி ஓம் என்று துவங்குவது மரபு. எனவே இங்கும் என்றும் அரி ஓம் என்று இயம்பும் பொருளதனை, நின்று நிறைவாக நிகழ்த்தினான் பண்டிதன் என்றே நூலில் உள்ளது. ஏட்டைப் பிரதி செய்வோர் இடையின 'ரி'க்குப் பதில் தவறாக வல்லின றியை எழுதி யுள்ளதை அப்படியே திருத்தி

யென்று மரியோம் என்றியம்பும் பொருளதனே

எனவோ, என்றும் அரி ஓம் என்று இயம்பும் பொருளதனை எனவோ பதிப்பிக்க வேண்டும்

—சுசீல வள்ளல் அம்மானை 381

106. **று—ரு**

'முகமதியிற குருவொவை முத்தமாட'

என்ற சுவடிப் பகுதி

'முகமதியிற் குருவேர்வை முத்த மாட'

எனப் பிரதிசெய்யப் பெற்றுளது.

குரு வேர்வை முத்தம் என்பதில் வல்லின றுவுக்குப்பதில் இடையின ரு வந்தது பிழை எனவே

"முகமதியிற் குறுவேர்வை முத்த மாட"

என்று திருத்திப் பிரதி செய்தல்வேண்டும்.

—சடகோபர் ஊஞ்சல்-3

107. **று-ரு**

"என்றுமரு காற்பணிந்து எழுந்துகை கட்டிநின்றார்"

என அச்சிற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இப்பகுதிக்குப் பொருள் விளங்கவில்லை. என்றுமருகாற் என்பது பிழை. இப்பகுதியின் மேற் பகுதியைக் கவனித்தால் பிழை புலனாகும் முன்னெழுந்து சென்று அரசன் பணிந்து செப்புவார் என உள்ளதைக் கருத்திற் கொண்டு, செப்பிய பிறகு மறுகாற்பணிந்து (மீட்டும் பணிந்து)

எழுந்து கைகூப்பி நின்றார் எனக்கொள்ளவேண்டும். மறுகால் என்பதில் உள்ள வல்லின 'று'வை இடையின 'ரு'வாகப் பிரதி செய்தது பிழையாகும் எனவே

"என்றுமறு காற்பணிந்து எழுந்துகை கட்டிநின்றார்"

எனத்திருத்தம் செய்யவேண்டும்.

—சுசீல வள்ளல் அம்மானை 200

108. ர-ற

"தெனாநதெழு கதலிககனி யுணபானறிகழமநதி
மெனெகிநின
றிரஙகுமபொழல வெணு புரமதுவெ"

என்று சுவடியில் பிரதி செய்யப்பெற்ற தேவாரப் பகுதி

"தேனார்ந்தெழு கதலிக்கனி யுண்பான் றிகழ்மந்தி
மேனோக்கிநின் றிறங்கும்பொழில் வேணுபுரமதுவே"

என்றே, எல்லாப் பதிப்புக்களிலும் அச்சிடப் பெற்றுள்ளது. இதில் ஓசை நயமோ, சீர்க்குறைவோ ஏதுமில்லை. ஆனாலும் இரண்டாம் அடியில் இறங்கும் என்றிருப்பது சரியான பொருளைத்தரவில்லை. தேவாரத்தைத் திருத்தக்கூடாது என்ற கருத்தில் இறங்கும் என்பதற்குப் பொருத்தமான உரை வலிந்து கூறப்பெற்றுள்ளது. ஏடு எழுதியவர் செய்த பிழையை உணர்ந்துகளைதலே, சம்பந்தப் பெருமானுக்கு நாம் செய்யும் சிறந்த வழிபாடாதலால் இறங்கும் என்ற சீரை இரங்கும் எனக்கொண்டு கதலிக்கனி உண்பான் திகழ்மந்தி மேனோக்கி நின்று இரங்கும் (ஏங்கும்) எனப்பதிப்பிக்க வேண்டும்.

—திருஞான-தேவா. திரு 1 பதி 9, பாடல்

109. ல—ல்—த்—த அல்லது ல் த்—ற்

"இலயநதனகணபதீசசுரமென் றரபாலத தலைவா"

எனச் சுவடியில் பிரதி செய்யப் பெற்றுள்ள பகுதி

"இலயந் தனக்கணப திச்சுரமென றார்பாலத்
தலைவர்"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. இந்த அடி இறுதிச்சீர் றார் பாலத் எனக் காய்ச்சீராக இருப்பதால் அடுத்தசீர் தலைவர் என்பதுடன் தளைமுரண்படுகின்றது. இலையந் என்பதற்கு தலைவர் நிரை எதுகையாதலால் அதில் மாற்றம் ஏதும் இராது 'றார்பாலத் என்ற சீரிலதான் மாற்றம் உள்ளது. பாலத் என்பதில் ல புள்ளி

பெறவேண்டும். பெறின் 'றார்பால்த்' எனவமையும். 'ல்' என்ற மெய் முன் த் என வல்லினம்வரின் றகரமெய்வரலே விதியாகும் அப்படியாயின் பால்த் என்பது பாற் எனவரல்வேண்டும். ஆயினும் தென்பாண்டி நாட்டில் சிலர் இவ்விதம் ல்த், ல்க், ல்ப் எனவே எழுதுகின்றனர். எனவே இவ்வடி

இலையந்தனைக் கணப தீச்சுர மென்றார்பால்த்
தலைவர்

எனப் பதிப்பிக்கவேண்டும்.

—திருமயிலை-உவமை வெண்பா 85

110. ர்க்–ற்

மெநதிளநாணமடாக கமலத தெழுநததெரை

என்ற சுவடியில் உள்ள பகுதி

மேந்திளநாண மடாக்கமலத் தெழுந்த தேரை

எனப் பிரதி செய்யப் பெற்றுள்ளது. இவ்வடியும் முற்கூறியதைப் போலேவே மடாக்கமலத் என்பது மடர்க்கமலத் தெனவரல் வேண்டும் ல்+க் புணரும்போது 'ற்' எனமாறும் ஆதலால் மடற் கமலத்தென்று எழுதுவதே முறையாகும். எனினும் இவ்விதியைக் கடைப் பிடிக்காமல் தென்பாண்டி நாட்டில் சிலர் 'ல்க்' எனவே எழுதுகின்றனர். எப்படியாயினும் மடல் என்பது வல்லினம் சேரும் போது ''ற்'' என்ற வல்லெழுத்துவரலே முறை. இடையின 'ர்' போட்டு 'க்' என வல்லினம் மிகுதல் முறையன்று இது ஏட்டில் எழுதுவோர் செய்த பிழையாகும் எனவே

மேந்திளநாண் மடற்கமலத்தெழுந்த தேரை

எனப் பிரதி செய்தலே சரியான முறையாகும்

—ஆதிநாதர் ஊஞ்சல் 2

''யயிலெடுததானசிஙகாரனுகவரு பணபாலக கயிலை
மயிலைநகா காண''

என்ற சுவடிப் பிரதி

''யயிலெடுத்தான் சிங்கார னுகவரு பண்பாலக்
கயிலை மயிலைநகர் காண்''

என்று பதிப்பிக்கப் பெற்றுளது. ஆனால் இதில் முதலடி கடைச் சீரும் அடுத்தவடி முதற்சீரும் தளை முரண்படுகின்றது. இரண்டா

மடி முதற்சீர் நிரையெதுகையாதலால் முதலடிக் கடைச்சீரே மயக்கம் பெற்றது 'பண்பாலக்' என்ற காய்ச்சீர் 'பண்பால்க்' என வமையவேண்டும் 'பண்பாற்' என வரும் பகுதியைப் 'பண்பால்க்' என எழுதுவது தென்பாண்டி நாட்டுமரபு எனவே இப்பகுதி

''யயிலெடுத்தான் சிங்கார ஞகவரு பண்பால்க்
கயிலை மயிலைநகர் காண்

என அமைதல் வேண்டும்

—திருமயிலை உவமை வெண்பா 56

112. றி—நி

''அபபவது பொனறிறமெ யாமெனறும''

என்ற சுவடிப் பிரதி

அபபவது பொன்றிறமே யாமென்றும்

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் யாப்பமைதி சரியாகவேயுள்ளது ஆயினும் பொருளில் அமைதி பெறவில்லை. பொன் திறமெனக் கொள்ளலாமாயினும், முதல் அடி 'ஒப்பிலிமையப்பொருப்பை ஓர்ந்த சருங்காகம்' என வந்திருப்பதால் பொன்றிறம் என்பது பொருத்தமாகவில்லை 'பொன்நிறம்' எனக் கொள்ளலே பொருத்தமாகும். ஏட்டில் பிரதி செய்வோர் செய்த தவறாகும் இது யாப்பருங்கலக்காரிகை அவையடக்கப் பாடலில் 'பனிமாலிமையப் பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய், இருக்கும்' என்றவடிகளை நினைந்தே ஆசிரியர்

''கருங்காகம்
அப்பவது பொன்நிறமே யாமென்றும்''

எனப் பாடியுள்ளது உணரவேண்டும்

—அப்பாண்டைநாதர் உலா 37

113. ழ—ள

மெருமலை யிறபொறிதத வெளமுகாமெயபமகிநது

என்ற சுவடிப் பகுதி

மேருமலை யிற்பொறித்த வேள்முகாமெய்மகி(ழ்)ந்து''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது. வேள்முகா என்ற பகுதி பிழையாகவுள்ளது. வேளமுகா என்பதே, தவறாக வேள்முகா எனப் பதிப்பிக்கப்பெற்றுளதாகும். தென்பாண்டி நாட்டினர் மரபு 'ள'-ழ

மாறி எழுதுவதாகும். எனவே வேழமுகா என்ற சொல் வேளமுகா என எழுதப் பெற்று வேள்முகா எனப்பதிப்பிக்கவும் பெற்றது. இதனையுணர்ந்து

"மேருமலே யிற்பொறித்த வேளமுகா"

என்று திருத்திப் பதிப்பிக்கவேண்டும்

—சுசீலவள்ளல் அம்மானை-வருக்கவெண்பா காப்பு

114. **ன-ை**

நெருஙகுவளேகனக மலராலவடந தொடடாடட

என்ற சுவடிப்பிரதி

நெருங்குவளே கனகமலரால் வடந்தொட்டாட்ட

எனப்பிரதி செய்யப் பெற்றுளது. இரண்டாம் சீர் 'கனகமலரால்' என்பது ஓசைமிகுந்து கனிச்சீராகவுள்ளது பிழை. இப்பிழை 'ை' என்ற கொம்புக்கும் ன வுக்கும் ஏற்பட்ட மயக்கமாகும், பிரதி செய்வோர் கனகமலர் எனப் பிரதி செய்துள்ளார். ஆனால் நெருங்குவளைக் கைமலரால் என்றிருப்பதே சரியான அமைப்பு எனவுணர்ந்து

"நெருங்குவளேக் கைமலரால் வடந்தொட்டாட்ட"

எனப் பிரதி செய்ய வேண்டும்

—ஆதி நாதர் ஊஞ்சல்-2

115. "சொதிக குமரனவடொழ சொநதான"

என்ற சுவடிப் பிரதியில் உள்ள பகுதி

சோதிக்கு மாவை டொழ சேர்ந்தான்

என அச்சில் பதிப்பாகியுள்ளது. இந்தப் பகுதியில் தளை சரியாக வமைந்திருப்பினும் பொருள் சரியாக அமையவில்லை. உற்று நோக்கின் இதில் மூன்று வகை மயக்கங்கள் உள்ளனவென்பது உணரலாம்.

(1) சோதிக்குமாவை என்பதன்று பாடலமைப்பு. மாவை என்பதில் ா'க்குப்பதில் ர வாக வேண்டும், ன கரமும் 'ை' என்ற கொம்பாக மாறியுள்ளது. எனவே இது சோதிக்குமரனவ என்பதாகும்

(2) டொழ சேர்ந்தான் என்பது பிழை. புணர்ச்சி விதிப்படி ள் + தவரின், 'ள்' ம் 'த'வும் மறைந்து டவாகும் எனவே ள் + தோ என்ற எழுத்துக்கள் டோவாகியது

(3) ழ—ள மயக்கம், ள் என்பது ழ்' ஆகியது. இம்மூன்று பிழைகளும் உரிய மாற்றம் பெறின்

"சோதிக்குமரனவ டோள் சேர்ந்தான்"

என அமைந்தது உணரப்பெறும்.

அமுதரஸ மஞ்சரி-158

116. **ன—ண**

"பநதத துளளாகப படைதத வணண வாகனனை"

என ஏட்டுச் சுவடிக்கண்ணுள்ள பகுதி

"பந்தத்துள் ளாகப் படைத்தவண்ண வாகனனை"

என்று அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது, இப்பகுதியில் வண்ண வாகனன் என்பது பிழையாக ஏட்டில் பிரதிசெய்யப் பெற்றுள்ளது. 'வண்ண வாகனம்' என்ற வாகனம் ஏதும் இல்லை. அப்படியே கொண்டாலும் இன்ன வண்ணம் என அடைமொழி பெற்று வரும். இங்கு அப்படி ஏதும் குறிப்பிடப்பெறவில்லை. உயிரினங்கள் ஏதேனும் பந்தத்து (பாசம்—பற்று) உள்ளாகும்படிப் படைக்கின்ற நான்முகனைக் கூறும் பகுதி இது. நான்முகன் வாகனம் '**அன்னம்**' எனவே படைத்த வன்ன வாகனனை என்பதே உரிய சொல்லாகும். னவுக்குப்பதில் ண வைப் பிரதி செய்வோர் கவனக் குறைவாக எழுதியமை உணரப்பெறும். எனவே இப்பகுதி

"பந்தத்துள் ளாகப் படைத்த வன்ன வாகனனை"

என்றே அமைதல் வேண்டும்

—சுசீலவள்ளல் அம்மானை-14

117. **ல—வ. ா—ர்— ா—ற்**

"சாா வருமமுத சறகரை யெனரு றெவமாருடையநாம மமுதமெ"

எனச் சுவடிப்பிரதியிலிருக்கும் பகுதி

சாரவரு மமுத சற்கரையென்றுர் தெவா
மாருடைய நாம மமுதமே

என்று பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வமைப்பில் ஏட்டிலிருந்து பதிப்பிக்கும் போது 'ற்—ர்,'' ''ற—த'' வ—ல—, ர்—ா. ஆகிய மயக்கங்கள் உள்ளன. மேலும் ர், க் எனவரும் இடங்களில்

எழுத்தைக்குறைக்க ற் என்ற வல்லொற்றையே ஏட்டில் பெரும்பாலும் பயன்படுத்துவார்கள், இவற்றை எல்லாம் உணர்ந்து பொருளும் பொருந்த இந்தக் கண்ணி

"சார வருமமுத சர்க்கரையென்றுற்றேவர்
மாருடைய நாம மமுதமே"

என்று பதிப்பிக்கப் பெறல் வேண்டும்

—அமுதரஸ மஞ்சரி-160

ா–ர–ள்–ழ்

118. "ஆளிருநது கடடியடியாமல நிளமாஞ்சுள"

என்ற சுவடிப் பிரதியிலுள்ள பகுதி

"ஆளிருந்து கட்டி யடியாமல்–நீள்மாஞ்சுள்

எனப் பதிப்பிக்சப் பெற்றுளது தனிச்சீர் நீள் மாஞ்சுள் என்பதில் மா என்ற எழுத்து மர எனவும் 'சுள் என்பது சூழ் எனவும் இருக்க வேண்டும். (ழ்—ள் மாற்றியமைப்பது தென்பாண்டி நாட்டார் வழக்கு) எனவே இந்த அடி

"ஆளிருந்து கட்டி யடியாமல்–நீள்மரஞ்சூழ்

எனப் பதிப்பிக்கப் பெறல் வேண்டும்.

பாடலமைப்பு

ஏட்டுச்சுவடியில் சீர்பிரித்தல், சந்தி பிரித்தல் நிறுத்தற் குறிகள் (½புள்ளி, காற்புள்ளி, முக்காற் முற்றுப்புள்ளி) ஆகியவை இன்றி ஒரே தொடராக எழுதப் பெற்றிருக்கும். பாடல் இறுதியில் 'உ' என்ற குறியீடும் பாடல் எண்ணும் பின்னர் 'உ' என்ற குறியீடும் இடம் பெற்றிருக்கும் சில சுவடிகளில் '—' என்ற குறி யீடும் இருக்கும்- இடையே எந்தக் குறியீடுகளும் இராது) எனவே ஏட்டை முதலில் நன்கு படித்து இன்ன வகைப் பாடல் என்பதை உணர்ந்து எதுகை, மோனை, தளை முதலியவற்றின் உதவியுடன் அந்தப் பாடலின் அமைப்பை உணர்ந்து பிரதி செய்யப் பெறல் வேண்டும். இவ்விதம் பிரதி செய்யும் போது ஏற்படும் இடர்களும் பாடலமைப்பில் ஏற்படும் வழுக்களும் உதாரணங்களாக இப்பகுதி யில் காட்டப் பெற்று, உரிய பாடலமைப்பின்மையால் ஏற்பட்ட குறைகள், அவற்றை நீக்க வேண்டிய காரணங்கள் பாடலின் உரிய வடிவம் யாவும் விளக்கப் பெற்றுள்ளன.

119. "கொவததனகிரி தாஙகும திருமால பாரிமலகு
மாவறதனகிரி மடாதிபதி தெவாதொழும"

எனச்சுவடியில் உள்ள பிரதி

கோவத் தனகிரி தாங்குந்திருமால் பாரிமல்கு
மாவற் தனகிரி மடாதிபதிதேவர்—தொழும்

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. இந்தப்பகுதி கண்ணி முறையில் யாப்பமைதியுடன் பதிப்பிக்கப் பெறவில்லை. ஏட்டில் எழுதியவர் பிழையும் நீக்கப் பெறவில்லை. தனிச்சீர் எதுகை அமையவில்லை. புள்ளி தவறாகவும் வைக்கப் பெற்றுள்ளது

முதலடி மோனை இல்லை. இறுதிச் சீரில் 'ம', மிகை 'ல' புள்ளி பெற்றதும் பிழை இதை நீக்கிப் பின்வருமாறு அமைத்தால் கலி வெண்பா அமைப்புக்கிட்டும்,

கோவத் தனகிரிதாங் குந்திருமால் பாரிலகு
மாவற் தனகிரிம டாதிபதி–தேவர்தொழும்

--அமுதரஸ மஞ்சரி·55

120. "நிதி வழுவாமல் நிடுழி காகாகூமது
தனனி ராம சுவாமியெனும்—நிதிமனனா"

என்று சுவடிப்பிரதியிலிருக்கலாம். இது

"நீதி வழு வாமல் நீடூழி காக்ரகூமது தனனி ராம
சுவாமி யெனும் —நீதிமன்னர்"

என அச்சிடப் பெற்றுளது இவ்வமைப்பில் பாடலமைப்பு எதுகை, மோனை பொருள் முறை ஒன்றும் சரியாக இல்லை. ஏட்டில் பிரதி செய்தவர் பிழை 'காக்ரகூமது' என்பதாகும். இது காக்குமது எனக் கொள்ளப் பெற்று அடியிற் குறிப்பிட்ட வண்ணம் அமைய வேண்டும்

"நீதி வழுவாமல் நீடூழி காக்குமது
சூதனனி ராம சுவாமியெனும்–நீதிமன்னர்" எனில்

எதுகை, மோனை, பொருளமைதி. பாடலமைப்பு இந்தவமைப்பில் பொலியும்

—அமுதரஸ மஞ்சரி·121

121. "ககள் மனங் கூர்சிறிய தாதையென வந்துதித்த
ளகல்லியாண மகராசன்–செங்கோன்மை"

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது இவ்வமைப்பைக் கொண்டு ஏட்டில் எப்படி இருக்கும் என ஊகிக்க இயலவில்லை. இவ் வமைப்பில் எதுகை மோனை, தளையாவும் பிழைபட்டுள்ளன. சில எழுத்துக்கள் விடுபட்டுள்ளன. முதலடி மூன்றாம் சீர் தாதை யென வருதலால் முதற்சீர் மோனை 'த'வாக இருக்க வேண்டும் தனிச்சீர் செங்கோன்மை என்பதால் எதுகை பற்றி இரண்டாம் எழுத்து'ங்' என்ற மெய்யெழுத்து வரல் வேண்டும் எனவே முதற் சீர் ககள் என்பது தங்கள் மனம் என்றிருக்கக் கூடும். அப்படி யாயின் இரண்டாம் அடி ளகல் என்பது எதுகையாக வேண்டின் ஙகர ஒலிவேண்டும். மகராசன் என்பதற்கு மோனையாக மவும்

எதுகைக்காக 'ங்' என்ற எழுத்தும் வரல் வேண்டும். இவற்றைச் சேர்த்து

"தங்கள்மனங் கூர்சிறிய தாதையென வந்துதித்த
மங்களகல் யாண மகராசன்–செங்கோன்மை"

என வமைக்க வேண்டும் அப்பொழுதுதான் கலிவெண்பாக் கண்ணியமைப்பு செவ்வையாகும்.

—அமுதரஸ மஞ்சரி 122

122. "பரியம் பரிக்கவே வந்தருள்கு
ன்வெகுயோக பிறபலவான–செரனென"

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந்தக் கண்ணி முதலடியில் மூன்று சீரும் இரண்டாம் அடி மெய்யெழுத்தில் ஆரம்பித்தும் பிறபலவான் என வல்லினறகரம் கொண்டும், தனிச்சீர் செரனென எனக் குறிலாகவும் பிழை மலிந்துள்ளது. தனிச்சீர் சேரனென என்பதை கொண்டு கண்ணி யமைப்பை, இருக்கும் சொற்களுடன் யாப்பிலக்கண அமைப்புக் கேற்ப ஒருவாறு அமைக்கலாம்.

சேரன் என தனிச் சீர் உள்ளதால் எதுகை நெடிலாக வமைய நோக்கின் முதலடியில் பாரம் என்ற எழுத்துக்களும், முதலடி இறுதி வந்தருள்கு என்பதால் எதுகைக் கேற்ப மோனைக் கேற்ப பேரன் என்ற எழுத்துக்களும் விடுபட்டமை ஊகிக்கலாம். எனவே இக்கண்ணி பாடலமைப்புக் கேற்ப

பாரம் பரியம் பரிக்கவே வந்தருள்கு
பேரன்வெகு யோக பிரபலவான்–சேரனென

எனக் கொள்ளவேண்டும். ஏட்டில் எழுதாமலோ சிதைந்தோ இப் பகுதி இருக்கு மாதலின் புதிதாகச் சேர்த்த சொற்களைப் பகரவளைவிட்டு அடியிற் காணுமாறு பதிப்பிக்கலாம்.

[பாரம்] பரியம் பரிக்கவே வந்தருள்கு
[பேர]ன் வெகு யோக பிரபலவான்–சேரனென"

—அமுதரஸ மஞ்சரி 123

123. "சீதளத்தால் வாசனையால் செய்யசுவையாலே
வாக்குமோது முடலாயுயிர்க்குயிராய்"

என்று பதிப்பிக்கப் பெற்றுளது, இவ்வமைப்பில் இரண்டாமடி எதுகை பெறுமலும் மூன்று சீரும் தனிச்சீரும் பெறாமல் நான்கு சீர்களும் தனிச்சீரும் பெற்றுள்ளன. சிறிது கவனமாக நோக்கின்

இத்தகையை பிழையை மாற்றலாம். முதலடி இறுதியில் உள்ள நெடில்'லே', லௌனக் குறிலாகவும் அடுத்த அடி முதலில் உள்ள 'வாக்கு' என்பது 'ா' என்ற கால், புள்ளி பெற்று வர்க்கு மெனவும் அமைக்கப் பெற்று முதலடி இறுதிச் சீருடன் சேர்ந்து வர வேண்டும். இப்படிவரின் பாவமைப்பு ஒழுங்காகும், இதோ ஒழுங் கான அமைப்பு.

> ''சீதளத்தால் வாசனையால் செய்யசுவை யாலெவர்க்கு
> மோது முடலா யுயிர்க்குயிராய்''
>
> —அமுதரஸ மஞ்சரி 143.

124\. ''தேவாரமே முதலாய் செந்தமிள் தோறுங்
கதையாய்ப் பாவாணாராராய்ந்து பாடலுற்றூர்''

என அச்சில் இப்பகுதி பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வமைப்பில் இரண்டாமடி எதுகையமையவில்லை மோனை பெறவில்லை மூன்று சீருக்குப் பதில் நான்கு சீர்கள் உள்ளன. இது பாட லமைப்புப் புரியாமல் பதிப்பாளர் செய்த பிழையாகும்.

முதலடிப் பிற்பகுதியில் செந்தமிள் தோறுங் என்பதுடன் அடுத்த அடி 'கதையாய்' என்ற சொற்களைச் சேர்த்தமைக்கத் தேவாரம் என்பதற்கு எதுகை பாவாணர், எனவும் பாவாணர் என்பதற்கு மோனை பாடலுற்றார் எனவும் உரிய மூன்று சீர்க ளுடன் இந்தக் கண்ணி, பின்கண்டவாறு சரியாக வமையும்

> ''தேவார மேமுதலாய் செந்தமிள்தோ றுங்கதையாய்ப்
> பாவாண ராராய்ந்து பாடலுற்றூர்''
>
> —அமுதரஸ மஞ்சரி 165.

125\. ''பேர்மகிமை யன்றே பிரபஞ்சத்தார்க்காணையிட
வந்து நின்றது நீயலவோ—சாருலகில்

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் பாடலமைப்பு எதுகை, மோனை, சரியாக அமையவில்லை. மேலும் இரண்டாமடி வந்து நின்றது என்றசீர்கள் தளைபிறழ்வாக (மாமுன்-நேர் வந்து கெட்டது) உள்ளது.

முதலடி பேர் மகிமை என்பதற்கு எதுகையாகத் தனிச்சீர் சார்உலகில் என அமைந்துள்ளது. எனவே இரண்டாமடியில் நீ என்ற மோனைக் கேற்ப அதன் இன எழுத்துக்களில் ஒன்று 'ர்' என்ற மெய்யெழுத்துடன் எதுகை பெறவேண்டும். நேர் என்ற எழுத்துக்கள் விடுபட்டதை இதனுல் உணர்ந்து அமைத்தால் பாவமைப்பு நேர் ஆகும்.

"பேர்மகிமை யன்றோ பிரபஞ்சத்தார்க் காணயிட
நேர்வந்து நின்றது நீயலவோ-சாருகில்"
—அமுதரஸ மஞ்சரி 173.

126. "நற்கீர னுன்னுடைய நாம மகிமையன்றோ
சொற்கீர சுனுடனவா துக்கெதிர்ந்தான்"

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ள இவ்வமைப்பில் ஏட்டைப் பிரதி செய்தவர் பிழை உணராமல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நக்கீரன் என்ற சொல்லை நற்கீரன் என எழுதிச் சொக்கீசுரன் என்பதையும் ஏதுகைக் கேற்பச் சொற்கீரசுனுடன் எனப் பிரதி செய்துள்ளார். சொக்கன், சொக்கீசன் என்பதே ஆலவாய் இறைவன் திருநாமம், சொற்கீசன் அன்று. அதே போல நக்கீரன் என்பதே சரியான பெயர். நக்கீரன் ஆலவாய்ச் சொக்கீசுரனுடன் வாதிட்டதே வரலாறு, எனவே இப்பகுதி

"நக்கீர னுன்னுடைய நாம மகிமையன்றோ
சொக்கீ சுரனுடன்வா துக்கெதிர்ந்தான்"

என்றமைதல் வேண்டும்.

127. "நீருற்ற செய்க்கரும்பாய் நில்லாம லாங்கதையே
தூர்த்தெடுத்துச் சுமவாமல்-சார்கருப்பஞ்

என அச்சிற் பதிப்பிக்சப் பெற்ற இப்பகுதி பாவமைப்புக்கு ஏற்ப இரண்டாமடி மூன்றுசீர் பெறாமலும் உள்ளசீர்கள் தளைபிறழ் வாகவும் உள்ளன. நீருற்ற என்ற 'ரு' உயிர்மெய் எதுகைக் கேற்ப 'தூர்த்' என்ற சொல் புள்ளி நீக்கம் பெற்று 'தூரத்' என பதிக்கப் பெற்றால் தூரத் தெடுத்துச் சுமவாமல் என முச்சீராகிப் பாடலமைப்பு செம்மைப்படும். எனவே.

"நீருற்ற செய்க்கரும்பாய் நில்லாம லாங்கதையே
தூரத் தெடுத்துச் சுமவாமல்- சார்கருப்பஞ்"

என்றமைக்கப் பெறல் வேண்டும்.
— அமுதரஸ மஞ்சரி 223

128. "சிக்க முடித்துவளர் செவ்வியால் தாளத்துக்
கிசைந்து சாப்பாடு தூய்மையால்"

எனப் பதிப்பிக்கப் பெற்ற இப்பகுதி எதுகை பெறாமல், தளை முரண்பாட்டுடன் அமைக்கப் பெற்றுள்ளது. மேலும் பொருளும் பொருத்தமாக இயையவில்லை. முதலடி இறுதிச்சீர் 'தாளத்துக்

எனவும், இரண்டாமடி 'கிசைந்து' எனவும் அமைந்தது தளை முரண்பாடு, எதுகைக் குறையுமாகும். மேலும் சாப்பாடு என்பது பொருள் முரண்பாடு கொண்டுள்ளது. தாளத்துக் கிசைந்து நாப் பாடுதல் முறையாகும். இங்கு 'ந' என்ற எழுத்து 'ச'வாக மயங்கி யுள்ளதுடன் கிசைந்து என்பதுடன் தளைவிரவி இல்லை. இக் குறைகளை உணர்ந்து தாளத்துக் என்பதில் உள்ள இறுதிச் சொல் துக் என்பதை அடுத்த அடி கிசைந்து என்பதுடன் சேர்த்து துக்கிசைந்து என வமைத்து நாப்பாடு தூய்மையால் என வமைத் தால் எதுகை, மோனை, பொருணயம் எல்லாம் பெறும் எனவே' இக்கண்ணி

"சிக்க முடித்து வளர்செவ்வி யால் தாளத்
துக்கிசைந்து நாப்பாடு தூய்மையால்"

என அமைதல் வேண்டும்.

—அமுதரஸ மஞ்சரி 250

–நற்குவியப்

129. பங்க யமனையில் மெய்த்திருநீங் காதகயப்
பங்க யமனைய கையாள்–பயத்த

என இப்பகுதி பதிப்பிக்கப் பெற்றுளது. இதில் தனிச்சீர் பயத்த என்பதற்கு எதுகை அமையவில்லை மேலும் இரண்டிடங்களிலுமே மோனை இல்லை. கலிவெண்பாக்கண்ணிகளில் எதுகை மோனை முதலிய அமைப்பைக் கொண்டே பாடலின் வடிவை அறிய வேண்டும். ஏட்டில் ஒரே சங்கிலித் தொடராக எழுதப் பெற்றிருக்கும். இதைப் பதிப்பிக்கும் போது, எதுகை மோனை களைக் கவனித்துப் பிரித்துப் பதிப்பிக்க வேண்டும். இக்கண்ணியில் இவ்வமைப்பில் மோனை எதுகை இல்லையே என்பதை உணர்ந்து கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்தால் உரியவடிவம் புலனாகும். முதலில் வந்த தனிச்சீர் 'நற்கு வியப்' என்பதில் 'வியப்' என்ற பகுதியை அடுத்த அடிமுதற் சீரோடு சேர்த்துத் தளைவிரவி வரப்பிரதி செய்தால் கண்ணி சீராக உரிய வடிவம்பெறும். கீழே அவ்விதம் பிரதி செய்யப் பெற்றுள்ளது காண்க.

–நற்கு

"வியப்பங் கயமனையில் மெய்த்திருநீங் காத
கயப்பங் கயமனைய கையாள்–பயத்த"

—சேலம்—தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி—48

130. "ஓவிய முமாவிபெற வுள்ளாவி பெற்றதென
லாமோ வியமாக வுலகிருப்பக்–காவில்"

என இப்பகுதி பதிப்பிக்கப் பெற்றுளது இதில் இரண்டாவதடி எதுகை பெறவில்லை. மோனை பெறவில்லை. மூன்றாம் சீர்தளை கெட்டுள்ளது. இக்குறை பதிப்பில் நேர்ந்த குறையாகும். சிறிது கவனித்தால் பிழை உணரப்பெறும். இரண்டாமடியில் லாமோ வியமாக என்ற பகுதியில் 'லா' மிகை மோ என்பது லோ வாக வேண்டும். மிகையை நீக்கிப் பிழையைத் திருத்தி அடியிற் குறித் தாங்கு பதிப்பித்திருக்க வேண்டும். இப்பகுதியின் சரியான வடிவம்

ஓவியமு மாவிபெற வுள்ளாவி பெற்றதென
லோவிய மாக வுலகிருப்பக்—காவில்''

என்பதாகும்

சேலம்-தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 172

—''நானமூ
131. வாவா றடிகறங்க வூறுமத மாருநி
வாவா றுடைய நெடுமால்—சிவாகமத்து''

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் தனிச்சீர் குறிற்றொடக்கமாகவுள்ளது. முதலடி இரண்டாமடித் தொடக்கம் நெடிலாக வந்து எதுகை பொருந்தவில்லை மேலும் உரியமோனை பெறவில்லை. இரண்டாமடி மூன்றாம் சீரும்-தனிச்சீரும் தளை யமையவில்லை. முதலடிக்கு முன்வந்த தனிச்சீர் 'நான மூ' என்பது பிழை. நானமு என்றிருக்க வேண்டும். ஏட்டில் ஒரே தொடராக எழுதப்பெற்றிருக்கும். அதைப் பிரித்து எழுதுகையில் தனிச்சீர் 'நான' எனக் கொண்டு, 'மு' அடுத்த அடித் துவக்கத்திலும் அந்த அடியின் இறுதியில் உள்ள 'நி' இரண்டாமடித் துவக்கத்திலும் அமைந்து

—''நான
முவாவா றடிகறங்க வூறுமது மாரு
நிவாவா றுடைய நெடுமால்—சிவாகமத்து''

எனப் பதித்திருக்க வேண்டும். இப்படிப் பதிப்பித்தால் யாப்பமைதி யுடன் உரிய வடிவமும் இக்கண்ணி பெறும்

—சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி 140-41

132. ''சித்தஞா னத்தாற் றெரிசித்து-மொய்த்த
மதத்தால் வடவை யவித்து வயக்கடை
ககக்கால் வடவைவிடுங் கைம்மா—ஞாலஞ் சூழ்''

எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மேலும் அடிக்குறிப்பில் ''இக் கண்ணியில் வரும் ஞாலஞ்சூழ் என்னும் தனிச்சொல் 'மதத்தால்'

எனத்தொடங்கும் முன்னடிக்கு ஏற்புடைத்தாயில்லை இங்கே ஒரு கண்ணியை ஏடு பெயர்த்தெழுதியோர் விடுத்தனரோ என்னும் ஐயம் தோன்றுகிறது, என வரையப் பெற்றுளது. இது தவறாகும். கண்ணியமைப்பு முறையிற் கவனம் செலுத்தாத லாலும், சொற்களை மாற்றியமைத்தும் புள்ளிகளைத் தவறாக வைத்ததாலும் வந்த தவறாகும்.

''சித்தஞா னத்தாற் றெரிசித்து–மொய்த்தமதத்
தால வடவை யவித்து வயக்கடைக்கக்
கால வடவைவிடுங் கைம்மா-ஞாலஞ்சூழ்''

எனவமைய வேண்டும்

—சேலம் தலம் தீர்த்த செழியன் மஞ்சரி 294, 295

133. பாத்தூர்செம் பொன்னுதவு பண்பால் மயிலையு
மாமாத்தூரெனவே மதி

என அச்சிற்பதிக்கப் பெற்றுளது. பாத்தூர் என்பதற்கியைய எதுகை அடுத்த அடி பெறவில்லை. மாமாத்தூர் என்ற காய்ச்சீர் முன் எனவே என நிரைவந்துள்ளது பிழை. எனவே இப்பகுதி யமைப்பில் ஏதும் குறையுள்ளதா எனக் கவனிக்க வேண்டும் அப்படிக் கவனித்தால் முதலடி இறுதி 'மயிலையு' மென்பதுடன் அடுத்த சீர்முதற்சொல் மா என்பதைச் சேர்க்க வேண்டும் என்பது புலனாகும். அவ்விதம் முதலடி இறுதிச்சீர் 'மயிலையுமா' எனக் கொண்டால் அடுத்த அடி எதுகைக்கேற்ப 'மாத்தூர்' என்றாகி தளையும் சீர்படும். எனவே இப்பகுதியின் சரியான வடிவம்

''பாத்தூர்செம் பொன்னுதவு பண்பால் மயிலையுமா
மாத்து ரெனவே மதி''

—திருமயிலை உவமை வெண்பா

134. ''தாவுபடா மற்றெரிவோன் தனதநிதி இவன்பா
லேதான் பேற்றல்''

எனப்.பதிக்கப் பெற்றுளது. இப்பகுதி 4 காய்ச்சீர், 2 மாச்சீர் ஆக வரும் ஆறுசீர் விருத்தமாகும். விருத்தப்பாக்களின் அடிகள் அளவொத்திருத்தல் விதி. இந்த வடியில் நான்காம்சீர் மாச்சீராக இவன்பா எனவுள்ளது. இச்சீரை இவன்பாலே எனக் கொள்ள லாம்.அப்படிக் கொள்வதாயில் ஐந்தாப் சீர் தான் என்ற ஓரசையே கொண்டு சீர் நிறைவு பெறாது. எனவே சில எழுத்துக்கள் விடு

பட்டமை உணரலாம். 'தான்' என்பது புள்ளியின்றித் 'தான' எனவும் பேற்றால்' என்பது பெற்றால் எனவும் வந்து இடையில் 'ம்' என்ற மெய் சேர வேண்டும். அப்படிச் சேரின் இந்த அடி நிறைவுபெறும்.

''தாவுபடா மற்றெறிவோன் தனதநிதி இவன்பாலே
தானம் பெற்றல்''

—சுசீல வள்ளல் அம்மானை. கீர்த்திக்கவி

135. வாமாறு புகழ்படைத்தோ னூடி ரூஞ்சல்
ரதிநாத பெருமானு ராடி ரூஞ்சல்

என்று இப்பகுதி பிரதி செய்யப் பெற்றுள்ளது. ஏட்டில் சந்தி சேர்த்தே எழுதப் பெற்றிருக்கும் சந்தி பிரித்துப் பிரதிசெய்வதா யின் சொல்லமைப்பைக் கவனமாகக் கொள்ளவேண்டும்.

வாமாறு புகழ் படைத்துதோ னாடிரூஞ்சல் என்பதில் ஊஞ்சலா என்ற சொல்லில் ஊஞ்சல் எனப் பிரிதது பின்னர் 'ா' நீககி ஆ என்றெழுதாமல் மயஙகி காலை 'ர' என எழுதியதாற் பிழை நேர்ந்தது.

வாமாறு புகழ்படைத்தோ னூடி ரூஞ்ச
லாதிநாதப் பெருமானு ராடி ரூஞ்சல்

என்பதே உரிய அமைப்பாகும்

—ஆதிநாதர் ஊஞ்சல் 9

136. ''இங்கிரண்டு
மண்டலங்க ளும்புயங்க மண்டலங்க ளுந்தியங்க
விண்ட
லங்களுஞ் சுமந்து மென்றழும்பு கொண்டகொண்டல்''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது

இந்த வமைப்பில் இரண்டாவது அடி எதுகை பெறவில்லை. முதலடியில் சீர் அதிகமாகவும் உள்ளது. இதை உணர்ந்து கவனித்தால் குறை என்னவெனப் புரியும் முதலடி இறுதியில் உள்ள 'விண்ட என்ற சொல், எதுகையாக இரண்டாமடித்துவக்கத்தில் அமையின் பாடலமைப்பு தெளிவாகும்

—இங்கிரண்டு
மண்டலங்க ளும்புயங்க மண்டலங்க ளுந்தியங்க
விண்டலங்க ளுஞ்சுமந்து மென்றழும்பு–கொண்ட
கொண்டல்

என அமைத்தல்வேண்டும்

—பணவிடுதூது 362

137. ''தூணடிலிடைபபட டுழலமினறுனப மெவையொ
வவைபொல''

எனச் சுவடியிற் பிரதி செய்யப் பெற்ற பகுதி

''தூண்டில் இடைப் பட் டுழல்மீன் துன்பம் மவை
போல்''

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. இவ்வடியில் மோனை இல்லை. அடிக்குறிப்பில் ஓலையில் 'எவையோ' எனும் சொல்லும் அவ்விடத்தில் எழுதப்பட்டுள்ளது எனக் காணப்பெறுகின்றது. 'எவையோ' என்னும் இச்சொல்லையும் இவ்வடிக்கண் உரிய இடத்தில் சேர்த்தால் இவ்வடி மோனையும் பெற்றுச் சிறக்கும். ஓலையில் உள்ள எழுத்தை விவரம் புரியாமல் விட்டுவிடல் பிழையாகும். ஓலையை அச்சில் பதிக்கும்போது கவனமாக எல்லா எழுத்துக்களையும் எதுகை மோனை, தளை ஆகியவற்றுக்கியைய உள்ளனவா எனக் கவனிக்கவேண்டும். இப்பகுதி எவையோ என்ற சொல்லுடன்

''தூண்டிலிடைப் பட்டுழல்மீன் துன்பமெவை
யோவவைபோல்

எனவமையும்

—சுசீலவள்ளல் அம்மானை பக் 134 வர்க்க வெண்பா 45

பலவகை

முற்கூறிய 6 தலைப்புக்கள் அல்லாமல் ஏட்டிற் பிரதி செய்யும் போது ஏற்படும், ஒருமை-பன்மை மயக்கம், சந்தி-மயக்கம், தளை பிறழ்வு, குற்றியலுகரம் விட்டிசைத்தல் ஆகிய குறைகள் இந்தப் பலவகை என்ற தலைப்பில் கூறப்பெற்றுள்ளன.

ஒருமை பன்மை, சந்திமயக்கம், தளைபிறழ்வு, குற்றியலுகரம் விட்டிசைத்தல் இவற்றால் ஏற்படும் குறைகளை சிற்சில உதாரணங் களுடன் எடுத்துக்காட்டி, இக்குறைகளை நீக்கும் முறையும் இப் பகுதியில் அங்கங்கே விளக்கப் பெற்றுள்ளன.

ஒருமை பன்மை
தாந்தானே–தாந்தாமே

138. ''தாவில் விழுப்பொருளாந் தாந்தானே''

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுளது. இது ஏட்டைப் பிரதி செய்தவர் அறியாமையால் செய்தபிழையாகும். படிக்கக் கேட்டுப் பிரதி செய்கையில் இம்மாதிரிப் பிழைநேர்வது சகஜம். தான் தானே எனப் படிப்பவர் கூறத் தாந்தானே எனப்பிரதி செய்பவர் எழுதியுள்ளார். சந்தி விதியின்படி, ம் + தவரின் 'ந்' எனத்திரியும் எனவே தாம் என்ற பன்மை 'தாந்' எனவரும். தாம் என்ற பன்மைக்குப் பன்மை விகுதி வரலே விதி. தானே என ஒருமை விகுதி வரல்பிழையாகும். இப்பகுதிஒன்று 'தாந்தாமே' என்றிருக்க வேண்டும் அல்லது தான் தானே என ஒருமையாகில் 'தான் றானே எனவமைய வேண்டும்.

—அப்பாண்டைநாதர் உலா 36

139. ''செவறகொடிபிடிதது சிததிரமயிலெறியெநதன்''

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற பகுதி

'சேவற் கொடிபிடித்து சித்திரமயிலேறி யெந்தன்'

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது.

இப்பகுதியில் 'என்றன்' என்பதை ஏட்டைப் பிரதிசெய்தவர் 'யெந்தன்' எனப் பிரதி செய்துள்ளார் 'எம்' என்ற பன்மை 'தம்' என்ற விகுதியுடன் வரும். தன் என்ற ஒருமை விகுதிபெறாது. அதேபோல 'என்' என்ற ஒருமையும் தம் என்ற பன்மை விகுதி பெறாது. மேலும் புணர்ச்சி விதிப்படின் + தவரின் 'ன்ற'வாகும். ம் + தவரின் 'ம்' கெட்டு 'ந்' ஆகும். ஏட்டில் பிரதி செய்தவர் கேட்டு எழுதியவராகவும் நூற்புலமையற்றவராகவும் இருந்ததால் ஏட்டை படித்தவர் என் தன் எனப்படித்ததை 'எந்தன் என எழுதினர்போலும். பதிக்கும்போது இக்குறையை நீக்கி 'யென்றன்' எனத் திருத்தி

சேவற்கொடிபிடித்துச் சித்திரமயிலேறி யென்றன்

எனப் பதிப்பிக்கவேண்டும்

—சுசீலவள்ளல் அம்மானை 21

140. ''யாகமது செயவதறகு யாநதானெ யொகியெனறு''

எனச் சுவடியில் பிரதிசெய்யப் பெற்ற பகுதி

''யாகமது செய்வதற்கு யாந்தானே யோகியென்று''

என அச்சிற்பதிப்பிக்கப் பெற்றுளது.

இப்பகுதியில் யாந்தானே என்பது பிழையாகப் பிரதி செய்யப் பெற்றுளது. ஒருமை பன்மை அமைப்பு நிலையறியாதவர் பிரதி

செய்யும்போது செய்தபிழை இது. தன்மை ஒருமையாக **யான்** என்ற பகுதி இருப்பின் **தான்** என்ற விகுதி பெறலே முறை. யாம் என்ற தன்மைப் பன்மையாகில் தாம் என்ற விகுதியே பெறல் வேண்டும். இத்தொடரைக் கூறுபவர் மேலும் பின்னடியில் தன்னைப், பன்மையாகவே ''பாகமது செய்து வந்தோம்'' எனத் தெளிவாகக் கூறுவதால் 'யாந்தானே' என்ற சீர் 'யாந்தாமே' என்றுதான் அமையவேண்டும். இதையுணர்ந்து பதிப்பிக்கும்போது திருத்தி

''யாகமது செய்வதற்கு யாந்தாமே யோகியென்று''

என்றே பதிப்பிக்கவேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 246

141. ''எனனரசைத தாஙகிடுவாயெநதலெ யாமுமினி''

என்ற சுவடிப் பிரதி

''என்னரசைத் தாங்கிடுவாய், ஏந்தலே! யாமுமினி''

எனப் பதிப்பிக்கப் பெற்றுளது.

இப்பகுதியில் 'என்னரசை' என ஒருமையில் அடி துவங்குகின்றது. ஆனால் இறுதியில் ''யாமும்'' எனப் பன்மை வருகின்றது. பின்னர் இக்கூற்றின் முடிவில் சேர்ந்திடுவேன் என ஒருமையில் முடிந்துள்ளது. எனவே 'யாமும்' என இடையில் வந்தது பிழையாகும். ஏட்டைப் பிரதி செய்தவர் கவனக் குறைவால் வந்த பிழை இது எனத்தெளிந்து **'யானுமினி'** என்று திருத்தி இப்பகுதியை

''என்னரசைத் தாங்கிடுவாய் ஏந்தலே யானுமினி''

என்றே பதிப்பிக்கவேண்டும்

—சுசீலவள்ளல் அம்மானை 421

சந்தி மயக்கம்

142. ''நாற்றிசையோ ரும்புகழ நா நடத்தும் யாகமதை''

என்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் பிழை ஏதும் இல்லை. ஆயினும் நா நடத்துயாகம் என்பதில் சந்தியில் மகரங் கெட்டது அறியாமல் நா, நாவு என மயங்கிப் பொருள் செய்ய வாய்ப்பளிக்கும் என்பதாலும், பல இடங்ளில் சந்தியைப் பிரித்தே இந்த நூலில் பதித்திருப்பதாலும் நா-நடத்தும் என்பதை நாம் நடத்தும் என்றே பதிப் பித்திருக்கலாம், பொருளும் தெளிவாகும்.

"நாற்றிசையோ ரும்புகழ நாம்நடத்தும் யாகமதை"

என்றிருப்பின் குறை ஏதுமில்லை.

143. அதனிற றலைமை பெறறெனம மனனரைப

பணிநது"

எனச் சுவடியில் பிரதி செய்யப் பெற்ற பகுதி

"அதனிற் றலைமை பெற்றேன் நம்மன்ன

ரைப்பணிந்து"

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இது சந்தி மயக்கத்தால் வந்த பிழை. 'பெற்றேன்' நம் மன்னர் என்பது பிழை. அதனிற் றலைமை பெற்றேன் என்பதற்கு மோனை இல்லை. அம்மன்னரை எனப் பிரித்தால் மோனையும் பொருளும் சரியாகவமையும். சந்தி பிரிப்பதில் மயக்கம் ஏற்படின் பிரிக்காமல் உள்ளபடியே பதிப்பித்தால் பிழையும் இல்லை. படிப்பவர்கள் பொருளை உணரவும் வாய்ப்பாகும். இப்பகுதி

"அதனிற் றலைமை பெற்றே னம்மன்ன

ரைப்பணிந்து"

எனவோ,

"அதனிற் றலைமை பெற்றேன் அம்மன்ன

ரைப்பணிந்து"

எனவோ பதிப்பிக்கப் பெறல்வேண்டும்.

—சுசீலவள்ளல் அம்மானை 145

144. "ஐநதலை யகிதனை யணியும வெணியொன
ஐநதெனு மானன னறியொணுப பொருள"

என்ற சுவடிப் பிரதி

"ஐந்தலை யகிதனை யணியும் வேணியோன்
ஐந்தெனு மானன னறியொ ணுப்பொருள்"

எனப் பிரதி செய்யப் பெற்றதைப் பொருள் விளக்கம் கருதிச் சந்திகளைப் பிரித்துப் பதிப்பித்துள்ளனர். சந்தி பிரிக்கையில் பொருள் உணர்ந்து பிரிக்கவேண்டும். ம் எதிர் 'அ' வரினும், 'ம' வரினும் மெய்யெழுத்துப் போய் ம என்ற உயிர் மெய்யே வரும். 'வேண்டும் மரபு', வேண்டும் அளவு என்ற இரண்டிடங்களிலும் 'ம்' என்ற

மெய் மறையும். வேண்டுமரபு, வேண்டுமளவு எனவே வரும். ஆகவே பிரித்தெழுதுகையில் பொருளுணர்ந்து பிரிக்கவேண்டும். இப்பகுதி இரண்டாம் அடி

"ஐந்தெனும் மானனன் அறியொ ணுப்பயன்"

என்று பதித்திருப்பதில் 'மானனன்' என்பது பிழையாகும். இங்கு மானனன் என்ற சொல்லுக்குப் பொருள் இல்லை. ஆனனன் என் பதே உரிய சொல்லாகும். ஆனனம்-முகம் எனப் பொருள்படும் எனவே

"ஐந்தெனும் ஆனனன் அறியொ ணுப்பொருள்"

என்றே பதிப்பிக்கவேண்டும்.

—குவலயானந்தம் - சந்திராலோகம் பக்கம் 65.

145. "ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர"

என்பது பல பதிப்புக்களிலும் காணப்பெறும் திருவாசகப் பகுதி. என்றென்றே நம்பெருமான் என இயல்பாகவே பொருள்கொண்டு உரையாசிரியர்கள் வலிந்து உரை கண்டுள்ளனர். இங்கு சந்தி மயக்கத்தால், 'ம்' என்ற மெய்கெட்டது உணரப் பெறாமையால் வலிந்துரை காண நேர்ந்தது. பொருளும் பொருத்தமாக அமைய வில்லை. பாடலில் சில தோழியர் பாவை நோன்புக்காக வைகறை யில் நீராடச் செல்ல வீட்டில் உறங்கும் தோழியை எழுப்புங்கால் அவர்களுக்குள் எழுந்த உரையாடல் என்பதுணரின்

என்றென்றேம்—நம்பெருமான்

எனப் பாடல் அமையப்பெற்று பொருள் விளக்கமும் கிட்டும்.

தளைமயக்கம்

சொன்ன மகராச(ன்) துரைசுப் பிரமணிய
மன்ன னருளும் வரபாலன்

என அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இதில் முதலடி சொன்ன மகராச துரைசுப்பிரமணிய என்பதில் இரண்டாம் சீரும், மூன்றாம் சீரும் காய்முன் நிரைவந்து தளை கெட்டது. ஆயினும் பாடலில் பொருட் குறையின்மையால், அமைப்பைச் சிறிது மாற்றி

"சொன்னமக ராச துரைசுப் பிரமணிய
மன்ன னருளும் வரபாலன்"

என்று அமைக்க வேண்டும். இது அச்சுப் பிழையாக மாறி அமைக்கப் பெற்றிருக்கலா மாயினும் பதிப்பாசிரியர் கவனித்திருக்க வேண்டும்.

—திருவேங்-வண்டுவிடுதூது 42

147. கரும்பினமே யெனமேற் றெடுத்த மதவேளுங்
கரும்பினமே தங்கைவிடக் காணேன்—விரும்பும்

இப்பகுதியில் முதலடி இறுதிச் சீரும், அடுத்த அடி முதற்சீரும் தளை ஒத்து வரவில்லை. நிரை யெதுகை வெண்பாவாதலால் அடியின் இறுதிச்சீர், ஈரசை மாச்சீராகத்தான் இருக்கவேண்டும் எனவே

கரும்பினமே யென்மேற் றெடுத்தமத வேளும்
கரும்பினமே தங்கைவிடக் காணேன்-விரும்பும்

என அமைய வேண்டும்.

—திருவேங்-வண்டுவிடு தூது 320

148. "செங்கமல மேவு திருவேங் கடநாத
துங்கன் ராச துரந்தரவேள்"

இப்பகுதியில் துங்கன் ராச துரந்தரவேள் எனப் பதிப்பித்ததில் முதலிரண்டு சீர்கள் தளை ஒத்துவரவில்லை. 'துங்ககன' என ஏட்டில் உள்ள பகுதியில் இரண்டு 'க'வில் ஒரு 'க' விடப் பெற்று னகரம் புள்ளி பெற்றதே இத்தவற்றுக்காரணம். எனவே இப்பகுதி

செங்கமல மேவு திருவேங் கடநாத
துங்ககன ராச துரந்தரவேள்

என அமைதல் வேண்டும்.

—திருவேங்-வண்டுவிடு தூது 325

குற்றியலுகரம்-விட்டிசைத்தல்

149. "செத்து அழிந்து சிவலோகஞ் சேர்ந்திடுவேன்"

என அச்சில் பதிப்பிடப் பெற்றுள்ளது.

இப்பகுதியில் செத்து அழிந்து எனப் பிரித்து எழுதியிருப்பது பிழை; உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற சூத்திரப் படி செத்தழிந்து என்றுதான் அமையும் 'செத்தழிந்து சிவலோகஞ் சேர்ந்திடுவேன் என இவ்வடியை அமைத்தால் ஒரு சீர் குறையும்,

இது ஏட்டைப் பிரதி செய்தவர் குறையா! பதிப்பாளர் குறையா! என ஊகிக்க இயலவில்லை. இவ்விதம் வரும் இடங்களில் 'செத்து' எனக் குற்றுகரமாக வமைக்காமல், செத்தேயழிந்து, செத்திங் கழிந்து எனவமைக்க வேண்டும். மாற்றுச் சுவடியில் சரியான பாடம் கிடைக்கும் வரை இவ்விதமே கொண்டு 'தே', 'திங்' என்ற எழுத்துக்களைப் பகர வளைவிட்டு

செத்[தே]யழிந்து சிவலோகம் சேர்ந்திடுவேன்
[திங்]

எனப் பதிக்கலாம்.

—சுசீல வள்ளல் அம்மானை 483

குற்றியலுகரம்

150. ஒப்பேதுனக்கு யொருபோதும் தாட்சியில்லை

என அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுளது. இப்பகுதியில் உனக்கு யொரு போது எனப்பதித்திருப்பது பிழையாகும். இப்பிழை மிகக் குறைந்த தமிழ்க் கல்வி கற்றவர் கூடச் செய்யமாட்டார்கள்.

ஒப்பேது உனக்கு என்ற பகுதி குற்றியலுகர விதிப்படி ஒப்பே துனக்கு என்று பதிப்பிக்கப் பெறும் போது உனக்கு ஒரு போதும் என்றபகுதி உனக்கொரு போதும் எனவே இருக்க வேண்டும். குற்றியலுகரத்தில் உகரம் கெட்டு முன்வரும் சொல் மெய்யுடன் சேர்கையில் உனக்கு யொரு என 'யொ' வந்தது மிகையாகும்.

"ஒப்பே துனக்கொரு போதும் தாட்சியிலை"

எனவே இந்த அடி இருக்க வேண்டும். அப்போது இவ்வடி ஓசை சிறிது குறையும். பிற ஏடுகள் கிடைப்பின் ஒப்பிட்டுப் பூர்த்தி செய்யலாம். அதுவரை ஓசைக் குறைவுடனேயே ஒப்பே துனக்கொருபோதும் தாட்சியில்லை எனவே பதிப்பிக்க வேண்டும். அல்லது யொருபோதும் என உடம்படு மெய் இருப் பதாகக் கொண்டால் அதன் மேல் கு என உகரம் இருக்க வாய்ப் பில்லை என்பதால் 'உனக்கே' என அச்சீர் இருப்பதாகக் கொண்டு

"ஒப்பே துனக்கே யொருபோதும் தாட்சியில்லை"

என்று பதிப்பித்தால் ஓசை நயமும் பெறும்

இந்தக் கையேட்டில் காணப்பெறும் உதாரணங்களுக்கு பயன் பட்ட நூல்கள்

1. அப்பாண்டை நாதர் உலா—சென்னைப் பல்கலைக் கழகம் 'தமிழ் ஆய்வு இதழ்
2. அமுதரஸ மஞ்சரி—'கல்வெட்டு' காலாண்டிதழ் 10, 11. 12, 13, 14, 1976-77
3. ஆதிநாதர் ஊஞ்சல் —கையெழுத்துப்பிரதி, சென்னைக் கீழ்த் திசைச்சுவடி நிலையம்
4. குவலயானந்தம்—Dr. எஸ். வி சுப்பிரமணியன் 1979
5. குறவஞ்சி—தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு 1980
6. சடகோபர் ஊஞ்சல்—கை எழுத்துப்பிரதி சென்னைக் கீழ்த் திசைச் சுவடி நிலையம்
7. சேலம் தாலம் தீர்த்த செழியன் மஞ்சரி—சென்னைப் பல் கலைக் கழகத்தமிழ் ஆய்வு இதழ் 7
8. சுசீல வள்ளல் அம்மானை—தொல் பொருள் ஆய்வுத்துறை 1981
9. திருமயிலை உவமை வெண்பா—சென்னைக் கீழ்திசைச் சுவடி நிலைய வெளியீடு 1953
10. திருவாசகம்—திருவெம்பாவை
11. திருவேங்கட நாதன் வண்டு விடுதூடு—தொல் பொருளாய் வுத்துறை 1981
12. தேவாரம் - தருமபுர ஆதீன வெளியீடு
13. நாச்சியாரம்மன்ஊஞ்சல் } சென்னை கீழ்த்திசைச்சுவடி நிலை
14. நாச்சியார் ஊஞ்சல் } யக் கையெழுத்துப்பிரதி
15. பணவிடுதூது—உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1980
16. மணவைத்திரு வேங்கட நாதன் முகில்விடுதூது—சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நிலைய வெளியீடு
17. வைத்த மாநிதிப் பெருமாள்ஊஞ்சல்—சென்னைக் கீழ்த் திசைச் சுவடி நிலையக் கை யெழுத்துப்பிரதி

இந்நூலுள் காட்டப் பெற்ற உதாரண, விளக்க அகராதி தலைப்பு வாரியாக. (எண் உதாரணங்களின் தொடர்எண்)

I எழுத்துமிகை

பதிப்பு	திருத்தம்	
அங்கபூர்வாங்கமுதனுலாற்கு	அங்கபூர் வாங்கமுதலார்க்கு	3
அரசர்திறை கொள்ளுங்க வன்பாற்	அரசர்திறை கொள்ளுமன்பாற்	7
அன்பாலிவன்பா லவன்பா லவன்பாலு	அன்பா லிவன்பா லவன்பாலு	15
ஆகுயரச்செய் தாடலரனை விருப்	ஆகுயரச்செய்தா டரனைவிருப்	12
இருப்பதா—லடர்ந்த வயி	இருப்பா-லடர்ந்தவயி	10
உண்டலே...வுருகினேன்	உண்டலே(வுள்ள) வுருகினேன்	1
கேசகரியும் பாக மிசைவதாற்	கேசரியும் பாக மிசைவதாற்	11
கொண்டலே கொண் தண்டார்	கொண்டலே கொண்டார்	1
சிங்கார மாவிருப்பதால்	சிங்காரமாவிருப்பால்	9
திருமறைக்காட்-டிறைவன்	மறைக்காட் டிறைவன்	13
துசைச்சாரயி ஞுடுதலால்	துறைச் சார னாடுதலால்	5
நாவின்மன்னவர்க் கருளை	நாவின்மன் னர்க்கருளை	8
பட்டா ரகளங்கற்கு	பட்டா ரகற்கு	2
பாண்டிய விநாயகனொப் பாம்பு	பாண்டியவி நாயகனொப் பாம்	6
பைந்தொடிபோற் றோன்றினன்	பைந்தொடி பாற்றோன்றினன்	16
மனமகிழ்ந்து போலிருந்து	மனமகிழ்ந்து பொலிந்து	14
யாரரங்கர் கோமானோவாதி	யாரங்கர் கோம னோவாதி	17
வாய்ந்துலவி-துதிக்கும்	வாய்ந்து துதிக்கும்	4

II எழுத்துக் குறைவு

பதிப்பு	திருத்தம்	
அன்பே திரியா வாகந் தகழியா	அன்பே திரியாக வாகந் தகழியா	25
ஆப்புரையினாம மைதலாற்	ஆப்புரையி னாம மமைதலாற்	19
கபால நாடகம் றென்புலியூர்க் கபாலன்	காபால நாடகம்...றென்புலியூர்க் காபாலன்	23
கம்பைத் திருநகரிற் காணுலாற்	கம்பைத்திருநகரிற் காணு தலாற்	20
குயிலோடு...கோலக்குடு மயிலோடு மாடி	குயிலொடு...கோலக்குடுமி மயிலொடுமாடி	30
கொம்புழல், வாய் மொழித்தாய்	கொம்புகுழல், வாய்மொழித் தாய்	18
சித்திரை மேல், வையாசிக்கு	சித்திரைமே, லவ்வையாசிக்கு	29
சிலம் பலபி யாட	சிலம்பலம்பி யாட	28
செந்தமுவண் சடகோபர் ஆடிரூசல்	செந்தமிழ்வண் சடகோபர் ஆடிரூசல்	27

தனதுசெங்கோல் வாழ்வேங்க	தனதுசெங்கோல்வாழ்வோங்க	32
திங்களும் மாரிபெய்யும்	திங்களுமும் மாரிபெய்யும்	33
பரிவினாடு நீ காமப்	பரிவினொடு நீ காமப்	31
பாவலர் தாமிசையப் பாகமுவந்நனாற்	பாவலர் தாமிசையப் பாகமுவந்ததனாற்	21
புந்தியிசைந்து பூந்துறை	புந்தியிசை சிந்துபூந்துறை	24
மருவுதலா லங்கா, டண்டன்	மருவுதலா லாலங் காடண்டன்	22
வருக்கைமுட் புறத்தகனி	வருக்கைபலா முட்புறத்தகனி	29

III குறில்நெடில் மயக்கம்

அமைவுறு மேற்கொளினணியா	அமைவுறுமேற்கோளினணியா	35
ஆதியிலேடசிமி தேவியார்	ஆதியிலெட்சிமி தேவியார்	42
கொங்குமலர் சேர் குழந்தை...	கொங்குமலர் சேர்குளந்தை...	
கொளூரன்	கோளூரன்	43
கொற்றேனுங் குமுதமுகை	கோற்றேனுங்குமுதமுகை	44
கோகுல மெய்த்துவந்தநாளில்	கோகுல மேய்த்துவந்தநாளில்	45
சானகிபூந் தாமம் வெட்டு	சானகிபூந் தாமம் வேட்டு	40
தந்தரேகுமாவ தாரமால்	தந்தரெகு ராமாவ தாரமால	37
நின்றுதினம் பொருதலாற்	நின்றுதினம் போற்றுதலாற்	34
பற்றுமழை மாரிபோற் சங்கிலிகளாக	பற்றுமழை மாரிபொற் சங்கிலிகளாக	38
பூங்கமலத் தொன்பரவு மிக்கவாதிப்	பூங்கமலத் தோன் பரவுமிக்க வாதிப்	41
மகிழ்ந்துவெட்ட வைத்த, மாநிதி	மகிழ்ந்துவேட்ட, வைத்தமாநிதி	46
மேவுகொடைக்கன்னனினுமேன் மடங்கு	மேவுகொடைக் கன்னனினுமெண் மடங்கு	47
வந்தடித்திழுத்துக்கொடுபொய் செந்தி	வந்தடித்திழுத்துக் கொடு போய் செந்தீ	39
வழியரும் பன்னூல் வளம் பெற்றாய்	வாழியரும் பன்னூல் வளம் பெற்றாய்	
பாழியுடை	பாழியுடை	49
வுன்பா லேவரிந்த	வுன்பா லெவரிந்த	48
வேண்டருமொன் பான் வசுக்கள்	வெண்டருமொன் பான் வசுக்கள்	36

IV புள்ளி மயக்கம்

ஆக்கினா சுக்ரீ பன்ணட கடாகங்	ஆக்கினா சுக்ரீ பனண் டகடாகங்	51
ஓதுகின்ற பச்சை நாம பொடி	ஓதுகின்ற பச்சை நரம் போடி	58
கங்கையெனச் சேரலாற்	கங்கையெனச் சேர்வாற்	70
கன்னயிடைமின்னிக, ரருமாரி	கன்னியிடை மின்னிக்,கருமாரி	52
கீழ்க்களையூர்கிரியருகை- வாழியநற்	கீழக் களையூர் கிரியருகை- வாழிய நற்	61
சந்தத மாரர் தனஞ்செய	சந்தத மாரா தனஞ்செய்	65
சீரிய பொற்பணியே சேரத்- தணிந்துகூர்த்	சீரிய பொற்பணியே சேர்த்தணிந்து-கூரத்	68
சுசீலமன்னர் தரம்முறை தப்பாமல்	சுசீல மன்னர் தர்மமுறை தப்பாமல்	67

செங்கையினுஞ் சங்குதிர் நெறிய	செங்கையினுஞ் சங்கு திரநெறிய	69
தங்கத் தகடு மத்தநதி மருப்பு	தங்கத் தகடு மத்தந்தி மருப்பு	53
தீத்தார்ப்பன்	தீத்தாரப்பன்	56
நங்கள்ள கப்பன் மது	நங்களள கப்பன் மது	54
நீர்கொண்டபார்நெடுங் கொண்டல்	நீர்கொண்டபாரநெடுங் கொண்டல்	50
பண்புற வாரர் தனஞ்செய பரிவிலாழி	பண்புறவாராதனஞ்செய் பரிவிலாழி	62
பார்ப் பொருப்பில்...	பாரப் பொருப்பில்	
தூர்த் தருவி...காரகிலுஞ்	தூரத்தருவி...காரகிலுஞ்	57
மலர்முகத்தில் குறகுருவேர் வாட	மலர்முகத்திலகுங்குறுவேர் வாட	64
மோகன தாணவ ராயனை	மோகன் தாண்டவ ராயனை	55
மோகினிக் கனபா	மோகினிக் கன்பா	60
லற்பால-முருகனார்	லற்பால்—முருகனார்	59
வெகுண்டு நேரிலா நின்றதிர	வெகுண்டு நேரிலர் நின்றதிர	66
வெள்ளனனவர் கனத்துலாவு	வெள்ளன்ன வாகனத் துலாவு	63

V எழுத்து மயக்கம்

அசுர குமராரதியான பதின்மர்	அசுர குமாராதி யான பதின்மர்	92
அப்பவது பொன்றிறமே	அப்பவது பொன்நிறமே	112
அன்னாட் சரமசிவன்	அன்னாட் பரமசிவன்	76
ஆரமுஞ் சென்னெ லணிதாளமுங்	ஆரமுஞ் சென்னெலணி தரளமுங்	90
ஆழிவளைக் காதலத்தான்	ஆழிவளைக் கரதலத்தான்	88
இரந்தானா ரேற்றபலி	இரந்தரனா ரேற்றபலி	85
என்று மரு காற் பணிந்து	என்றுமறு காற்பணிந்து	107
கணதாராய்க் காசினியில்... குணதரனாம்	கணதரராய்க் காசினியில் .. குணதரனாம்	91
கணபதீச்சுரமென்றார்பாலத்	கணபதீச் சுரமென்றார் பால்த்(ற்)	.09
சற்கிவடி வாகிமாகத வண்ணம்	கறகிவடி வாகிமரகதவண்ணம்	86
கனபோகம் தானழித்து	கனபோகம் தானளித்து	103
கன்றையழித்த கந்தர்	கன்றையளித்த கந்தா	104
காரிகையீரென்னுட் கரிவ னெடியமால்	காரிகையீரென்னுட்கரிய னெடியமால்	80
காவிரி நதி-சேர் தாவிரி	காவிரிநதி கோதாவரி	73
குளவிமதி...மொளிக்கனிவாய்	குழவிமதி...மொழிக்கனிவாய்	98
சமபுசினதர்ம சக்கிரத்தின்	சம்புசினதர்மசக்கிரத்தன்	74
சற்றுநின்றமந்திரிகள்	சுற்று நின்ற மந்திரிகள்	75
சன்னாவ தாரன் கதைருமஞ்	கன்னாவ தாரன் கனதருமஞ்	72
சாரவருமமுத சற்கரை யென்றார் தேவா மாருடைய	சாரவருமமுத சர்க்கரை யென்றாற் றேவர்மாருடைய	117
சிங்காரமாகவரு பண்பாலக்	சிங்காரமாகவருபண்பால்க்(ற்)	111
செந்திருவாழநின்று திருப்புயத் தில்கூந்தலாட	செந்திருவாள் நின்று திருப் புயத்தில் கூத்தாட	10

சோதிக்கு மாவை டோழ சேர்ந்தான்	சோதிக்குமரனவடோள் சேர்ந்தான்	115
திருவிதந்தான் சொற்	திரு விதந் தரன் சொற்	89
துன்படையாவாராகத்	துன்படையாவாறாகத்	82
தென்னம்பலச்சோலை சேருமா வண்டூர்வாள்	தென்னம்பலச் சோலை சேருமா வண்டூர் வாழ்	99
நல்வசன வாக்கருள் நாவாணி	நல்வசன வாக்கருள் நாவாணி	84
நல் அரம்பை யன்ன நறுந் தொடையாள்	நல்லரம்பை யன்ன நறுந் தொடையாள்	94
நற்பாலன் றன்னொளிவாற்	நற்பாலன் றன்னொளியாற்	81
நீதியவர் மேலு மங்கை	நீதியலர் மேலுமங்கை	95
நீள்விளிக்கஞ்சனமெழுதி நிலக் காப்பிட்டு சீராட்டும் பசுங் குளவி	நீள்விழிக்கஞ்சனமெழுதி நிலக் காப்பிட்டு சீராட்டும் பசுங்குழவி	100
நீள்மாஞ் சூள்	நீள்மரஞ் சூழ்	118
நெருங்குவளைக் கனக மலரால்	நெருங்குவளைக் கைமலரால்	114
படைத்த வண்ண வாகனனை	படைத்த வன்ன வாகனனை	116
பண்டிரை பவப்புணரி	பண்டிரை பயப்புணரி	96
பலகாம மாற்றும் பரிவால்	பவகாம மாற்றும் பரிவால்	97
பாவவவதரித்த மூர்த்தி	பரவவவ தரித்த மூர்த்தி	83
பொதிய வரை மீனான்	பொதியவரையினான்	79
முகமதியிற் குருவேர்வை	முகமதியிற் குறுவேர்வை	106
முற்றும் வெழுத்து முகம் வெழுத்து	முற்றும் வெளுத்து முகம் வெளுத்து	
கன்னங்குளிந்து கயற்கண் குளிந்து	கன்னம் குழிந்து கயற்கண் குழிந்து	101
மூதார மேனடிப்ப	மூதரா மேனடிப்ப	87
மேந்திளநாள் மடாக்கமலத்	மேந்திளநாண்மடற்கமலத்	110
மேருமலையிற் பொறித்த வேள்முகா	மேருமலையிற் பொறித்த வேள்முகா (மு)	113
மேனோக்கிநின் றிறங்கும் பொழில்	மேனோக்கி நின்றிரங்கும் பொழில்	108
யாரா வமுத நிறை	யாராவ முத நிறை	78
யென்று மறியோமென்றியம்பும் பொருள்	யென்று மரியோமென்றியம் பும்பொருள்	105
வளர் மாத மாலிசைந்த	வளர் வரத மாலிசைந்த	77
வாகனத்தாள் அறுபத்து	வாகனத்தா ளாறுபத்து	71
விநாயுகன் வீதாரகன்	விநாயகன் வீதராகன்	93

VI பாடலமைப்பு

முதலில் உள்ளவை பதிப்பிற் கண்டவை. அதன் கீழ் உள்ளவை திருத்தம்.

ஓவியமு மாவிபெற வுள்ளாவி பெற்ற தென
லாமோ வியமாக வுலகிருப்பக்—காவில்

ஓவியமு மாவிபெற வுள்ளாவி பெற்றதென
லோவிய மாக வுலகிருப்பக்—காவில் —130

கூகள் மனங் கூர்சிறிய தாதையென வந்துதித்த
ளகல் லியாண மகராசன்—செங்கோன்மை

தங்கள் மனங் கூர்சிறிய தாதையென வந்துதித்த
மங்களகல் யாண மகராசன்—செங்கோன்மை —121

கோவத் தனகிரி தாங்குந் திருமால் பாரிமல்கு
மாவற் தனகிரி மடாதிபதி தேவர்—தொழும்

கோவத் தனகிரிதாங் குந்திருமால் பாரிலகு
மாவற் றனகிரிம டாதிபதி—தேவர் தொழும் —119

சிக்க முடித்துவளர் செவ்வியால் தாளத்துக்
கிசைந்து சாப்பாடு தூய்மையால்

சிக்க முடித்து வளர்செவ்வி யால்தாளத்
துக்கிசைந்து நாப்பாடு தூய்மையால் —132

சித்தஞா னத்தாற் றெரிசித்து—மொய்த்த
மதத்தால் வடவை யவித்து வயக்கடை
ககக் கால் வடவை விடுங்கைம்மா—ஞாலஞ்சூழ்

சித்தஞா னத்தாற் றெரிசித்து—மொய்த்தமதத்
தால வடவை யவித்து வயக்கடைக்கக்
கால வடவை விடுங் கைம்மா—ஞாலஞ்சூழ் —132

சீதளத்தால் வாசனையால் செய்ய சுவை யாலே
வாக்கு மோது முடலா யுயிர்க்குயிராய்

சீதளத்தால் வாசனையால் செய்யசுவை யாலெவர்க்கு
மோது முடலா யுயிர்க்குயிராய் —123

தாவுபடா மற்றெரிவோன் தனதநிதி இவன்பா
லேதான் பேற்றால்

தாவுபடா மற்றெரிவோன் தனதநிதி இவன்பாலே
தானம் பெற்றால் —134

தூண்டில் இடைப்பட் டுழல்மீன்துன் பம்மவை போல்
தூண்டிலிடைப் பட்டுழல்மீன் துன்பமெவை யோவவைபோல்
137

தேவார மேமுதலாய் செந்தமிள் தோறும்
கதையாய்ப் பாவாண ராராய்ந்து பாடலுற்றார்

தேவார மேமுதலாய் செந்தமிழ் தோறும் கதையாய்ப்
பாவாண ராராய்ந்து பாடலுற்றார். —124

நற்கீரனுன்னுடைய நாம மகிமையன்றோ
சொற்கீ சுரனுடன்வா துக்கெதிர்ந்தான்

நக்கீர னுன்னுடைய நாம மகிமையன்றோ
சொக்கீ சுரனுடன்வா துக்கெதிர்ந்தான் —126

நீதி வழுவாமல் நீடுழி காக்ர சூமது
தனனிராம சுவாமி யெனும்—நீதிமன்னர்

நீதி வழுவாமல் நீடுழி காக்குமது
சூதனனி ராம சுவாமி யெனும்—நீதி மன்னர் —120

நீருற்ற செய்க்கரும்பாய் நில்லாம லாங்கதையே
தூர்த்தெடுத்துச் சுமவாமல்—சார்கருப்பஞ்

நீருற்ற செய்க்கரும்பாய் நில்லாம லாங்கதையே
தூரத் தெடுத்துச் சுமவாமல்—சார்கருப்பஞ் —127

நற்குவியப்
பங்கய மனையில் மெய்த் திரு நீங்காதகயப்
பங்கய மனைய கையாள்—பயத்த

நற்கு
வியப்பங் கயமனையில் மெய்த்திருநீங் காத
கயப்பங் கயமனைய கையாள்—பயத்த —129

பரியம் பரிக்கவே வந்தருள்கு
ன் வெகுயோக பிறபலவான்—செரனென

[பாரம்] பரியம் பரிக்கவே வந்தருள்கு
[பேர]ன்வெகு யோக பிரபலவான்—சேரனென —122

பாத்தூர் செம் பொன்னுதவு பண்பால் மயிலையு
மாமாத்து ரெனவே மதி —'33

பாத்தூர் செம் பொன்னுதவு பண்பால் மயிலையுமா
மாத்து ரெனமே மதி

பேர்மகிமை யன்றோ பிரபஞ்சத்தார்க் காணையிட
வந்து நின்றது நீயலவோ—சாருலகில்

பேர்மகிமை யன்றோ பிரபஞ்சத் தார்க் காணையிட
நேர் வந்து நின்றது நீயலவோ—சாருலகில் —125

மண்டலங்க ளும்புயங்க மண்டலங்களுந் தியங்க விண்ட
லங்களுஞ் சுமந்து மென்றழும்பு—கொண்ட கொண்டல்

மண்டலங்க ளும்புயங்க மண்டலங்க ளுந்தியங்க
விண்டலங்க ளுஞ்சுமந்து மென்றழும்பு—கொண்டகொண்டல்-139

வாமாறு புகழ்படைத்தோ னாடிரூஞ்சல்
ரதிநாத பெருமானா ராடி ரூஞ்சல்

வாமாறு புகழ் படைத்தோ னாடி ரூஞ்ச
லாதிநா தப்பெருமானா ராடி ரூஞ்சல் —135

—நானமு

வாவா றடிகறங்க வூறுமத வாறா நி
வாவா றுடைய நெடுமால்

—நான

முவாவா றடிகறங்க வூறுமத மாறா
நிவாவா றுடைய நெடுமால் —131

VII பலவகை

அதனிற் றலைமை பெற்றோன் நம்மன்னரை	அதனிற்றலைமை பெற்றோன் அம்மன்னரை	143
என்றென்றே நம்பெருமான்	என்றென்றேம் நம்பெருமான்	145
என்னரசைத் தாங்கிடுவாய் ஏந்தலே யாமுமினி	என்னரசைத் தாங்கிடுவாய் ஏந்தலே யானுமினி	141
ஐந்தெனும் மானனன்	ஐந்தெனும் ஆனனன்	144
ஒப்பேதுனக்கு யொருபோதும் தாட்சியில்லை	ஒப்பேதுனக்கேயொருபோதும் தாட்சியில்லை	150
சித்திரமயிலேறி யெந்தன்	சித்திரமயிலேறி யென்றன்	139
செத்து அழிந்து சிவலோகம்	செத்தே அழிந்து சிவலோகம், செத்திங் கழிந்து சிவலோகம்	149
சொன்னமக ராச துரைசுப் பிரமணிய	சொன்ன மகராச துரைசுப் பிரமணிய	146
தாவில் விழுப்பொருளாந் தாந்தானே	தாவில் விழுப்பொருளாந் தான்றானே	138
துங்கன் ராச துரந்தரவேள்	துங்ககன ராச துரந்தரவேள்	148
தொடுத்த மதவேளும்—கரும்பினமே	தொடுத்தமத வேளும்—கரும்பினமே	147
நாற்றிசையோரும் புகழ நாநடத்தும்	நாற்றிசையோரும் புகழ நாம் நட த்தும்	142
யாகமது செய்வதற்கு யாந்தானே	யாகமது செய்வதற்கு யாந்தமே	140

நிறுவன வெளியீடுகள்

		ரூ.	பை
1.	தமிழர் ஆடைகள்	16	00
2.	தமிழர் கண்ட மனம்	9	00
3.	தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	16	00
4.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	10	00
5.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	14	00
6.	தமிழர் உணவு	12	00
7.	தமிழர் தோற்கருவிகள்	10	00
8.	கூவநூல்	7	00
9.	மனைநூல்	15	00
10.	பிரபந்தத்திரட்டு	16	00
11.	தந்திவனப் புராணம்	15	00
12.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழ்	7	50
13.	சின்னமகிபன் குளுவ நாடகம்	5	00
14.	பணவிடுதூது	6	00
15.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	10	00
16.	தொல்காப்பியம்—நூன்மரபு	9	00
17.	தொல்காப்பியம்—மொழிமரபு	9	00
18.	தொல்காப்பியம்—பிறப்பியல்	8	00
19.	தொல்காப்பியம்—புணரியல்	10	00
20.	தொல்காப்பியம்—மரபியல்	10	00
21.	தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி. 3	8	00
22.	தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி. 4	10	00
23.	தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி. 5	12	00
24.	தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி. 6	16	00
25.	தமிழில் விடுகதைகள்	12	00
26.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	12	00
27.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	6	00
28.	The Tamil Writers Directory	10	00
29.	Tamil Research through Journals	7	50
30.	Dr. Mu. Va	20	00
31.	Dissertations on Tamilology	10	00
32.	Tiru Murugan	5	00
33.	Epigraphical Evidences for Tamil Studies	10	00
34.	A study of Perunkathai	12	00
35.	Tami Drama	20	00
36.	Language & Grammar (Heritage of the Tamils)	22	00
37.	Cultural Heritage of the Tamils	20	00
38.	Literary Heritage of the Tamils	50	00
39.	Papers on Tamil Studies	15	00
40.	எண்பதில் தமிழ்	45	00

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை-600 113.